நேரே அந்தக் குடியானவனிடம் சென்றான். உண்மையைத் தெரிந்து கொள்ளும் ஆவலுடனும் உள்ளத்தில் பொங்கி வரும் உவகையுடனும், "நீ ஏன் இன்னும் தூங்கவில்லை? உன்னையும் இந்தப் பால் போன்ற வெண்ணிலவு பாடாய்ப் படுத்துகிறதா, என்ன?" என்று கேட்டான்.

"அதெல்லாம் ஒண்ணும் இல்லீங்க; தூக்கம் வரல்லீங்க!" என்றான் அவன் கொட்டாவி விட்டுக்கொண்டே.

"ஏன், உன்னுடைய மனைவியும் ஊருக்குப் போயிருக்கிறாளா?"

இதைக் கேட்டதும் அந்தக் குடியானவன் ஒரு கணம் பிரமித்து நின்றான்; மறுகணம் விழுந்து விழுந்து சிரித்தான்.

"ஏன் சிரிக்கிறாய்? உன்னுடைய மனைவி ஊருக்குப் போன விஷயம் எனக்கு எப்படித் தெரிந்தது என்று எண்ணித்தானே சிரிக்கிறாய்? — இதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது? எங்கேயாவது பாம்பின் கால் பாம்புக்குத் தெரியாமற் போய்விடுமா?" என்றான் ராதாமணாளனும் சிரித்துக் கொண்டே.

அவனுடைய சிரிப்பைப் பொருட்படுத்தாமல் குடியானவன் 'சட்'டென்று தன் குடிசைக்குள் நுழைந்தான்; கையில் ஒரு காலிப் பானையுடன் 'விடுவிடு' வென்று வெளியே வந்தான்.

"என்ன இது!" என்று திடுக்கிட்டுக் கேட்டான் ராதாமணாளன்.

"இந்தப் பானையிலே சோறு இருந்திருந்தா எந்த நெலவு என்னை என்ன பண்ணுங்க? இந்நேரம் நல்லா தூங்கிப் போயிருக்க மாட்டேனுங்களா?" என்றான் குடியானவன் தன் அடி வயிற்றைத் தடவிக்கொண்டே. —விந்தன்

காலக்ஷேபம்

எப்படி?

முத்து:—அப்பா, எத்தனை நாழிகையாகக் கேட்கிறேன்? ஒரு காலணா கொடுங்கள்!

அப்பா:—என்னடா இது? பிச்சைக்காரனைப்போல் 'காலணா' 'காலணா' என்று கேட்டுக் கொண்டிருக்கிறாயே?

முத்து:—அப்படியானால் இரண்டணாவாகக் கொடுங்கள், அப்பா!

○

பேஷ்!

இன்ஸ்பெக்டர் (காவல் நின்ற கான்ஸ்டேபிளைக் கூப்பிட்டு):—மூந்நூற்றி எட்டு! சீக்கிரம் போய்ச் சேட்டடத் தெரிந்த யாரையாவது 'சார்ஜ்' பண்ணிக் கொண்டு வா! ஒரு கை குறைகிறது!

○

நல்ல பேரம்

பையன்:—தேங்காய் என்ன விலை?

கடைக்காரன்:—நல்ல தேங்காய் மூன்றணா; உடைந்த தேங்காய் இரண்டணா.

பையன்:—அப்படியானால் எனக்குப் பன்னிரண்டு தேங்காய்கள் உடைத்துக் கொடுத்தால் போதுங்க!

ஒன்றுமில்லை!

வகுப்பு நடந்து கொண்டிருந்தது. கணபதி தன் தலையில் கைக் குட்டையைக் கட்டிக்கொண்டு, கையால் தலையைப் பிடித்துக்கொண்டிருந்தான்.

உபாத்தியாயர் (பாடத்தை நிறுத்திவிட்டு):—உன் தலையில் என்னடா?

கணபதி:—ஒன்றுமில்லை, ஸார்!


இதைக் கேட்டதும் மற்றப் பையன்களெல்லாம் ஏன் சிரித்தனர் என்று கணபதிக்கு விளங்கவில்லை.

○

தூக்கமா?

உபந்நியாசகர்:—என்ன ஸார், உங்கள் அண்ணா நேற்று ராமாயணம் கேட்க வந்திருந்தார்; ரொம்ப சந்தோஷமாயிருந்தது. ஆனால் பாதியில் எழுந்து விட்டார். அதுதான் இன்னும் மனசுக்கு ரொம்பக் கஷ்டமாயிருக்கிறது!

நண்பர்:—இல்லை, இல்லை. நீங்கள் என் அண்ணாவைப் பற்றித் தப்பாக நினைத்துவிட்டீர்கள். பாதிக் கதையில் அவர் என்ன இருந்தாலும் எழுந்து போகவே மாட்டார். அவருக்குத் தூக்கத்தில் நடக்கும் வியாதி உண்டு!



வித்தியாசம்

ஊருக்கு நடுவே ஓர் அழகான பங்களா. அந்தப் பங்களாவில் சமையற்காரனையும் தோட்டக்காரனையும் தவிர வேறு யாரும் இல்லை. பங்களாவுக்குச் சொந்தக்காரனான ராதாரமணனன் மாடி முகப்பில் அப்படியும் இப்படியுமாக உலாவிக் கொண்டிருந்தான். அவனுடைய மனைவி பிறந்தகம் போயிருந்தாள்.

அன்று பௌர்ணமி; வெண்ணிலவு தண்ணொளியை வீசிக் கொண்டிருந்தது.

"ஆஹா! அவள் மட்டும் இன்று நம் பக்கத்தில் இருந்திருந்தால்...? இந்த வெண்ணிலவு இப்படி வீணாய்ப் போகுமா......?"

ராதாரமணனனின் சிந்தனை சுழன்றது. 'கலகல' வென்ற சிரிப்பின் ஒலியும், 'கிணுகிணு' வென்ற வளையலின் ஒலியும் எங்கிருந்தோ வந்து அவன் காதில் விழுந்தன. சுற்றுமுற்றும் பார்த்தான்; யாரையும் காணவில்லை. எல்லாம் வெறும் கற்பனை!

"அவள் இருந்திருந்தால் இந்நேரம் பழமும் கையுமாக வந்து நின்றிருப்பாள்; பிறகு, பாலும் கையுமாக வந்து நின்றிருப்பாள்; அப்புறம், வெற்றிலைத் தட்டும் கையுமாக வந்து நின்றிருப்பாள்......

"......அவளை நான் அருகில் உட்கார வைத்துக் கொண்டிருப்பேன்; பேச்சு சுவாரஸ்யமாக ஆரம்பமாகியிருக்கும்......

"......அதற்குள் அவளுடைய கன்னங் கரேலென்ற கூந்தலை அலங்கரித்துக் கொண்டிருக்கும் வெள்ளை வெளேரென்ற மல்லிகைப் பூவின் மணம் காற்றோடு கலந்து வந்து என் மூக்கைத் துளைத்திருக்கும்; கைகள் ஒன்றையொன்று வருடியிருக்கும். அவ்வளவுதான்; பேச்சு நின்றே போயிருக்கும்......



"இருவரும் ஒருவரையொருவர் விழுங்கி விடுவது போல் ஒரு கணம் பார்த்திருப்போம்.........பிறகு, பிறகு, பிறகு......பேசாமல் இறங்கிக் கீழே போயிருப்போம்......!"

இந்த இடத்தில் ஏனோ தெரியவில்லை; ராதாரமணன் தனக்குத் தானே சிரித்துக் கொண்டான். மீண்டும் அவனுடைய சிந்தனை சுழன்றது.

"சீ! இதெல்லாம் என்ன நினைப்பு? நமக்கு ஏதாவது மூளைக் கோளாறு, என்ன?"

"இல்லை, இல்லை; எல்லாம் இந்த வெண்ணிலவின் கோளாறுதான்!"

இந்தத் தீர்மானத்துக்கு வந்ததும் ராதாரமணனன் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டான். பிறகு, மறுபடியும் உலாவ ஆரம்பித்தான். அன்றிரவு அவனுக்குத் தூக்கமே வரவில்லை.

ராதாரமணனனின் பங்களாவுக்குச் சற்றுத் தூரத்தில் ஒரு குடியானவன் பழைய கயிற்றுக் கட்டில் ஒன்றில் உட்கார்ந்து, விரிந்து பரந்து கிடந்த நீலவானை இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான். அவனைப் பார்த்ததும் ராதாரமணனனுக்குச் சிரிப்பு பொத்துக்கொண்டு வந்தது.



"பாவம், ஏழைக் குடியானவனான அவனுக்கும் இன்றிரவு தூக்கம் பிடிக்கவில்லைபோலும்! இந்தப் பாழும் வெண்ணிலவு யாரைத்தான் சும்மா விடுகிறது......?

"......நம் மனைவிதான் ஊருக்குப் போயிருக்கிறாள்; அவன் மனைவியும் ஊருக்குப் போயிருக்கிறாளோ......?

"......ஆமாம், அவனுக்கும் நமக்கும் வேறு எத்தனையோ விஷயங்களில் வித்தியாசம் இருக்கலாம். ஆனால் இந்த ஒரு விஷயத்தில் மட்டும் ஈ, எறும்பு முதல் எண்ணாயிரம் ஜீவராசிகளும் ஒன்று!"

இப்படி நினைத்தானோ இல்லையோ, ராதாரமணனன் 'தடதட' வென்று மாடியை விட்டுக் கீழே இறங்கினான்.

"அப்படியானால் நீ இதை அம்மாவிடம் சொல்ல வேண்டாம். நான் உன் வேஷத்தைப் போட்டுக் கொள்கிறேன். ஆனால் நான் வேஷம் போட்டுக் கொள்ளும்போது 'மேக்-அப்' ஆசாமிக்குத் தெரியாமல் இருக்குமா?" என்றேன்.

"அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம். அவன் என் சிநேகிதன்தான். அவனைத் தனியாக ஒரு அறைக்கு வந்து 'மேக்-அப்' செய்துவிடச் சொல்கிறேன். காதும் காதும் வைத்தாற்போல் எல்லாம் நடக்கும் என்ன சொல்லுகிறீர்கள்?"

"சரி, அப்படியானால் இன்றிரவு நான் வெளியூர் போவதாக ரமாவிடம் சொல்லி விடுகிறேன். ஆனால் 'மேக்-அப்'பைக் கலைக்கும்போது ரமா அப்படியே திடுக்கிட்டுப் போவாள்!' என்று சொல்லி, நான் சிரித்தேன்.

ஆகவே, அன்று நான் நரசிம்மாவதார வேஷம் போட்டுக் கொண்டது எங்கள் மூன்று பேரையும் தவிர வேறு யாருக்கும் தெரியாது. நானும் வழக்கமாக வேஷம் தரிக்கும் முருகுவும் ஒரே உயரம், ஒரே பருமன், ஒரே தோற்றம் உள்ளவர்கள். இதனால் முருகுதான் அன்றும் நடிக்கிறான் என்றே எல்லோரும் நம்பி விட்டார்கள்.

வழக்கம்போல் அன்றும் 'படார்' என்று வெடிச் சத்தம் கேட்டது. தூண் பிளந்தது. நரசிம்மமூர்த்தி வெளியே வந்து சிரித்தார். அடுத்தபடியாக ஹிரண்யனைத் தூக்கி சம்ஹாரிக்கும் காட்சி, பிரகலாதன் பாட்டு, கரகோஷம் எல்லாம் வரிசைக் கிரமப்படி நடந்தது. என்ன வித்தியாசம் என்றால், இந்தக் காட்சியைப் பார்ப்பதற்குப் பதில் நானே அன்று அதில் கலந்து கொண்டேன். இவ்வளவு வெற்றிகரமாக என்னால் நடிக்க முடியும் என்பது எனக்கே ஆச்சரியமாக இருந்தது.

அன்று தன்னைத் தனியே நான் 'மேக்-அப்' அறையில் உட்கார்ந்து கொண்டிருந்தபோது, அதற்குள் பிரகலாத வேஷத்தைக் கலைத்து விட்டு எப்பொழுதும் போல் தன்னை அலங்கரித்துக் கொண்ட ரமா என் நாற்காலி விளிம்பில் வந்து உட்கார்ந்து கொண்டாள். என் மேலிருந்த பட்டு அங்கியை எடுத்து விட்டு அவள் என்னை ஸ்பர்சித்தாள். அப்பொழுது தான் முதன் முதலாக அவள் ஸ்பர்சம் ஏற்பட்டது. என் மெய் சிலிர்த்தது. அந்த இன்பக் கிளர்ச்சி ஒரு நொடியில் மறைந்தது. அவள் என்னைப் பார்த்து, 'முருகு! இன்னும் உனக்கு என்மேலுள்ள கோபம் தணியவில்லையா? குஞ்சிதபாதத்தை நான் எதற்காகக் கட்டிக்கொண்டு அழுகிறேன் என்று எவ்வளவு தடவை சொன்னாலும் நீ நம்பவில்லை. பாழும் பணத்துக்காகத்தான் அவனிடம் உறவாடுகிறேன் என்பது உனக்கு ஏன் தெரியவில்லை? இன்னும் சில நாட்களில் ஒரு லட்ச ரூபாய் அவனிடமிருந்து கறந்து விடுவேன். பிறகு, நாம் இருவரும் சேர்ந்து நடிக்கும் சினிமாப் படம் எடுக்கலாம். நமது ஆசை நிறைவேறக் கூடிய நாள் வெகு தூரத்தில் இல்லை. முருகு! நீ ஏன் இன்னும் 'மேக்-அப்'பைக் கலைக்க மாட்டேன் என்கிறாய்?" என்றாள்.

எனக்கு வந்த ஆத்திரத்தில் சட்டென்று எழுந்தேன். சிம்ம முகமூடியை எடுத்துத் தூர வீசி எறிந்தேன். என்னைக் கண்டதும் 'ஆ!' என்று அலறி மூர்ச்சையானாள் அவள்......தம்பி, நான் போட்டுக் கொண்ட வேஷம் எப்படி?

இவ்விதம் குஞ்சிதபாதம் கூறியதும் "ஆமாம், அதற்குப் பிறகு என்ன நடந்தது?" என்று விசாரித்தேன்.

"அதற்குப் பிறகு அவள் முகத்தில் விழிப்பேனா? நாடகம் என்றாலே கசந்து விட்டது."

"அந்த ரமாவின் கதி?"

"அந்த அதிர்ச்சியிலிருந்து அவள் தேறுவதற்கு ஒரு மாதம் ஆயிற்று. அப்புறம் தஞ்சாவூரை விட்டே அவள் கிளம்பிவிட்டாள். அவள் என்ன கதி ஆனால் எனக்கென்ன? விட்டுத் தள்ளு, தம்பி!" என்றார் குஞ்சிதபாதம்.

"நடிகன் முருகு கடைசியில் உங்களுக்குப் பெரிய உபகாரம்தான் செய்திருக்கிறான்."

"ஆமாம், அந்தச் சம்பவம் நடந்த மறுநாள் அவன் என் வீட்டுக்கு வந்தான். ரமாவின் உண்மையான எண்ணம் எனக்குத் தெரிய வேண்டும் என்பதற்காகவே என்னை அவன் நரசிம்ம வேஷம் போட்டுக் கொள்ளச் சொன்னானாம். அதில் ஒரு சுயநலமும் இல்லாமல் இல்லை. அது என்னவென்றால், சினிமா சமாசாரமே அவனுக்குப் பிடிக்கவில்லை. சினிமா என்று ஆரம்பித்துவிட்டால், கட்டாயம் ரமா தன் கையை விட்டுப் போய்விடுவாள் என்று அவனுக்குப் பயம். அதற்காகவேதான் அப்படிச் செய்தானாம். அவன் சொன்னதில் எவ்வளவு நிஜமோ?" என்று கூறிவிட்டு எழுந்திருந்தார் குஞ்சிதபாதம்.

"இவர் சொல்வதில் எவ்வளவு நிஜமோ?" என்று நினைத்துக் கொண்டு நானும் எழுந்திருந்தேன்.

இப்படியே நான் இன்பக் கனவில் நாட்களைக் கழித்தேன். ஒரு நாள் நான் ஏதோ கணக்குகளைப் புரட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்தபோது ஒரு நடிகன் என்னிடம் வந்து, "ஸார், இன்று இரவு மட்டும் தயவு செய்து எனக்கு லீவ் கொடுக்க வேண்டும்" என்றான். "ஏன்?" என்று அதிகாரத்துடன் கேட்டேன். "என் மனைவிக்கு உடம்பு சுகமில்லை. அம்மாளைக் கேட்டால் உங்களைக் கேட்டுக் கொள்ளச் சொல்கிறார்கள்" என்றான் பரிதாபமாக. "நீ என்ன வேஷம் போட்டுக் கொள்கிறாய்?" என்று விசாரித்தேன்.

"இந்தப் பிரகலாதா நாடகத்தில் நான் நரசிம்மாவதாரம் போட்டுக் கொள்கிறேன். நந்தனாரில் வேதியராகவும், வள்ளிக் கல்யாணத்தில் வேடர் தலைவனாகவும் நடிக்கிற வழக்கம்" என்றான். சட்டென்று எனக்கு ஞாபகம் வந்து விட்டது. அந்த இளம் நடிகன் சில்லறை வேஷங்களில் நடித்தபோதிலும் ரொம்ப நன்றாகப் பாடுவான். ஆகவே, "உனக்கு லீவ் கொடுத்துவிட்டால் உன் பாகத்தை யார் நடிப்பார்கள், அப்பா? முதலாவது ஹிரண்யனை ஒரு தூக்காய்த் தூக்கி மடியில் போட்டுக் கொள்ளக்கூடிய பலம் உள்ளவர்கள் உன்னைத் தவிர இந்தக் கம்பெனியில் வேறு யாரும் இல்லையே! மேலும் இது கஷ்டமான ஸீன். தூண் வெடிக்கவேண்டும்; கோபச் சிரிப்புச் சிரிக்க வேண்டும். இதற்கெல்லாம் யாரைத் தேடுவது? உனக்கு லீவு கொடுக்க முடியாது, போ!" என்றேன்.

"இது கஷ்டமான ஸீன்தான். இல்லை என்று சொல்லவில்லை. என்னைத் தவிர இந்த ஸீனை யாரும் நடிக்க முடியாது என்றே இதுநாளும் மனப்பால் குடித்து வந்தேன். ஆனால் சில நாட்களாக என் எண்ணத்தை மாற்றிக் கொள்ள வேண்டியிருந்தது. அந்தப் பாகத்தை என்னைப் போல் அற்புதமாக நடிக்கக் கூடிய ஒருவர் இருக்கத்தான் இருக்கிறார் என்று தெரிந்து கொண்டேன். அப்படி ஒருவர் இருக்கக் கொண்டுதான் இன்று தைரியமாக வந்து லீவ் கேட்கத் தோன்றியது. நான் லீவ் எடுத்துக் கொண்டால்கூட அந்தப் பாகத்தை அவரால் கொஞ்சமும் சிரமம் இல்லாமல் நடிக்க முடியும்."

"யார் அவர்?"

"ஏன்? நீங்களேதான்! ஒத்திகையின் போது நீங்கள் நரசிம்மாவதாரம் எப்படிச் சிரிக்க வேண்டுமென்று காட்டினீர்கள். அப்பொழுதே உங்கள் நடிப்புத் திறமையைக் கண்டு நான் திடுக்கிட்டுப் போனேன். என்னைப் போலவே உங்களுக்கும் கட்டுமஸ்தான தேகம். வெகு சுலபமாக ஹிரண்யனை உங்களால் தூக்க முடியும். நாடகத்தின் ஒவ்வொரு காட்சியும், சம்பாஷணையில் ஒவ்வொரு வரியும் உங்களுக்கு மனப்பாடம். ஆகவே தயவு செய்து இன்றிரவுமட்டும் வேஷம் தரித்து என் மனைவிக்கு உயிர்ப்பிச்சை கொடுக்க வேண்டும்" என்று அவன் கெஞ்சினான்.

"ஸார்! உங்களுக்கு நடிப்புத் திறமை இருக்கிறது என்பது அம்மாவுக்குத் தெரியாது. நீங்கள் என் வேஷத்தைப் போட்டுக் கொண்டு பிரமாதமாக நடியுங்கள். இன்றிரவு எனக்குப் பதிலாக நடித்தது நீங்கள் தான் என்று தெரிந்து கொண்டதும், அம்மாள் எவ்வளவு ஆச்சரியமும் சந்தோஷமும் அடைவார்கள், தெரியுமா? உங்களுக்குத் தெரியாது!" என்றான் அவன் உற்சாகத்துடன்.

எனக்கும் அவன் சொன்ன யோசனை சரி என்று தோன்றியது. ஆகையினால்,

நல்ல யோசனை!



மனைவி:—ஆபிஸிலே 'இங்கிரிமெண்ட்' கொடுக்கிற அன்றைக்கு இப்படிப் பிரமாதமாக டிரஸ் பண்ணிக் கொண்டு போனால், 'இங்கிரிமெண்ட்' அதிகமாகக் கொடுக்க மாட்டார்கள், தெரியுமா?

கணவன்:—அடி அசடே! இது மாதிரி பிரமாதமாக 'டிரஸ்' செய்து கொண்டு போனால்தான் இவனுக்குக் கொடுக்கிற சம்பளம் 'டிரஸ்'ஸுக்கே போதாதென்று அதிகமாக 'இங்கிரிமெண்ட்' கொடுப்பார்கள்!

நானும் ஒருவன். எனக்கு அப்பொழுது இருபத்தைந்து வயதிருக்கும். ஆள் 'ஷோக்'காகத்தானிருந்தேன். ஒரு நாள் ரமாமணியின் கண்கள் என்னையே நோக்குவதைப் பார்த்துத் திகைத்துப் போனேன். நான் ஒவ்வொரு நாளும் நாடகத்துக்கு வருவதைப் பார்த்து அவள் ஆச்சரியம் அடைந்தாளா? அல்லது என் வைரக் கடுக்கன்களையும், பட்டுச் சட்டையையும் பார்த்து விட்டு என்னைப் பற்றி ஏற்கெனவே விசாரித்து, நான் பெரிய புள்ளி என்பதைத் தெரிந்து கொண்டு விட்டாளா? அல்லது......

எனக்கு ஏற்பட்ட பரபரப்பும் ஆவலும் இவ்வளவு அவ்வளவு அல்ல.

ரமாமணியின் சொந்த வாழ்க்கை மிகவும் மர்மமாயிருந்தது. அந்த நாடகக் கம்பெனியை அவள் தகப்பனார் ஆரம்பித்து வெற்றிகரமாக நடத்தி வந்தார். சில வருஷங்களுக்கு முன் அவர் எதிர்பாராத விதமாகக் காலகதியடையவே, கம்பெனியை நடத்தும் பொறுப்பு சின்னஞ் சிறு பெண்ணான ரமாமணியின் பேரில் விழுந்தது. ரமாமணியின் நடிப்புத் திறமையைப் பொது மக்கள் புகழ்ந்தது போலவே, அவளது நிர்வாகத் திறமையையும், அபார சாமர்த்தியத்தையும் கண்டிப்பையும் நாடகச் சிப்பந்திகள் புகழ ஆரம்பித்தனர். இவையெல்லாம் எல்லோருக்கும் தெரிந்த விஷயம். ஆனால், அவள் கல்யாணம் செய்து கொள்ள உத்தேசித்திருக்கிறாளா? அல்லது கன்னிப் பெண்ணாகவே, நாடக நடிகையாகவே வாழ்நாளைக் கழிக்கப் போகிறாளா என்பது போன்ற விஷயங்கள் அதிக மர்மமாகவே இருந்து வந்தன. நாடக நடிகர்களைப் பற்றி எனக்கு எப்பொழுதுமே உயர்ந்த அபிப்பிராயமில்லாவிட்டாலும்கூட ரமாமணி என்ற பெயரைச் சொல்லும் போதெல்லாம் எனக்கு ஒருவித மதிப்பு ஏற்படாமலில்லை.

சில நாட்களுக்கெல்லாம் அவளது நாடகக் கம்பெனி தஞ்சைக்கு வந்த நூறாவது தின விழாவைப் பிரமாதமாகக் கொண்டாடிற்று. அன்றைய தினம் எனக்கும் ஒரு அழைப்பு வந்தது. அந்த விழாவில் ரமாமணியைப் பாராட்டிப் பேசியவர்களுள் நானும் ஒருவன்.

அடுத்தாற்போல் 'நாடக ரஸிகர்கள் சங்கம்' என்று ஒரு சங்கத்தை நான் ஆரம்பித்தேன். அதன் சார்பில் என் சிநேகிதர்கள் எல்லோரையும் கூப்பிட்டு, ஒரு கூட்டம் கூட்டி, ரமாமணிக்கு மாலை சூட்டி உபசாரப் பத்திரம் வாசித்துக் கொடுத்தேன். இதற்குப் பிறகு அவள் அடிக்கடி எங்கள் வீட்டுக்கு வர ஆரம்பித்தாள். என் சம்சாரம் ஆரம்பத்தில் அவள் வருவதை ஆட்சேபித்தாள். வாக்கு வாதம் முற்றியது. மனக் கசப்பு வளர்ந்து வந்தபோதிலும் ரமாமணி வீட்டுக்கு வருவதோ நான் அவள் தங்கியிருந்த இடத்துக்குப் போவதோ நிற்கவில்லை.

இந்த ஊரில் அந்தச் சமயத்தில் கடைத் தெரு, வீடு வாசல் எங்கும் என்னையும் ரமாவையும் பற்றிய பேச்சுத்தான். என் பணத்தைக் கபளீகரம் செய்யவே, அந்த நடி என்னைச் சுற்றி வருவதாக ஊரில் சகலரும் பேசிக் கொண்டனர். இந்த உலகமே பொறாமையில் மூழ்கிய உலகம். யாராவது கொஞ்சம் சந்தோஷமாக இருந்து விட்டால் அதற்குப் பொறுக்காது. சந்தோஷமாயிருப்பவர்கள் துக்கத்தில் மாண்டு போகிறவரையில் அது ஏதாவது கரித்துக்கொண்டே இருக்கும்; ஒரு நிமிஷமும் சும்மா இருக்காது.

யார் என்ன சொன்னால் என்ன? நான் ரமாவிடம் உயிரையே வைத்திருந்தேன் என்றால் மிகையாகாது. தகப்பனார் இறந்த பிறகு, தன் விவகாரங்களைக் கவனித்துக் கொள்ளக் கூடிய ஆளே இல்லையென்றும், அவ்வாறு கவனித்துக் கொள்ளும் திறமையும் ரஸிகத்தன்மையும் உள்ளன்பும் உள்ள ஒரு கணவர் தனக்குக் கிடைக்கவேண்டுமென்றுதான் வெகு நாளாகக் காத்துக்கொண்டிருப்பதாகவும் ஜாடை மாடையாக என்னிடம் தெரிவித்தாள் ரமா. எனக்கு ஏற்பட்ட சந்தோஷத்தில் அவளை ஒரு நாள் குபேரச் செட்டியாரின் நகைக் கடைக்கு அழைத்துக் கொண்டு போய் அவளுக்குப் பிரியமான ஏதாவது ஒரு வைர நகையை எடுத்துக் கொள்ளும்படி கூறினேன். அவள் எடுத்துக் கொண்ட வைர அட்டிகை பதினையாயிரம் ஆனதற்காகக் கொஞ்சமும் நான் கவலைப்படவில்லை.

கம்பெனி நிர்வாக விஷயங்களில் கூட ரமா என்னைக் கலந்து கொள்வாள். என் பொழுதில் பெரும் பகுதியை நான் நாடகக் கொட்டகையிலோ, அவள் வீட்டிலோ கழிப்பேன். நாடகச் சிப்பந்திகள் கூட என்னிடம் பயபக்தியுடன் நடந்து கொண்டனர். 'மேக்-அப்' அறைக்குச் சென்று மேற்பார்வை செய்வேன். வாத்திய கோஷ்டியிடம் என் சங்கீத ஞானத்தைக் காட்டுவேன். நாடகம் நடக்கையில் ஸ்டேஜ் டைரக்ஷனில் தலையிடுவேன். நிகழ்ச்சியில் மாறுதலா, புதுப் பாட்டுக்கள் சேர்க்க வேண்டுமா, நடிகர்களுக்கு லீவ் வேண்டுமா?—எல்லாவற்றுக்கும் என்னைக் கேட்டுக்கொள்ள வேண்டும் என்று உத்தரவு போட்டிருந்தாள் ரமா. ஆனால், எங்கள் கல்யாணம் மட்டும் நடைபெறாமலே இருந்தது.

ரமாவின் ஆசை

வி.எஸ்.ஆர்

கோடை விடுமுறை விட்டதும் நான் தஞ்சைக்குப் போய்ச் சேர்ந்தேன். என் தமையன் அங்கே ஒரு சர்க்கார் உத்தியோகஸ்தர். இதற்கு முன் நான் தஞ்சைக்குப் போனதில்லையாகையால் ஊர் சுற்றிப் பார்க்கக் கிளம்பினேன். நான் புறப்பட்டுக் கொண்டிருந்தபோது எதிர் வீட்டிலிருந்து ஒரு கனவான் எங்கள் வீட்டை நோக்கி வந்தார். விசாரித்ததில், அவர் அவ்வூரில் பிரபல பிரசகதாரரான குஞ்சிதபாதம் பிள்ளை என்றும் என் தமையனுக்கு ரொம்பவும் வேண்டியவர் என்றும் தெரியவந்தது. நான் இன்டர்மீடியட் படித்துக் கொண்டிருப்பதையும், லீவில் வந்திருப்பதையும் அவர் ஏற்கெனவே அண்ணா மூலமாகத் தெரிந்து கொண்டிருந்தார். அன்றுதான் எங்கள் முதல் சந்திப்பு நிகழ்ந்தது.

அதற்குப் பிறகு, அவர் அடிக்கடி காலையிலும் மாலையிலும் எங்கள் வீட்டுக்கு வந்து என்னுடன் அரட்டையடித்துக் கொண்டிருப்பார். அவருக்குச் சுமார் ஐம்பது அல்லது ஐம்பத்தைந்து வயதிருக்கும். பேசுகிற தோரணையைப் பார்த்தால் உலக அரசியலில் அவருக்குத் தெரிந்தது ட்ருமனுக்கோ அல்லது மாலடோவுக்கோ தெரிந்திராது என்று தோன்றியது. தம் சொந்தப் பிரதாபங்களையும் பால்ய வயதில் தாம் செய்த அபார சூரத்தனங்களையும் சொல்வதில் அவருக்கு அபார ஆசை இருந்தது. ஆனால் எனக்கு அவற்றைக் கேட்க ஆசையில்லை என்பதுடன், அதை அவரிடம் சொல்லவும் தைரியம் இல்லை.

ஒருநாள் மாலை குஞ்சிதபாதம் எங்கள் வீட்டை நோக்கி வந்து கொண்டிருப்பதைப் பார்த்ததும் எனக்குத் திகில் பிடித்துவிட்டது. சட்டென்று சட்டையை எடுத்துப் போட்டுக் கொண்டு வெளியே போனேன்.

"எங்கே தம்பி, கிளம்பிட்டே?" என்றார் குஞ்சிதபாதம். நாங்கள் இருவரும் வாசற்படியில் சந்தித்துக் கொண்டோம்.

"இன்றைக்கு நாடகம் பார்க்கப் போகிறேன், ஸார்! முனிஸிபல் தியேட்டரில் 'சாந்தி' என்ற நாடகம் நடக்கிறது" என்று கூறிவிட்டு அவசரமாக மேலே நடக்க முயற்சித்தேன்.

"இரு தம்பி! நானும் சட்டையைப் போட்டுக் கொண்டு வந்துவிடுகிறேன்!" என்று சொல்லிவிட்டுப் பரபரப்புடன் வீட்டுக்கு ஓடினார். நான் என்ன செய்வது? எங்கேயாவது ஓடி ஒளிந்து கொள்ளலாமா என்று நினைப்பதற்குள் அவர் எதிர்ப்பட்டார். சட்டையைப் போட்டுக் கொள்ளும் அவசரத்தில் சட்டையின் கைக்குள் தலையை விட்டுக் கொண்டு அவர் எடுக்க முடியாமல் தெருவில் திண்டாடினார். அந்தப் பிரம்மாண்டமான சரீரம் பட்ட அவஸ்தையைப் பார்த்து நான் எனக்குள் சிரித்துக் கொண்டேன்.

ஒரு வழியாகச் சட்டையைப் போட்டுக் கொண்டு, சரிகை அங்கவஸ்திரத்தை மேலே ஆடம்பரமாக அணிந்து கொண்டார் அவர்.

"தம்பி! இப்பொழுது பத்துப் பதினைந்து வருஷமாகத்தான் நான் நாடகங்களுக்குப் போகிறதில்லை. முந்தியெல்லாம் நான் பார்க்காத நாடகமே கிடையாது. ஒவ்வொரு நாடகத்துக்கும் முதல் வரிசை ஸீட் முழுவதும் எனக்கும் என் நண்பர்களுக்கும் ரிஸர்வ் செய்து விடுவேன். ஒரே நாடகத்தை நாலைந்து தடவை கூடப் பார்ப்பேன். இந்தச் சுற்று வட்டாரத்தில் எங்கே டிராமா நடந்தாலும் நான் போகாமல் இருந்ததில்லை. என்னுடைய நாடகப் பைத்தியம் அப்படி இருந்தது. நானே ஒரு சமயம் ஒரு நாடகத்திலே 'ஆக்ட்' பண்ணியிருக்கிறேன் என்றால் பார்த்துக்கொள்ளேன்!"

குஞ்சிதபாதம் அளக்கும் அளப்புகளில் இதுவும் ஒன்று என்று நினைத்துப் பேசாமல் இருந்துவிட்டேன்.

நாடகக் கொட்டகையை அடைந்ததும் எனக்கு நிம்மதி ஏற்பட்டது. இன்னும் மூன்று மணி நேரத்திற்காவது நண்பரின் தொணதொணப்பிலிருந்து தப்பலாம் அல்லவா? ஆனால், அன்று நாடகக் கொட்டகைக்கு விடுமுறை என்று அறிந்ததும் எனக்கு எப்படி இருக்கும்? என்ன செய்வது என்று தெரியாமல் விழித்துக் கொண்டு நின்றேன். "வா, தம்பி! அதோ, அந்தப் பார்க்கில் சற்று நேரம் உட்கார்ந்திருந்துவிட்டு வீட்டுக்குப் போகலாம்" என்று கூறிவிட்டு என் பதி

லுக்குக் காத்திராமல் குஞ்சிதபாதம் பின்னை என் கையைப் பிடித்துக் கரகர வென்று இழுத்துக் கொண்டு போனார்.

அங்கே ஒரு மேடை மேல் நாங்கள் உட்கார்ந்து கொண்டதும், "தம்பி, நான் நாடகத்தில் நடித்திருக்கிறேன் என்று சொன்னதை நீ நம்பவில்லை யல்லவா?" என்று கேட்டார் அவர்.

"ஏன், பேஷாக நம்புகிறேன்!" என்றேன்.

"எப்பொழுது நடித்தேன் என்று கேட்கிறாயா?"

"இல்லை, நான் கேட்கவில்லை!" என்றேன்.

"கேட்பதில் தப்பு ஒன்றும் இல்லை. அது ரொம்ப சுவாரஸ்யமான கதை; சொல்லுகிறேன் கேள்!" என்று அவர் ஆரம்பித்தார்.


• • •

ராஜா பார்ட் ரமாமணி பாயைப் பற்றி நீ கேள்விப்பட்டிருக்க மாட்டாய். ஏனென்றால் இந்தச் சம்பவம் சுமார் இருபது வருஷங்களுக்கு முன்னால் நடந்தது. அந்தக் காலத்தில் ரமாமணி பாய் என்றால் நாடக ரஸிகர்களின் கண்கள் பிரகாசமடையும். "ஆஹா, ரமாமணி ராஜபார்ட் போட்டுக் கொள்ளணும், பார்க்கணும். ஆண் பிள்ளை ராஜபார்ட் கெட்டான், போங்கள்!" என்று சொல்லிக் கொள்வார்கள். வள்ளிக் கல்யாணத்தில் ரமாமணி வேலன், வேடன், விருத்தனாகி வருவாள். நந்தனாரில் நந்தனாராகக் காட்சியளிப்பாள். ஒவ்வொரு ஊரிலும் பொதுஜன வேண்டுகோளுக் கிணங்க மாதக் கணக்கில் நாடகங்கள் நடிக்கப்பட்டன. ரமாமணி மேடையில் தோன்றும் ஒவ்வொரு காட்சியின் முடிவிலும் 'ஒன்ஸ்மோர்' கேட்ட வண்ணம் இருப்பார்கள்.

நாகப்பட்டணம், திருவாரூர் முதலிய இடங்களில் திக்விஜயம் செய்து ரமாமணியின் நாடகக் கோஷ்டி தஞ்சைக்கு வந்தது. ஜில் சதாரம், குலேபகாவலி, ஞானசௌந்தரி, பாமா பரிணயம் முதலிய நாடகங்கள் ஒவ்வொன்றாக நடந்தன. டிக்கெட் கிடைக்காமல் ஒவ்வொரு நாளும் திரும்பிச் சென்ற ஜனங்கள் கொஞ்சமா, நஞ்சமா?

அன்று முதல் வரிசை சீட்டில் உட்கார்ந்து மெய் மறந்திருந்தவர்களில்





ஒருதரம் தொட்டுப் பார்த்தான். அப்பா, அம்மா, பாட்டி எல்லோரையும் மாறி மாறிப் பார்த்தான். ஆசை தீரத் தாயார் மடியில் சற்று விழுந்து புரண்டு, "என்னை ஏன் விட்டு விட்டுப் போனாய்?" என்று கேட்டு, 'வவ்வவ்' காட்டலாம் என்று பார்த்தால் அந்தப் பயல் 'வீல்' என்பான் போலிருக்கிறதே!' — பூமா தயங்கினான்.

இதற்கெல்லாம் பாட்டிதான் சரி என்று பூமா நினைத்தானோ என்னமோ! திரும்பிப் பாட்டி இருக்கு மிடத்துக்குப் போனான். "ஏன், பாட்டி...! அம்மா இடுப்பில்..." என்று பூமா என்னமோ கேட்க ஆரம்பித்ததைச் சந்திரனும், பட்டுவும் கவனித்தார்கள். 'பாவம்! பூமாவைக் கூப்பிடுங்கள்! 'ரமணி யார்?' என்று தெரியாமல் அவன் ஏங்குகிறான்!" என்றான் பட்டு.

"பூமா! இங்கே வாயேன்!" என்று சந்திரன் அன்புடன் கூப்பிட்டான். அவனுக்கென்று வாங்கிக் கொண்டு வந்திருந்த நாட்டியக் குதிரை பொம்மை, சாவி கொடுக்காமலேயே ஓடும் மோட்டார், பெட்டி நிறையப் பிதுங்கும் சாக்லேட் எல்லாவற்றையும் வெளியே எடுத்துப் பரப்பினான் சந்திரன்.

"பூமா! இங்கே வாடியம்மா, கண்ணு!" என்று பட்டு மிகவும் பிரியமுடன் தன் பக்குக்குக் கூப்பிட்டான்.

அவன் வரவில்லை! ரமணியைச் சுட்டிக் காட்டி "அது யார்?" என்று பாட்டியைத் தொணதொணத்துக் கொண்டிருந்தான். "அவன் உன் தம்பி ரமணி" என்று பாட்டி சொன்னவுடன், "என் தம்பியா? எனக்கு அவனைத் தெரியவே தெரியாதே!" என்று பூமா ஆச்சரியப்பட்டதைக் கண்டு பட்டுவும், சந்திரனும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். 'ஏன் இந்தப் பெண்ணை நான்கு வருஷங்களாகப் பாட்டி வீட்டோடு கட்டிப் போட்டோம்?' என்று அவர்களுக்கு வருத்தமாக இருந்தது.

அன்று இரவு வழக்கம்போலப் பூமா பாட்டி அருகே படுத்துக் கொண்டு இரண்டு, மூன்று கதைகள் கேட்டபின் தூங்கி விட்டான். கடிகியின் பாட்டி கண்

விழித்து அகஸ்மாத்தாகப் பார்த்த போது பக்கத்தில் படுத்திருந்த பூமாவைக் காணோம்! அறைக் கதவு திறந்து கிடந்தது. எங்கே போயிருப்பாள்? என்று பாட்டி பதறிப் போய் 'ஸ்விட்சை'ப் போட்டாள். சட்டென்று என்னமோ நினைத்துக்கொண்டு தன் பிள்ளையும் நாட்டுப் பெண்ணும் படுத்திருக்கும் அறையின் ஜன்னல் கதவை மெதுவாகத் திறந்து எட்டிப் பார்த்தாள். பூமா தன் அம்மாவுக்கு அருகே நெருங்கி அடித்துப் படுத்துக்கொண்டு அப்பாமீது ஒரு கையை போட்டபடி அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள்! பூமாவின் உள்ளம் பாட்டிக்கு அப்போது தான் நன்றாகப் புரிந்தது. அவளைச் சந்திரன் தன்னோடு டாடா நகருக்கு அழைத்துக் கொண்டு போய் விட்டால் வீடு வெறிச்சென்று போய்விடுமே என்பதை நினைத்தபோது அவளுக்கு மனம் சங்கடமாகத்தான் இருந்தது. பிறகு ஒருவாறு மனதைத் தேற்றிக் கொண்டு "என்ன இருந்தாலும் அவளுக்கு அவள் அப்பா - அம்மாதான் ஒசத்தி. பூமா அவர்களுடன் போக வேண்டியவள்தானே!" என்று முணுமுணுத்தாள்.

• • •

இரண்டு மாத விடுமுறையும் போனதே தெரியவில்லை. அன்று சந்திரன் குடும்பத்துடன் டாடா நகரத்துக்குக் புறப்பட வேண்டிய நாள். "ஏண்டாப்பா, பூமா என்ன சொல்லுகிறாள்? அவளுடைய பாவாடை சவுன் எல்லாவற்றையும் மறக்காமல் எடுத்துவைத்துக் கொண்டாயா?" என்று கேட்டுக் கொண்டே பாட்டி கூடத்துப் பக்கம் வந்தாள்.

சற்று தூரத்தில் நாட்டியக் குதிரை மேல் 'ஜம்' மென்று ஏறி அமர்ந்து ஆனந்தமாக அதை ஆட்டிக் கொண்டே இருந்த பூமா, "பாட்டி! நான் அப்பாவுடன் ஊருக்குப் போகப் போகிறேன்!" என்று கூறினாள்.

பாட்டிக்கு ஆரம்பத்தில் இருந்த வைராக்கியம், உறுதி, முடிவு எல்லாம் படிப்படியாகக் குறைந்து என்னமோ போல இருந்தது. இவ்வளவு காலமாகப் பொல்லாத் தனத்தாலும் போக்கிரித் தனத்தாலும் வீட்டையே கலகலப்பாக்கிக் கொண்டிருந்த பேத்தி 'போகிறேன்!' என்று சொன்னது மனதை என்னவோ செய்தது. வீட்டோடு வளர்ந்த சிறுமியைத் திடீரென்று இரண்டுபேர் கிளம்பி வந்து பெற்ற உரிமையின் பேரால் பறித்துக் கொண்டு செல்லும் அதிர்ச்சியைத் தன்னால் தாங்க முடியாது என்று பாட்



தாயார்—அழாமல் இருந்தால் உனக்கு ஒரு பெப்பர்மிண்ட் தருவேன்.............

குழந்தை:—இன்னொன்றும் கொடுத்து விடு, அம்மா!

தாயார்:—ஏண்டா?

குழந்தை:—இன்னொரு தடவை அழுகை வரும் போலிருக்கிறது!

டிக்குத் தோன்றியது. "பூமா! போகிறதாக முடிவு செய்து விட்டாயா?" என்று குரல் தழு தழுக்கக் கடைசியாகப் பாட்டி ஒருதரம் கேட்டு விட்டுக் கண்களைத் துடைத்துக் கொண்டாள். அதைப் பார்த்த சந்திரனுக்கும் பட்டுவுக்கும்கூட அழுகை வந்துவிட்டது.


வண்டி வந்தது; ஒரே ஓட்டமாக ஓடி முதலில் ஏறிக்கொண்டு விட்டாள் பூமா. பிறகு பட்டு, சந்திரன் எல்லோரும் ஏறத் தயாராக வண்டி அருகே வந்து நின்றார்கள். பாட்டியும் அவர்களுடன் வந்து, "பூமா நீ பொல்லாதவள்! என்னை விட்டு விட்டுத்தானே கிளம்பிவிட்டாய்?" என்று தளர்ந்த குரலில் கூறியபடி அவள் கன்னத்தைச் செல்லமாக கிள்ளினாள்.

வண்டி நகரப் பார்த்தது அதே சமயம் "பாட்டி!" என்று வண்டிக்குள்ளிருந்த பூமா கூப்பிட்டாள். "ஏண்டி, கண்ணே!" என்று பாட்டி அருகில் ஓடினாள்.

"நான் ஊருக்குப்போகவில்லை, பாட்டி! உன்னிடம்தான் இருக்கப் போகிறேன். பாவம், நீ ஒண்டியாகத்தானே இருப்பாய்! அப்பாவுக்கும், அம்மாவுக்கும்தான் மணிப் பயல் இருக்கிறானே!" என்று சொல்லிக் கொண்டே ஒரே தாவாகத் தாவிப் பொத்தென்று பாட்டி மீது வந்து விழுந்தாள் பூமா.

"சந்துரு! பூமா என்னுடனேயே இருக்கட்டும். வண்டியை விடச்சொல்லு" என்று தன் உணர்ச்சிகளை எல்லாம் அடக்கிக் கொண்டு சொன்னாள் பாட்டி.

"இவன் இங்கேயே இருக்கட்டும். இவனது 'ஙை. ஙை' அழுகைக்கும் பிடிவாதத்துக்கும், டாடா நகரின் ஒண்டுக்குடித்தனம் கட்டுபடி ஆகாது. அப்புறம் வந்து அழைத்துக் கொண்டு போகிறேன்" என்று சொல்லிப் போனான் சந்திரன். "அதற்கு என்ன? இருக்கட்டும்" என்று அவன் தாயார் சம்மதித்தாள். ஆனால் பூமா பிறகு பொல்லாதவனாக மாறுவான் என்றோ, பிள்ளையாண்டான் நான்கு ஆண்டுகள் வரை பூமாவை எட்டியும் பார்க்காமல் இருப்பான் என்றோ அவள் அப்போது எதிர்பார்க்கவில்லை. பூமா, "பாட்டி! பாட்டி!" என்று ஓடிக் கொண்டு கிடந்தாலும் அவனுடைய பொல்லாத்தனத்திற்கு ஈடு கொடுக்கப் பாட்டியின் தள்ளாமை திணறிற்று.



இந்தச் சமயத்தில்தான் டாடா நகரிலிருந்து கடிதம்வந்தது. சந்திரன் இரண்டு மாத லீவில் புறப்பட்டு வருவதாகவும் போகும்போது பூமாவைக் கூட்டிக் கொண்டு போவதாகவும் அதில் எழுதி இருந்தான். அதைப் படித்து பாட்டி அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. உடனே, தெருவில் விளையாடிக்கொண்டிருந்த பூமாவை அழைத்தாள்.

"என்ன பாட்டி?" என்றான் அவன் ஓடிவந்து.

"உங்க அப்பாவும் அம்மாவும் வரப் போகிறார்களாம், தெரியுமா?" என்றாள் அவள்.

"உனக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டான் பூமா.

"இதோ கடுதாசு வந்திருக்கு" என்று கடிதத்தைக் காட்டினாள் பாட்டி.

பூமா 'லபக்'கென்று தாவி அக்கடிதத்தைப் பிடுங்கி எழுத்துக்கூட்டிப் படித்தான். அதைப் படித்து முடித்ததும், "அப்பா வரட்டும்! அவரை என்ன செய்கிறேன் பார்!" என்று கருவினான் பூமா.

"என்ன செய்வாயாம்?" என்று சிரித்துக் கொண்டே கேட்டாள் பாட்டி.

"என்னிடம் ஒரு வார்த்தை கூடச் சொல்லாமல் இராத்திரி நான் தூங்கும் நேரமாகப் பார்த்து இந்த அப்பா என்னை ஏமாற்றி விட்டுப் போய் விட்டாரே! ஒரு அப்பாவாக இருந்து கொண்டு இப்படிச் செய்யலாமா என்று கேட்டு விட்டு அவர்மீது 'ஜம்'மென்று குதிரை ஏறுவேன்!" என்று டோலக்குகள் குலுங்கப் பேசினான் பூமா.

"என்ன இருந்தாலும் நீ பொல்லாதவன், பூமா!" என்றாள் பாட்டி.

மணி எட்டரையைக் கடந்து ஒன்பது ஆயிற்று. ஒன்பதே காலும் ஆயிற்று. பாட்டியும் பேத்தியும் வாசலில் நின்ற வண்ணம் தெருவையே பார்த்துக்கொண்டிருந்தார்கள். ஒரு வண்டியைக் கூடக் காணோம். பாட்டியின் மனம் என்னாத எண்ணமெல்லாம் எண்ணி ஏங்கிற்று. ஒவ்வொரு நிமிஷமும் ஒரு யுகம்போலக் கழிந்தது. கடைசியில் தெரு முனையில் ஒரு ஜட்கா தெரிந்தது. "அந்த வண்டியாக இருக்கக்கூடாதா?" என்று பாட்டி தன் இஷ்ட தெய்வங்களைப் பிரார்த்தித்தாள். வண்டி வாயுவேக மனோவேகமாக ஓடிவந்து அந்த வீட்டுக்கு முன் நின்றது. பாட்டி வண்டியருகே விரைந்து சென்றாள். சந்திரன், அவன் மனைவி பட்டு, அவள் இடுப்பில் இரண்டு வயதில் ஒரு குழந்தை மூவரும் வண்டியிலிருந்து இறங்கினார்கள்.

"அப்பா!" என்று கூவிக்கொண்டு ஓடின பூமா, அம்மாவின் இடுப்பில் இருக்கும் அம்பிப் பயலை ஆச்சர்யத்துடன் பார்த்தான். அப்புறம் மேலே ஓடாமல் திகைத்து நின்றான். அது யார் அந்தப் பயல்? என் அம்மாவைச் சொந்தம் கொண்டாடிக் கொண்டு இடுப்பை விட்டு இறங்கமாட்டேன் என்கிறான்? இது இழுப்பையைக் கொடுத்தால் சிதறிப் போகும்படி 'ணங்!' என்று விட்டு எறிகிறான். 'அ......ம்......மா!' என்று வீடே அதிரும்படி பெருங்குரல் போடுகிறான். யாராக இருக்கும் அது?"

பூமா கண்களைச் சுழற்றிச் சிந்தித்தான்; புரியவில்லை.

மெதுவாகச் சுவர் ஓரமாக நகர்ந்து நகர்ந்து அம்மா அருகே போனான். அவனை


பூமா பொல்லாதவள்!

நவீனன்

பொழுது விடிந்ததோ, இல்லையோ பூமா எழுந்து தன் பாட்டியருகே சென்றாள். "ஏன் பாட்டி! எட்டரை மணி வண்டி எத்தனை மணிக்கு வரும்?" என்று நிமிஷத்துக்கு ஒரு முறை கேட்டுக்கொண்டே இருந்தாள். அவளுடைய கேள்விக்குப் பதில் சொல்ல அவள் பாட்டியால் சாத்தியப்படவில்லை.

"எட்டரை மணிக்குத்தாண்டி வரும் பூமா!" என்று பாட்டி சொன்னால், "எட்டரை மணிக்கா?" எனக் கேள்விக் குறிபோல முகத்தை வைத்துக்கொண்டு, "எட்டரை மணி எப்போது வரும்?" என்று தன் பாட்டியைத் தொந்திரவுபடுத்த ஆரம்பித்தாள்.

பாட்டிக்கு எரிச்சலாக இருந்தது. பளீரென்று முதுகில் ஒன்று கொடுத்து அழவைக்கலாமா என்றுகூடக் கோபம் வந்தது. ஆனால் பூமாவின் பொல்லாத் தனம் பாட்டிக்குப் பழகிவிட்டது. அவள் அப்பாவும் அம்மாவும் வடக்கே இருந்து அருமைப் பெண்ணைப் பார்க்க அன்று வரப் போகிறார்கள். இந்தச் சமயத்தில் அவள் அம்மாவிடம் கண்ணைக் கசக்கிக் கொண்டு போய், "பாட்டி என்னை அடித்து விட்டாள்!" என்று புகார் சொன்னால் நன்றாக இருக்குமா?



வந்த ஆத்திரத்தைப் பேசாமல் அடக்கிக்கொண்டு இருந்து விட்டாள். இன்னொரு பக்கம், "பாவம்! என்ன இருந்தாலும் குழந்தைக்கு அப்பா-அம்மா என்றால் ஆசை இருக்காதா?" என்ற அங்கலாய்ப்பும் ஏற்பட்டது. பூமாவின் பொல்லாத் தனத்தையும், அவள் பண்ணும் விஷமத்தையும் பார்க்கும்போது, "அவன் வரட்டும், சந்திரன்! உடனே உன்னை ஊருக்கு அனுப்பிவிட்டு மறு காரியம் பார்க்கிறேன்" என்று அவள் எத்தனையோ தடவை கடிந்து கொண்டிருக்கிறாள். நான்கு வருஷங்களாக அவளை வைத்துக்கொண்டு, அவள் கேட்கும் கோடிக்கணக்கான கேள்விகளுக்குப் பதில் சொல்லிக் கொண்டு பட்டது போதும் என்று நினைத்தாள் பூமாவின் பாட்டி. அப்படி அவள் நினைத்ததற்குத் தள்ளாமைதான் காரணம்.

பாட்டியின் கோபமோ, கடுகடுப்போ, பூமாவுக்குப் பெரிய விஷயமாகப் படவில்லை. கடியாரமுள் அசைவையே பார்த்துக்கொண்டு இருந்தாள். அது ஏழு, எட்டு என்று மணி அடிக்கும்போதெல்லாம் விரல் விட்டு எண்ணிக்கொண்டு உள்ளுக்கும், வாசலுக்குமாகப் போய் வந்து கொண்டிருந்தாள்.

"மணி எட்டு அடித்துப் பத்து நிமிஷமாகிறது. போட்மெயில் இப்போது எங்கே வந்திருக்கும் பாட்டி!" என்று கேட்டுக் கொண்டே உள்ளே ஒருதரம் ஓடி வந்தாள் பூமா. சந்துருவுக்குப் பிடிக்கும் என்று மூக்கை முனைந்து கொண்டு இட்டிலி வார்த்துக் கொண்டிருந்த பாட்டி "செங்கல்பட்டு வந்திருக்கும்!" என்று வெள்ளென்று விழுந்தாள். பாட்டிக்கு உள்ளூற வேதனையாக இருந்தது. இப்போதெல்லாம் நினைத்தால் ரயில் விபத்துக்கள் மலிந்து கிடக்கும் நேரத்தில், வெகு தூரத்திலிருந்து - டாடா நகரிலிருந்து - தன் பிள்ளை சந்துருவும், நாட்டுப் பெண் பட்டுவும் பத்திரமாக வந்து சேர வேண்டுமே! சரியாக எட்டரை மணிக்கு வந்து சேராவிட்டால் அந்தப் பொல்லாத பூமா பிடுங்கி எடுத்து விடுவாளே என்று தவித்தாள்.

சந்திரன் பிறந்த ஊரான புதுக்கோட்டைக்கு வந்து விளையாட்டுப்போல நான்கு வருஷங்களுக்கு மேலாகிறது. பூமா கைக் குழந்தையாக இருந்தாள். அவளைத் தன் தாயாரிடம் தள்ளிவிட்டு,

கிறான். கண்ணாடியில் வேண்டுமானால் நீ அவனைச் சுலபமாகப் பார்க்கலாம். ஆனால் நேரில் அவன் இருக்கும் இடத்துக்குப் போவதென்றால் மிகவும் சிரமமான காரியம். ஆனால் நீ ஒன்றுக்கும் கவலைப் படாதே. நான் உன்னைத் துணையோடு அனுப்பி வைக்கிறேன்!" என்று கூறி முத்துவை அரண்மனைக்குள் போய், ஸ்நானம் செய்து சாப்பிட்ட பிறகு சற்று நேரம் இளைப்பாறும்படி சொன்னான்.

இரண்டு நாட்களாக முத்துவுக்கு அரண்மனையில் ராஜோபசாரம் நடந்தது. எத்தனை தாதிகள்! எத்தனை வேலைக்காரர்கள்! அவன் மனசில் நினைப்பதற்கு முன்னால் ஸ்நானத்துக்கு வெந்நீர் தயாராயிருக்கும். அதற்கு முன்னாலேயே சோப்பும் 'டவலு'ம் அவனுக்காகக் காத்துக் கொண்டிருக்கும்.

ஸ்நானம் செய்து விட்டு உடையை மாற்றிக் கொண்டு முத்து சாப்பிடப் போனால் சாப்பாடு தயாராகப் பரிமாறப் பட்டிருக்கும். இந்தமாதிரி, அரண்மனையின் ராஜோபசார வாழ்க்கையில் இரண்டு நாள் சென்றது முத்துவுக்குத் தெரியவே இல்லை. (தொடரும்)

இரண்டு விடு கதைகள்

1. வழியில் போகிறவன் தலையைக் கிள்ளி மடியில் வைத்தான்.
2. கால் படி அரிசி போட்டுச் சமைத்து ஊருக்கெல்லாம் தானமிடலாம்.

இவை என்ன?

சென்ற வாரக் கணக்குக்கு விடை:

உதாரணமாக 65ஐ 65ஆல் பெருக்க வேண்டும் என்று வைத்துக் கொள்ளுங்கள். இரண்டு 5 களையும் பெருக்கினால் 25 என்ற விடை வருகிறது. மீதி இருப்பது 6. ஆறுக்கு அடுத்த எண் 7 அல்லவா? 6ஐயும் 7ஐயும் பெருக்கினால் என்ன விடை வருகிறது? 42தானே? அந்த 42க்குப் பக்கத்தில் 25ஐ எழுதினால் என்ன வருகிறதோ, அதுதான் விடை. அதாவது 4225. இதே முறையில் ஐந்தில் முடியும் எல்லாக் கணக்கையும் போடலாம்.

என்ன வயது?

சீன தேசத்தில் கல்யாணம் ஆவதற்கு முன்னால் மாப்பிள்ளை பெண்ணைப் பார்ப்பதே இல்லை. கல்யாணப் பேச்செல்லாம் மாப்பிள்ளை வீட்டுக் காரர்களும் பெண் வீட்டுக்காரர்களும் பேசி தாங்களே முடிவு கட்டி விடுவார்கள்.

மாப்பிள்ளைக்காகட்டும் பெண்ணுக்காகட்டும் தாலி கட்டி முடிகிற வரைக்கும் ஒருவரை ஒருவர் தெரிந்து கொள்ள முடியாது.

ஒரு சீனனுக்குக் கல்யாணம் முடிந்ததும் தன்னுடைய மனைவி ரொம்ப வயசானவளாக இருப்பதைக் கண்டான். உடனே தன் மனைவியை நோக்கி, "பெண்ணே, உனக்கு என்ன வயது?" என்று கேட்டான்.

"எனக்கு நாற்பத்தைந்து வயது ஆகிறது" என்று சொன்னாள் மனைவி.

"ஐயோ! கல்யாணப் பேச்சு நடக்கும்போது உனக்கு முப்பத்தெட்டு வயதென்றல்லவா உன் தந்தை சொன்னார். உன்னுடைய உண்மையான வயதுதான் என்ன?" என்று மறுபடியும் கேட்டான் அவன்.




"உண்மை வயது ஐம்பத்தி நாலு" என்று சொன்னாள் மணப் பெண்.

அப்படியும் அவளுடைய பதில் அவனுக்குத் திருப்தியை அளிக்கவில்லை. எப்படியும் அவளது உண்மையான வயதைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று ஆசைப் பட்டான். அப்போது இருட்டுகிற சமயம். திடீரென்று ஏதோ நினைத்துக் கொண்டவன் போல "அடடே! இருட்டிக் கொண்டு வந்து விட்டதே! இருட்டுவதற்குள் உப்பு ஜாடியை மூட வேண்டுமே, இல்லாவிட்டால் எலிகள் வந்து எல்லா உப்பையும் தின்று விடுமே" என்றான் அவன்.

"என்ன? எலி உப்பைத் தின்னுமா? ஆச்சரியமாக இருக்கிறதே! என்னுடைய அறுபத்தெட்டு வயது வாழ்க்கையில் இந்த மாதிரி யாரும் எலி உப்பைத் தின்னும் என்று சொல்லக் கேட்டதே இல்லையே" என்றாள் மணப் பெண்.

—பி. சி. பஷீர்



நடைபெறுகின்றனவா என்னும் சந்தேகம் அவனை விட்டு நீங்குவதாகவே இல்லை. இதுவரையில் அவன் இத்தனை அற்புதமான மாளிகையைப் பார்த்ததேயில்லை.

அப்புறம் மேலே போவதில் முத்துவுக்குச் சிரமம் ஒன்றும் இருக்கவில்லை. தினுசு தினுசான வர்ணப் பட்டுப் புடவைகளை உடுத்தியிருக்கும் பெண்கள் சபா மண்டபத்துக்கு அருகில் ஏராளமாகக் காட்சியளித்தனர்.

வேல்களும் வாள்களும் ஏந்திய வீரப் பெண்மணிகள் ஆடாமல் அசையாமல் வழிநெடுக அணிவகுத்து நின்றனர். அத்தனை பெண்மணிகளும் முத்துவை வணங்கி மரியாதை செய்தனர்.

இந்த வீரப் பெண்மணிகளையெல்லாம் தாண்டி ராணியின் சபா மண்டபத்துக்குச் சென்றான் முத்து.

சபா மண்டபத்தில் கண்ணைப் பறிக்கும் ஒளி வீசிய சிம்மாசனத்தில் ராணி உட்கார்ந்திருந்தாள்.

முத்து ஆச்சரியத்தோடு ராணியையே பார்த்துக் கொண்டு நின்றான்.

"முத்து, இங்கே வா! பயப்படாதே! உனக்கு நேர்ந்த கஷ்டங்களையெல்லாம் கிளியின் மூலம் தெரிந்து கொண்டேன். இங்கே வா, இந்தக் கண்ணாடியில் கவனித்துப் பார்!" என்று சொல்லி முத்துவை அழைத்து வன ராணி அவனிடம் ஒரு கண்ணாடியைக் கொடுத்தாள்.

முத்து ஆவலோடு அந்தக் கண்ணாடியை வாங்கிப் பார்த்தான். அவ்வளவுதான்; அடுத்த நிமிஷம் அவன் தன்னையும் மறந்து "இதோ பாலா!" என்று பலமாகக் கத்தி விட்டான்.

ராணி 'ஹஹ்ம், ஹஹ்ம், ஹா' என்று சிரித்து, "முத்து, பாலா மிகவும் தூரத்தில் இருக்

னிடம் சொன்னான். அவன் சொன்ன விவரங்களை யெல்லாம் கிளி மிகவும் அன்போடு கேட்டது.

முத்துவுக்கு வர வரப் பயம் குறைந்து கொண்டே வந்தது. கிளி தன்னிடம் அன்பாயிருப்பதைக் கண்டதும் அவனுக்கு மனசில் ஒரு தைரியம் உண்டாயிற்று. கிளி தன்னைப் பற்றிச் சிபார்சு செய்தால் வன ராணி எப்படியும் உதவி செய்வாள், பாலாவைத் தான் எப்படியும் கண்டு பிடித்து விடலாம், என்னும் ஒரு நம்பிக்கையும் அவன் மனத்தில் அளவு கடந்து உண்டாயிற்று.



முதலில் ஒற்றை அடிப்பாதை வழியாகச் சுமார் ஒரு மைல் தூரம் போனதும் அங்கே மிகவும் குளிர்ச்சி பொருந்திய சோலை ஒன்று தென்பட்டது. அந்தச் சோலைக்குள் அழகான மண்டபம் தோன்றியது.

அந்த மண்டபம் பிரமாதமாயிருந்தது. மண்டபத்தை அடைந்ததும் அந்தக் கிளி முத்துவைப் பார்த்து, "முத்து, நீ இங்கேயே கொஞ்ச நேரம் உட்கார்ந்திரு. நான் இந்த மண்டபத்து அந்தரங்க வழியாகச் சென்று வன ராணியைப் பார்த்து நீ வந்திருக்கும் சமாசாரத்தைச் சொல்லி விட்டு வருகிறேன். ராணி உத்தரவு கொடுத்ததும் நீ வரலாம்!" என்று சொல்லி விட்டுப் பறந்து சென்றுவிட்டது.

முத்து வெகு நேரம் மண்டபத்தில் கிளியின் வருகைக்காகக் காத்துக் கொண்டிருந்தான். கடைசியில் கிளி வந்து சேர்ந்தது.

"முத்து, நீ அதிர்ஷ்டக்காரப் பையன்தான். ராணி உன்னைப் பார்க்க வேண்டும் என்று மிகவும் ஆவலோடு சொன்னாள். வா, போகலாம்!" என்று கிளி உற்சாகத்தோடு சொல்லியது.

முத்துவின் சந்தோஷத்துக்குக் கேட்க வேண்டுமா? குதித்துக் கொண்டு கிளி காட்டும் வழியைப் பின்பற்றிக் கிளம்பினான்.

மண்டபத்தில் கொஞ்ச தூரம் போனதும் ஒரு படிக்கட்டு கீழே இறங்கியது. படிக்கட்டு வழியாக இறங்கிப் போனதும் ஒரு அழகான சின்ன அரண்மனை வாசல் தென்பட்டது. அந்த அரண்மனை வாசலில் நுழைந்து முத்து உள்ளே போனான். அங்கே தரையிலேயே ஒரு சுரங்க வழி தென்பட்டது. முத்துவுக்கு இதையெல்லாம் பார்க்க ஆச்சரியமாயிருந்தது. பயமாகவும் இருந்தது. தான் காண்பது கனவா, நினைவா என்று கூட அவனுக்குச் சந்தேகம் உண்டாயிற்று. முத்து தன்னைத்தானே கிள்ளிப் பார்த்துக் கொண்டான். அவன் தூங்கவில்லை என்று அவனுக்கு நன்றாய்த் தெரிந்தது. சுரங்க வழியாகச் சுமார் அரை மணி நேரம் நடந்ததும் இன்னொரு அரண்மனை வாசல் தென்பட்டது.

அந்த அரண்மனை வாசலில் இரண்டு வீரர்கள் கையில் வாளுடன் காவல் புரிந்தனர். பயங்கரமான அவர்களுடைய உருவத்தைப் பார்த்து முத்து நடுங்கிப் போய் விட்டான்.

உடனே கிளி அவர்களிடம் ராணியின் முத்திரை மோதிரத்தைக் காட்டியது. அதைப் பார்த்ததும் அந்த வாயிற் காவல் வீரர்கள் இருவரும் முத்துவுக்குத் தலை வணங்கி மரியாதை செலுத்தி உள்ளே வழி விட்டனர்.

முத்துவுக்கு இதையெல்லாம் பார்க்க ஒரே அதிசயமாயிருந்தது. இவ்வளவு சம்பவங்களும் நிஜமாகவே



பாப்பா மலர்

அதிசயப் பிரயாணம்

ஸோமாஸ்

5. வனராணியின் உதவி

முத்து போய்ச் சேர்ந்த காட்டில் மரங்கள் மிகவும் நெருங்கி அடர்ந்து வளர்ந்திருந்த படியினால் இருட்டாகவே இருந்தது. முத்து அங்கே போய்ச் சேர்ந்தபோது மாலை மணி நாலு இருக்கும். வெய்யில் அடித்துக் கொண்டிருந்தது. ஆனால் அடர்த்தியான மர நிழலின் காரணமாக வெய்யிலே தெரியாமல் இருந்தது. குளிர்ச்சி பொருந்திய அந்த வனம் முத்துவுக்கு மிகவும் உற்சாகத்தைக் கொடுத்தது. அவன் மனசில் எழுந்த உற்சாகத்தை அதிகப்படுத்துவதற்குத்தானோ என்னவோ பலவிதப் பறவைகள் வேறு 'கலகல'வென்று சப்தமிட்டுக் கொண்டிருந்தன.

அந்தப் பறவைக் கூட்டத்தில் ஒரு கிளி சோர்வுடன் உட்கார்ந்திருந்த முத்துவைப் பார்த்தது. கிளிக்கு அவனைப் பார்த்ததும் அவன்மேல் அநுதாபம் உண்டாகிவிட்டது. அவன் சமீபமாகப் பறந்து சென்று உட்கார்ந்து கொண்டு, "நீ யார்? உன் பெயர் என்ன? ஏன் மிகவும் சோர்ந்து போய் உட்கார்ந்திருக்கிறாய்?" என்று மிகவும் பரிவோடு கேட்டது.

முத்து, ஒன்றுகூட விடாமல் நடந்த சமாசாரங்கள் அவ்வளவையும் அந்தக் கிளியினிடம் சொன்னான். ஊரைவிட்டு வந்ததிலிருந்து முத்துவுக்கு, தன்னை யாராவது இந்த விவரங்களை யெல்லாம் அன்போடு கேட்க மாட்டார்களா என்று ஒரே ஏக்கமாயிருந்தது. மனசை விட்டு எல்லாவற்றையும் கிளியிடம் சொல்லி முடித்தானோ இல்லையோ, முத்து 'ஓ'வென்று அழுது விட்டான்.

அவனையும் பாலாவையும் பற்றிய சோகக் கதையைக் கேட்டதும் கிளிக்கு முத்துவினிடம் மிகவும் இரக்கம் உண்டாகி விட்டது.

"முத்து, நீ அழாதே. ஒன்றுக்கும் கவலைப்படாதே! இந்தப் பெரிய வனத்துக்கு ஒரு ராணி இருக்கிறாள். அவளுக்கு என்னிடம் மிகவும் பிரியம். வன ராணியினால் ஆகாத காரியமே கிடையாது. நான் உன்னை வன ராணியிடம் அழைத்துச் செல்லுகிறேன். அவள் நிச்சயம் பாலா இருக்குமிடத்தைக் கண்டு பிடித்துச் சொல்லுவாள். உனக்கு வேண்டிய உதவிகளையும் செய்வாள்! இப்பொழுதே புறப்படு!" என்று சொல்லிக் கிளி அவன் கையில் உட்கார்ந்து கொண்டு அவனுக்கு வழி காட்ட ஆரம்பித்தது.



கிளியோடு பேசிக்கொண்டு போவதில் முத்துவுக்கு மிகவும் உற்சாகமாயிருந்தது. மாயக் கிழவியின் வீட்டில் நடந்த அதிசயச் சம்பவங்களை யெல்லாம் முத்து விவரமாகக் கிளியி


நான்கு நன்மைகள்
மேட்டூர்
சந்தன
சோப்
பரிமளமிக்கது, பரிசுத்தமானது
கவர்ச்சிமிக்க காந்தி அளிப்பது
ரூப்
டாய்லெட் சோப்
காவேரி
சூபர்
சோப்
சால்முக்ரா எண்ணெய் சேர்ந்தது
சுகாதாரத்திற்கு இன்றியமையாதது
சுத்தமான சலவைக்கு உத்தமமானது
காவேரி
பார் சோப்
மேன்மையான 'மேட்டூர் கெமிகல்ஸ்' தயாரிப்புகள்
மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல் கார்ப்பொரேஷன் லிமிடெட்
மேட்டூர் அணை — சேலம்
பூரண விற்பனை ஏஜண்டுகள்:
அலைட் இண்டஸ்ட்ரியல் டிஸ்ட்ரிப்யூடர்ஸ் லிமிடெட்
120, அரண்மனைக்காரத் தெரு, சென்னை & கிளைகள்

சகஜம். மனிதப் பிறவி எடுத்த ஒவ்வொருவனுடைய இயல்பும் இதுவே. ஆகா! இந்த உலகத்தை நாடகத்துக்கு ஒப்பிடுகிறார்களே, அது எவ்வளவு பொருத்தமானது! ஒவ்வொரு மனிதனும் உலகமாகிய இந்த நாடக மேடையில் தனக்கு உகந்த பாத்திரத்தை ஏற்று நடிக்க முன்வருகிறான்; நாடகமேடையாகத் திகழும் இந்த உலகத்தில் தன் மனோதர்மத்துக் கேற்றவாறு தன் மனப்போக்கின் தூண்டுதலின் பேரில் தன் பாடத்தை ஒப்பிக்கிறான்—இதுதான் மானிட வாழ்க்கை எனப்படுவது. மனிதன் செய்யும் செயல்கள் அனைத்தும் அவன் அவன் சுபாவத்துக்கு ஏற்றவாறுதான் அமைகின்றன. மனிதனின் அந்தச் சுபாவம் மிகவும் இயல்பானது; இயற்கையானது. மனிதன் தனக்கு எஜமானன் அல்ல. சூழ்நிலைக்கு அடிமை செய்பவன்; நாதியற்றவன்; கதியற்றவன். அதுமட்டும் அல்ல; பிறர்வசப் பட்டவன். அவனைக் கர்த்தா என்றோ, செயலாளன் என்றோ சொல்லுவது மிகவும் தவறு. அவனை ஒரு சாதனம், கருவி என்று தான் சொல்லவேண்டும். மனிதன் தானாக ஒன்றும் செய்வதில்லை. சூழ்நிலை அவனை அப்படியெல்லாம் செய்யுமாறு ஆட்டிவைக்கிறது. அவ்வளவுதான்! ஆகவே, அப்படியிருக்கும்பொழுது உலகத்தில் பாவம் ஏது? புண்ணியம்தான் ஏது?”


“மனிதனிடத்தில் மமத்துவம் அதாவது ‘தான்’ என்னும் அகந்தைதான் மேலோங்கி நிற்கிறது. ஒவ்வொரு மனிதனும் இன்பத்தையே, சுகத்தையேதான் நாடுகிறான். அந்த மனிதனின் மனோ தர்மத்துக்கு ஏற்றவாறு இன்ப ஊற்று எழும் இடமும் வேறுபடுகிறது. சிலர் பொருள் ஈட்டுவதில் இன்பம் காண்கின்றனர்; சிலர் மது வகைகளில் மகிழ்ச்சிப்பொருள் மறைந்திருப்பதாகக் கருதுகின்றனர். வேறு சிலர் விபசாரத்தில் இன்பம் இருப்பதாக எண்ணுகின்றனர். மற்றும் சிலர் தியாகத்தில் இன்பத்தை நுகர்கின்றனர். இப்படியாக ஒவ்வொருவரும் இன்பத்தைத்தான் விரும்புகின்றனரே யொழிய துன்பத்தை விரும்புவதும் இல்லை; வேண்டி அழைப்பதும் இல்லை. வேண்டுமென்றே துயரம் தரும் காரியங்களைச் செய்ய யார்தான் துணிவார்கள்? மனிதனுடைய மனப்போக்கு இதுதான். இன்பத்தையே நாடும் மனிதன் துன்பத்தை விரும்புவதில்லை. துன்பத்தை விரும்புவதென்றால் அது அவனுக்குப் பிடிப்பதுவும் இல்லை.

“ஆகவேதான் இன்றுவரை உலகத்தில் ‘பாவம் என்றால் என்ன?’ என்பதை வரையறுத்துக் கூற இயலாமற் போய்விட்டது. அதை வரையறுத்துக் கூறுவதும் அவ்வளவு சுலபமான காரியம் அல்ல. ஏன்? அதை வரையறுத்துக் கூறவே முடியாது என்று சொல்லிவிடலாம். நாம் பாவமும் செய்யவில்லை; புண்ணியமும் செய்யவில்லை. நாம் என்ன செய்யவேண்டுமோ, அதைத் தான் இதுவரை செய்துகொண்டு போகிறோம். நான் சொல்லுவதெல்லாம் உங்களுக்குப் புரிந்ததா?” என்றார்.

அதைச் சொல்லி முடித்ததும் மகாப்பிரபு ரத்னும்பார் எழுந்து நின்றார். “இது என் அபிப்பிராயம். நான் சொல்லுவதை நீங்கள் ஏற்றுக் கொண்டாலும் சரி, ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் சரி. எனக்கு அக்கறையில்லை. நீங்கள் என் அபிப்பிராயத்தை ஏற்றுக் கொண்டுதான் ஆகவேண்டும் என்று நான் உங்களை வலுக்கட்டாயப் படுத்தவில்லை; வலுக்கட்டாயப் படுத்த விரும்பவும் இல்லை. அப்படி நிர்ப்பந்திப்பதும் என் சக்திக்கு அப்பாற்பட்ட விஷயம். போய் வாருங்கள். சுகமாக இருங்கள். ஆண்டவன் உங்களுக்கு எல்லா நன்மைகளும் அருளட்டும். இதுதான் நான் உங்களுக்கு மனமுவந்து அளிக்கும் ஆசீர்வாதம்” என்றார்.

அடுத்த கணம் சுவேதாங்கனும் விசால தேவனும் எழுந்து மகாப்பிரபு ரத்னும்பாரின் பாதங்களில் பணிந்தனர். (முற்றிற்று)





பிரபு! யோகி குமாரகிரி ஜிதேந்திரியர். ஐம்புலன்களையும் அடக்கி ஆண்டவர். அவரை வெற்றி கொள்ளுவது மிக மிகக் கடினம். அவர் அகங்காரத்தை அடக்கி வெற்றி கண்டவர். அவர் இந்த உலகத்திலிருந்து எவ்வளவோ மடங்கு உயர்ந்து விட்டார்; லோகாயதனங்கள் அத்தனைக்கும் அப்பாற்பட்டவராகி விட்டார். அவரை எட்டிப் பிடிக்க இனி யாராலும் ஆகாது. அவருடைய சாதனை, அவருடைய அறிவு, அவருடைய திறமை அனைத்தும் பரிபூரணமானவை. ஆனால் பீஜகுப்தனோ ஆசை வசப்பட்டவன். காமத்தின் கையிலே கட்டுண்டவன். உலகம் வெறுக்கும் சிற்றின்ப போகங்களில் ஊறித் திளைப்பதைத்தான் அவன் வாழ்க்கை என்று எண்ணுகிறான். ஆகவே அவன்தான் மாபெரும் பாவி. பாவம் நிறைந்த இந்த உலகத்தில் ஒரு முக்கியமான அங்கம் வகிப்பவன் என்றுகூட அவனைச் சொல்லிவிடலாம்!" என்று பதில் சொன்னான்.

அதைக் கேட்ட ரத்னாம்பரர் இலேசாக இளநகை புரிந்தார். பிறகு, "சுவேதாங்கா! விசாலதேவா! நீங்கள் இருவரும் வெவ்வேறு சூழ்நிலையில் வளர்ந்தவர்கள். உங்கள் இரண்டு பேருக்குமே யாருக்கும் ஒருவருடைய சூழ்நிலையைப் பற்றி இன்னொருவருக்கு ஒன்றும் தெரியாது. ஆகவே நீங்கள் இருவரும் பாவத்தைப் பற்றிச் செய்த ஆராய்ச்சியின் முடிவும் வெவ்வேறாகி விட்டது. நீங்கள் இருவரும் வித்யாப்பியாசம் முடிந்து வீட்டுக்குச் செல்லுகிறீர்கள். நீங்கள் இருவரும் கல்வி கேள்விகளில் பூரணமாகத் தேர்ச்சி பெற்று விட்டீர்கள். நான் கற்பிக்க வேண்டியதையெல்லாம் கற்பித்தாகி விட்டது. இருந்தாலும் கடைசியாக வீட்டுக்குப் போகும்போது இன்னொரு பாடத்தையும் கேட்டு விட்டுப் போங்கள்!" என்றார்.

அதைச் சொல்லி முடித்ததும் ரத்னாம்பரர் தன் இரு கண்களையும் மூடிக்கொண்டு சிந்தனையில் ஆழ்ந்தார். ஆகவே அந்த இடம் சிறிது நேரம்வரை அமைதியே உருவெடுத்ததாக மாறிவிட்டது. சிறிது நேரத்துக்கெல்லாம் ரத்னாம்பரர் இலேசாகத் தன் கண்களைத் திறந்து, "குழந்தைகாள்! உலகத்தில் பாவம் என்று ஒன்றுமே கிடையாது. அவனவன் தன் மனோதர்மத்துக்கு ஏற்றவாறு பாவ புண்ணியங்களைச் சிருஷ்டித்துக் கொள்ளுகிறான். மனிதனுக்கு மனிதன் மனோதர்மம் மாறுபடுவது மிகவும்

அதைக் கேட்கும்பொழுது சித்திரலேகாவின் வதனத்தில் அலாதி காந்தி வீசியது. அவளுடைய கண்களில் கவர்ச்சி மிகுந்த ஒளி சுடர்விட்டுப் பிரகாசித்தது. இதயத்தின் ஆழத்தில் எழுந்த ஆத்மீக ஒளி அவளுக்கு அலாதியானதொரு வனப்பை அளித்தது.

பீஜகுப்தன் சித்திரலேகாவை முத்தமிட்டான். அது மட்டும் அல்ல; சித்திரலேகாவிடமிருந்தும் முத்தம் பெற்றான்.

அதற்குப் பின் அவன், "ஆகா! நாம் இருவரும் எவ்வளவு பாக்கியசாலிகள்! உலகத்தில் நமக்கு ஈடான பாக்கியசாலிகள் யாருமே கிடையாது!" என்று முணுமுணுத்தவாறே இன்பக் கற்பனையில் ஆழ்ந்தான்.

இன்ப போதையிலே லயித்திருந்த சித்திரலேகாவின் விழிகளும் உள்ளுக்குள் செருகிக் கொண்டன.

முப்பத்தொன்பதாம் அத்தியாயம்

முடிவுரை

காலப்புரவி ஓடிக்கொண்டேயிருந்தது. கடைசியில் குறிப்பிட்ட ஒரு வருஷமும் ஓடி விட்டது.

கடந்த ஓராண்டாக வெறிச் சென்று கிடந்த மகாப் பிரபு ரத்னாம்பரரின் குடிசை அன்று கலகலப்புடன் காணப்பட்டது. மகாப்பிரபு ரத்னாம்பரருக்கு எதிரிலே சுவேதாங்கனும் விசாலதேவனும் பணிவே உருவாக அமர்ந்திருந்தனர்.

மகாப்பிரபு ரத்னாம்பரர் சுவேதாங்கன் பக்கம் திரும்பி, "குழந்தாய் சுவேதாங்கா! உனக்குத் திருமணம் ஆகிவிட்டது. நீ கிருஹஸ்தனாகி விட்டாய். பீஜகுப்தன், குமாரகிரி இவ்விருவரிலும் யார் பாவி என்று இப்பொழுது உன்னால் சொல்ல இயலுமா?" என்று கேட்டார்.

சுவேதாங்கன் மகாப்பிரபு ரத்னாம்பரருக்குத் தலை வணங்கினான். பிறகு, "மகாப்பிரபு! பீஜகுப்தன் தெய்வம் என்றால் தெய்வம்தான். இந்தப் பூவுலகில் அவரைப் போன்ற தியாக சீலரைக் காண்பதரிது. அவரைத் தியாக சிகரம் என்று சொன்னாலும் தகும்; அது சிறிதும் மிகையாகாது. அவர் மிகவும் விசாலமான இதயம் படைத்தவர். குமாரகிரியோ மிருகத்துக்கு ஒப்பானவன். அவனை மிருகம் என்று சொன்னாலுங்கூடத் தோஷமில்லை. அவன் தனக்கெனவே உயிர் வாழ்கிறான். இந்த உலகத்துக்கு அவன் வாழ்ந்தும் ஒன்றுதான்; வாழாமல் இருப்பதும் ஒன்றுதான். அவனுடைய வாழ்க்கை வியர்த்தமானது; வீணானது. அவன் வாழ்க்கையின் நியமங்களுக்கு எதிரிடையாகச் சென்று கொண்டிருக்கிறான். தன் சுகம் ஒன்றையே பெரிதாகக் கருதி, உலகத்தின் இன்ப துன்பங்களைக் கண்டு அஞ்சி அஞ்சிச் சாகிறான். ஆகவே குமாரகிரி மகாபாவி. அவனைப் போன்ற மகா பாவியை ஈரேழு பதினாலு உலகத்திலும் காண முடியாது!" என்று ஆணித்தரமாகவும், ஆனால் அதே சமயத்தில் மிகவும் பணிவாகவும் சொன்னான்.

"என், குழந்தாய் விசாலதேவா! நீ யோக நிஷ்டை பெற்ற யோகியாகக்கூட ஆகிவிட்டாயே! குமாரகிரி, பீஜகுப்தன் இவ்விருவரிலும் யார் பாவி என்று நீதான் சொல்லேன், பார்ப்போம்!" என்றார் மகாப்பிரபு ரத்னாம்பரர், விசாலதேவனைப் பார்த்து.

விசாலதேவன் மகாப்பிரபு ரத்னாம்பரருக்குத் தலைவணங்கினான். பிறகு, "மகாப்

அதற்கும் விடுமுறை!



முதல் வண்டு:—புஷ்பங்களெல்லாம் மூடிக் கிடக்கிறதே, ஏன்?

இரண்டாம் வண்டு:— இன்று ஞாயிற்றுக்கிழமை விடுமுறையென்று உனக்குத் தெரியாதா?



சித்திரலேகா! காதல் என்பது என்ன, தெரியுமா? காதலே ஒரு மாபெரும் தியாகம். காதல் வசப்பட்ட மனிதன் தன்னை மறந்து விடுகிறான். ஈருயிரும் ஓருயிராக ஒன்றி லயித்து விடுவதைத்தான் நாம் காதல் என்கிறோம். காதற் களத்தில் தவறு ஏற்படுவதேயில்லை. தவறு ஏற்படாதிருக்கும்பொழுது மன்னிப்பின் அவசியம் ஏது? நீ ஏதாவது குற்றம் செய்திருந்தால் அல்லவா நான் உன்னை மன்னிப்பதற்கு? என்ன இருந்தாலும் நான் மன்னித்ததாகச் சொல்லத் தான் வேண்டும் என்று நீ பிடிவாதமாக விரும்பினால் சொல்லி விடுகிறேன். அதற்கென்ன பிரமாதம்! இதோ சொல்லுகிறேன். சித்திரலேகா! நான் உன்னை மன்னித்தேன்; மன்னித்தேன்! போதுமா? இப்பொழுது உனக்குத் திருப்தி தானே?" என்று கேட்டான் பீஜகுப்தன். அப்பொழுது அவனுடைய முகத்திலே இலேசாக இள நகை தாண்டவமாடியது.


சித்திரலேகா பீஜகுப்தனுடைய பாதங்களைப் பிடித்துக்கொண்டு, "ஸ்வாமி! அப்படியானால் என்னை ஏற்றுக் கொள்ளுங்கள்!" என்று வேண்டினாள்.

"அது எப்படி முடியும், சித்திரலேகா? நானோ ஒரு பிச்சைக்காரன். என்னிடம் இருந்த ஐசுவரியங்கள் அனைத்தையும் நான் அர்ப்பணம் செய்துவிட்டேன். இப்பொழுதோ நான் பரம ஏழை: கையில் கால் காசு கூட இல்லாதவன். அப்படியிருக்கும் பொழுது உன் விருப்பம் எப்படி ஈடேற முடியும்?" என்று கேட்டான் பீஜகுப்தன்.

"ஸ்வாமி! தங்களிடம் இல்லாவிட்டால் என்ன? என்னிடம்தான் வேண்டிய மட்டில் ஐசுவரியம் இருக்கிறதே, அது போதாதா? நானே தங்களுடையவளாக இருக்கும் பொழுது, என்னுடைய தனம்—பணம் அனைத்துமே தங்களுடையது தானே? அப்படியிருக்கும் பொழுது தங்களை ஏழை என்று எப்படிச் சொல்ல முடியும்? தாங்கள் அநாவசியமாகத் தங்களைப் பிச்சைக்காரன் என்று ஏன் சொல்லிக் கொள்ள வேண்டும்? வேண்டாம். இனி அப்படிச் சொல்லாதீர்கள்" என்றாள் சித்திரலேகா.

"உன் ஐசுவரியமும் சொத்தும் என்னுடையதா? அவை எப்படி என்னுடையதாக முடியும்? உன் சொத்து என் உபயோகத்துக்கு உகந்ததல்ல; உன் சொத்தை நான் என் சொந்த உபயோகத்துக்கு ஏற்றுக் கொள்ளச் சிறிதும் சம்மதிக்கமாட்டேன். நான் என் ஐசுவரியங்கள் அனைத்தையும் உதறித் தள்ளிய பொழுது, அவற்றை மறுபடியும் ஏற்றுக் கொள்வது என்ற எண்ணத்தில் உதறித் தள்ளவில்லை. எக் காலத்துக்குமே அவை வேண்டாம் என்ற நோக்கத்துடன்தான் விட்டொழித்தேன். ஆகவே, நீ எவ்வளவு தான் சொன்னாலும் இவ்விஷயத்தில் நான் உன் சொல்லைக் கேட்க மாட்டேன். உனக்குச் சம்மதம் என்றால் நான் உன்னையும் என்னைப் போல ஒரு பிச்சைக்காரியாக ஏற்றுக் கொள்ளத் தயாராயிருக்கிறேன்" என்றான் பீஜகுப்தன்.

"சரி, அப்படியானால் அவ்வாறே ஆகட்டும்!" என்று சொல்லிக் கொண்டே சித்திரலேகா எழுந்தாள். பிறகு, "ஸ்வாமி! உலகத்தில் நாம் இருவரும் பிச்சைக்காரர்களாகவே சுற்றுவோம். காதல்! காதல் தான் நமக்கு ஆதாரம்; காதல் தான் நமக்கு ஊன்றுகோல். ஸ்வாமி! தாங்கள் தான் எனக்குக் கண் கண்ட தெய்வம். நான் இன்றைக்கே என் சொத்து முழுவதையும் தானம் செய்து விடுகிறேன். இன்றிரவே நாம் இருவரும் ஆழங்காண இயலாத இந்த சம்சார சாகரத்தில் காதல் என்னும் படகில் ஏறி உல்லாச யாத்திரைக்குப் புறப்படுவோம். தங்களுக்குச் சம்மதம்தானே!" என்று கேட்டான்.



முப்பத்தெட்டாம் அத்தியாயம்

கண்கண்ட தெய்வம்

பொழுது விடிந்ததும் சித்திரலேகா எழுந்து பீஜகுப்தனுடைய அறைக்கு வந்தாள். பீஜகுப்தன் ஏதேதோ சிந்தித்தவாறே படுக்கையில் படுத்திருந்தான். சித்திரலேகா அவனருகில் வந்து, "ஸ்வாமி! தயவு செய்து தாங்கள் எனக்குத் தங்களுடைய சரணாம்ருதத்தைத் தந்தருள வேண்டும்!" என்று வேண்டினாள்.

சித்திரலேகாவின் அம்மாதிரியான போக்கைக் காண பீஜகுப்தனுக்கு வியப்பு மேலிட்டது. "இது என்ன இது, சித்திரலேகா?" என்று கேட்டான்.

"ஸ்வாமி! நான் என்னைப் புனிதமாக்கிக் கொள்ள விரும்புகிறேன்; பரிசுத்தமாக்கிக் கொள்ள விரும்புகிறேன். கண வெறியில் கட்டுண்டு நான் நெறி தவறி விட்டேன். யோகி குமாரகிரியின் கையில் சிக்கி அவனுடைய காம வாசனையைத் தீர்த்துக் கொள்ளும் சாதனமாக, கருவியாக ஆகி விட்டேன். அவனுடைய காமாதுரத்துக்கு இலக்காகி என் வாழ்க்கையைப் பாழ்படுத்திக் கொண்டு விட்டேன். நான் கோபாவேசத்தில் கொதித்தெழுந்து தன் நிலை மறந்து என் உடலையே அவனிடம் ஒப்படைத்து விட்டேன். நெறி தவறித் தீயவழியில் சென்றதனால் என் உடல் களங்க முற்று விட்டது. என் உடலின் அந்தக் களங்கத்தைப் போக்கிப் பரிசுத்த மாக்கிக் கொள்ள விரும்புகிறேன்; புனிதமாக்கிக் கொள்ள விரும்புகிறேன்" என்று தன் உணர்ச்சி போன போக்கில் சித்திரலேகா சொல்லிக் கொண்டே போனாள். அதுமட்டும் அல்ல; ஆதியோடு அந்தமாகத் தன் கதை முழுவதையும் பீஜகுப்தனுக்குச் சொன்ன பிற்பாடு தான் அவள் மூச்சு விட்டாள்.

* * *

சிறிது நேரம் வரை அங்கே மௌனம் ஆட்சி செலுத்தியது. பீஜகுப்தனுக்கு என்ன பேசுவதென்றே புரியவில்லை. ஆகவே அவன் மௌனம் சாதித்தான். சித்திரலேகாவும் சிறிது நேரம் என்ன சொல்வது என்று ஒன்றும் புரியாமல் தயங்கினாள். சிறிது நேரத்துக்குப் பிறகு, அவளாகவே, "ஸ்வாமி! நான் தங்களிடம் இவ்வளவு நாட்களாக ஏன் வரவில்லை என்பதை இப்பொழுதாவது புரிந்து கொண்டிருப்பீர்கள் என்று நம்புகிறேன். என்னை மன்னித்தருள மாட்டீர்களா?" என்று கெஞ்சமாட்டாக் குறையாகக் கேட்டாள்.

"பூ! இவ்வளவுதானா? இந்தச் சின்ன விஷயத்துக்கா மன்னிப்பு?" என்று கேட்டவாறே பீஜகுப்தன் 'கடகட'வென்று நகைத்தான். பிறகு, "சித்திரலேகா! நீ மாபெரும் தவறு இழைத்து விட்டாய். நீ என்னைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. இவ்வளவு நாட்களும் என்னைச் சரியாகப் புரிந்துகொள்ளாமல் வீண் பிரமையில் உழன்றது உன் தவறு. நீ என்னிடம் மன்னிப்புக் கோருகிறாயே, எதற்காக?

கிருஷ்ண பரமஹம்ஸர். அஸ்திவாரம் சரியாகப் பலப்பட்டு நின்றால் பிறகு கட்டிடம் எந்த வகையில் எழுந்தாலும் பழுது இல்லை.

சஸ்திர வைத்தியர்கள் கத்தி எடுத்து அறுப்பதற்கு முன் என்ன செய்கிறார்கள்? கையையும் கத்தியையும் நன்றாகத் தோஷமறத் துலக்கிக் கொண்டே வேலை ஆரம்பிப்பார்கள். அவ்விதமாகவே, பொதுப் பணித் திட்டங்கள் போடுகிறவர்கள் முதலில் மனதை நன்றாகச் சுத்தி செய்து கொள்ள வேண்டும். இப்படிச் செய்தால் ஆண்டவன் அருளால் எல்லாம் சுகமாக முடியும். வெற்றிக்கும் சாந்த நிலைக்கும் வேறு சாதனமில்லை. ஆண்டவனைத் தியானித்து "எல்லாம் உன்னுடையது" என்று மனதை உறுதியான நிலையில் நிறுத்திக் கொள்ள வேண்டும் என்றால் வாயால் மந்திர மொழிகள் சொல்லி மனதை ஏமாற்றிக் கொள்வதல்ல. அவ்வித வற்றல் சடங்கினால் பயனில்லை. மனப்பூர்வமாகப் பக்தி செலுத்த வேண்டும். அதன் பின்னரே எந்த விதமான பொதுப் பணியும் ஆரம்பிக்க வேண்டும். ஆண்டவனை வேண்டிக் கொள்ளாமல் புகழுக்காக ஆரம்பிக்கும் பணி பொய்ப் பணியாகி, துக்கத்துக்கும் கோபத்துக்கும் அசூயைக்கும் விதை போட்டுப் பயிரிடுவதே யாகும்.



* * *

பொதுப் பணியில் ஈடுபடுவதற்கு முன் ராமகிருஷ்ணர் உபதேசப்படி ஆண்டவனைத் தியானித்து, பக்தி செய்வதுமல்லாமல், வேலையில் இறங்கிய பின்னும் எந்த நேரமும் எந்தத் தொண்டு செய்து கொண்டிருக்கும் போதும் ஆண்டவன் நினைவை மனதில் நிறுத்திக் கொண்டே வேலை செய்ய வேண்டும்.

பொது நல வேலை வேறு; சுவாமி பூசை வேறு என்று எண்ணுவது தவறு. எல்லாம் ஆண்டவன் வழிபாடாகவே எண்ணி வேலையைச் செய்யவேண்டும். கடவுள் நினைவு வைத்துக் கொண்டு வேலை செய்வது காரியத்துக்குத் தடையாகாது. எந்த வேலை செய்யும் போதும் பக்தி செய்து கொண்டே வேலை செய்வது, பழக்கத்தில் மகிழ்ச்சியாகவே முடியும். ஊக்கமும் தரும். வேலைத் திறமையும் தரும். மகாத்மா காந்தியடைந்த வெற்றிகளின் ரகசியம் இதுவே என்று நான் உறுதியாகச் சொல்லுவேன். மனிதன் நடக்கும் போது, கூடவே நிழல் செல்வதுபோல் அவர் செய்து நடத்திய எந்த வேலை, எந்தத் திட்டம், எந்த முயற்சியிலும் ஆண்டவனுடைய நினைவை உள்ளத்தில் எப்போதும் நிறுத்தி வந்தார். அவருடைய வேலைகளுக்கு அது தடையாக இருக்க வில்லை. வெற்றிக்கே காரணமாக இருந்தது. நாம் செய்யும் சிறு தொண்டுகளிலும் அவ்வாறே ஆண்டவன் நினைவு பக்கத்தில் நிழல் போல் நின்று ஆரவாரமின்றி மௌனமாக உதவி செய்யும். ஈசுவரனை எப்போதும் மனதில் வைத்துக் கொண்டு வேலை செய்வது பொதுப் பணிக்கு ஒரு இன்றியமையாத ஆசாரமாகும். சஸ்திர வைத்தியத்துக்குரிய துப்புரவு-ஆசாரத்தைப்போல் இந்த உள்ளத் துப்புரவு — ஆசார முறை பொதுப் பணிக்கு இன்றியமையாதது. பழுதற்ற மனம் என்பது ஒரு பெருஞ் செல்வமும் சாதனமுமாம். அதைப் பெறுவதற்கு பக்தி ஒன்றே வழி.

யாத படியால் உண்டாகின்றன. புகழும் பெயரும் அடைவதற்காக தேசப் பணியோ, சமூகப் பணியோ செய்யப் போனால் பிறகு துக்கம் அனுபவிப்பது நிச்சயம். பாவி ஆசையானது எந்த நல்ல பணியையும் கெடுத்துக் குட்டிச் சுவராக்கிவிடும். பிறருக்கு நன்மை செய்வதற்காகவோ அல்லது சமூகத் துக்குப் பணி ஆற்றவோ எந்தக் காரியத்திலாவது நாம் ஈடுபட்டால் அதை ஆண்டவனுடைய அருளுக்கு விட்டு விடுவோம். விட்டு விட்டால் வெற்றியடைந்தாலும் சரி, தோல்வியானாலும் சரி, மனக் கலக்கம் உண்டாகாது.


வெளிப்படையான சுய லாபத்துக்கோ, அல்லது மனதில் புகழாசை பொதிந்தோ, வேலையில் ஈடுபட்டால் அது சேவையாகாது. ஒருவித வியாபாரமாகும். தேச சேவை செய்த உத்தமர்கள் புகழும் பெயரும் அடைந்திருக்கிறார்கள் என்பது உண்மை. ஆனால், அவ்வாறு புகழடைந்தவர்கள் அதற்காக வேலையில் புகவில்லை. அவர்களுடைய புகழின் ரகசியமும், வெற்றிக்குக் காரணமும் புகழை எதிர்பார்க்காமல் வேலை செய்ததேயாகும். இதை உணராமல் அவர்களைப் போல் நாமும் புகழ் பெறலாம் என்ற ஆசையோடு ஆரம்பித்தவர்கள் தோல்வியும் ஏமாற்றமும் அடைவதை அடிக்கடி பார்க்கிறோம்.

• • •

ஒரு ஆசையுமில்லாமல் மனிதன் எப்படிப் பொதுப் பணி செய்ய முடியும் என்று சிலர் ஐயப்படலாம். அவ்வாறு ஐயப்படுகிறவர்கள் தங்கள் குடும்ப காரியங்களை மட்டும் கவனித்துக் கொண்டு யோக்கியமாகச் சொந்த வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்தாலே போதிய தேச சேவையாகும். பொதுநலப் பணியில் பிரவேசித்து ஏமாற்றமும் அருவருப்பும் அடைய வேண்டியதில்லை.

பற்றும் ஆசையும் இல்லாமல் பொதுநலச் சேவை செய்வது கடினம். ஆகையினால்தான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், "பகவானுடைய திருவருளைப் பெற்றுப் பொது வேலையில் இறங்குங்கள். 'ஆண்டவனே! என் உள்ளத்தில் பக்தியை நிறுத்து' என்று முதலில் வேண்டிக்கொள்ளுங்கள்" என்கிறார்.

பொதுக் காரியங்களில் இந்தக் காலத்தில் ஈடுபட்டு அலைப்புறும் மக்களுக்கு ஸ்ரீ ராமகிருஷ்ணர் செய்திருக்கும் எச்சரிக்கை மிகவும் முக்கியமானது. மெய் வருந்திப் பாடுபட்டு, பொருள் விரயம் செய்துவிட்டு, பட்ட சிரமமெல்லாம் வீணாயிற்றே என்று பலர் துக்கப்படுகிறார்கள். இதன் ரகசியம் முதலில் ஈடுபடச் செய்த மனப்பான்மையிலிருந்த தோஷமே. பாலில் விழுந்த மோர்த் துளிபோல், அந்தத் தோஷம் தன் வேலையைச் செய்து விடுகிறது. புகழும் பெயரும் சம்பாதித்து விடலாம் என்கிற ஆவலை அஸ்திவாரமாகக் கொண்டு கட்டின கட்டிடம் விழுந்ததும் துக்கம் ஏற்படாமல் வேறு என்னவாக முடியும்? இதனாலேதான் "பொதுப் பணியில் இறங்குவதற்கு முன் ஆண்டவனைத் துதியுங்கள்; பக்தி என்னும் புனித நீரைக் கொண்டு, மனதைக் கழுவிச் சுத்தப்படுத்திக் கொண்டு வேலை செய்யுங்கள்" என்றார் ஸ்ரீ ராம





14. பொதுப் பணி

ஒரு நாள் சில வாலிபர்கள் பரமஹம்ஸரிடம் வந்து, "நாங்கள் சமூதாயச் சேவையில் ஈடுபடுவதென்று நிச்சயம் செய்திருக்கிறோம்" என்று சொன்னார்கள்.

மிக உற்சாகமாயிருந்த அவர்களைப் பார்த்து ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் சொன்னார்:

"நீங்கள் தீர்மானித்திருக்கிற விஷயம் ரொம்பவும் சிலாக்கியமானது. சமூக கைங்கரியத்தில் ஈடுபடுவது மிக நல்ல யோசனை. ஆனால் முதலில் தெய்வ வழிபாடு செய்து தியானித்து உள்ளத்தைத் துப்புரவாக்கிக் கொண்டு பிறகு நீங்கள் தீர்மானித்திருக்கிற வேலையில் இறங்குங்கள். ஈசுவரத் தியானம் செய்தால் உங்களுக்குச் சக்தி உண்டாகும். பகவானை பக்தியோடு வேண்டிக் கொண்டால் சமூகத்துக்கு நன்மை செய்யும் திறன் உங்களுக்கு வந்து சேரும். நீங்கள் எடுக்கும் காரியங்களுக்கு வேண்டிய சாமர்த்தியமும் சௌகரியங்களும் ஆண்டவன் அருளால் பெறுவீர்கள். பகவானுடைய நாமங்களைச் சொல்லித் துதியுங்கள். அவனைப் பற்றிப் பக்தர்கள் பாடியிருக்கும் பாட்டுகளைப் பாடுங்கள். பிறகு உங்கள் காரியங்களை எப்படிச் செய்ய வேண்டும் என்பது உங்களுக்கு நன்றாக விளங்கும்."

* * *


எந்தப் பொதுக் கைங்கரியத்தில் இறங்கினாலும் தேசபக்தர்கள் ஸ்ரீ ராமகிருஷ்ணர் செய்யும் இந்த முக்கியமான உபதேசத்தைக் கவனிக்க வேண்டும்:—

"உலக நன்மைக்காக வேலை செய்யும் ஆசை மேலிட்டு, 'இதைச் செய்வோம், அதைச்செய்வோம்' என்று வேலைகளைத் தேடித் தேடி அலையாதீர்கள். சகஜமாக நேரும் பணியில் ஈடுபடுங்கள். புகழும் பெயரும் சம்பாதிப்பதை உத்தேசித்து இந்த வேலை சிறந்தது, அந்த வேலை சிறந்தது என்று அலையாதீர்கள். சமூகத்துக்கு உழைப்பதென்றால் எந்த விதமான புகழோ லாபமோ பெறும் யோசனையை விட்டுவிட்டுக் கடமைகளைச் செய்ய வேண்டும். 'ஆண்டவனே, எனக்குப் பக்தியை அருள்வாய்! பரிசுத்த உள்ளத்தோடு உழைக்கும்படி செய்வாய்!' என்று வேண்டிக் கொள்ளுங்கள்."

* * *

தேச சேவை பலவிதத்தில் செய்யலாம். பொதுப் பணி செய்வது மிக நல்லதானாலும் புகழ் சம்பாதிக்கலாம் என்கிற ஆசை வைத்துக் கொண்டு ஆரம்பிக்கக் கூடாது. புகழாசையானது பொது நலப் பணியாளர்களுடைய முயற்சிகளைச் சிக்கல் நேரிட்டபோது கோணல் மார்க்கங்களில் செலுத்திவிடும். புகழாசையும் வேறு சுயநலப் பற்றுகளும் வெளிப்படையாகவோ அல்லது உள்ளத்தில் அந்தரங்கமாக இருந்தோ மிக நல்ல முயற்சிகளையெல்லாம் பயனறச் செய்து விடுகின்றன.

"நான் பிறருக்காக இவ்வளவு பாடுபட்டேன், ஒன்றும் பலிக்கவில்லை" என்றிவ்வாறு பல தேச பக்தர்கள் வருத்தப்படுவதைப் பார்க்கிறோமல்லவா? இப்படித் துக்கமும் மனக்கசப்பும் உண்டாவதற்குக் காரணம் என்ன? ஒரு ஆசையை வைத்துக் கொண்டு வேலை செய்து அதை அடை-



ஜூன் 4ல் ஆஸ்தான கவிஞர் ஸ்ரீ நாமக்கல் ராமலிங்கம் பிள்ளை அவர்களுக்கு கரூர் அன்பர்கள் ஒரு பாராட்டு விழா நடத்தி மரியாதை செய்தனர். மேற்படி விழாவுக்குத் தலைமை வகித்த கனம் குமாரசாமி ராஜா அவர்களையும், திரு முடிப்பு வழங்கிய கோவை ஸ்ரீ வ. சி. பழனிச்சாமிக் கவுண்டர் அவர்களையும், விழாவைச் சிறப்பாக நடத்துவதற்கு முக்கிய காரண புருஷரான ஸ்ரீ முத்துசாமிக் கவுண்டர் அவர்களையும், சொற்பொழிவாற்றிய ஸ்ரீ வெங்கடரமணியாரையும், ஆஸ்தான கவிஞரையும் படத்தில் காணலாம்.

ஒரு வருடம் இலங்கையில் வசிக்கத் தற்காலிக வாச பர்மிட் கொடுக்கப்பட்டது. இப்பொழுது அவர் ரஜாவில் இந்தியா சென்று திரும்ப வேண்டியிருப்பதால் திரும்புவதற்குள் பர்மிட் காலாவதியாகி விடக் கூடுமென்பதற்காக அதை மேலும் ஓரிரண்டு ஆண்டுகளுக்கு நீடித்துக் கொடுக்குமாறு மனுச் செய்து கொண்டாராம். ஆனால் அந்த பர்மிட்டை நீடிப்பதற்கில்லை யென்று அதிகாரிகள் கண்டிப்பாகச் சொல்லிவிட்டதாய்க் கூறப்படுகிறது. இலங்கையிலுள்ள இந்தியர்களுக்கு ஒரு வருஷமோ அல்லது இரண்டு வருஷமோ இங்கிருக்கக் கொடுக்கும் வாசபர்மிட்டுகள் பிறகு புதுப்பிக்கப்படுமோ என்ற கேள்விக்கு மேற்படி சம்பவம் விடையாக இருக்கலாம்! இலங்கையில் காணி பூமி உடையவர்களின் கதியே இது என்றால் மற்றவர்களின் கதி என்னவோ? இலங்கையில் ஏற்கெனவே தொழில் நடத்தி வருபவர்கள் தொடர்ந்திருக்க அனுமதிக்கப் படுவார்களென்று பிரதமர் சேனநாயகா கூறிய உறுதிமொழி காப்பாற்றப்படுமா?

ஸ்ரீ தொண்டமான் யோசனை

இங்கிருந்து ரஜாவில் போகும் இந்தியத் தோட்டத் தொழிலாளர் இலங்கைக்குத் திரும்பும் பொழுது மண்டபத்தில் சுமார் பத்து தினங்கள் மறித்து வைக்கப்பட்டு அம்மை குத்தி வைத்திய பரிசோதனை செய்யப்படுகிறார்கள். இந்தியாவுக்குப் போகும் பொழுது அவர்கள் செலவுக்கு எழுபத்தைந்து ரூபாய்க்கு மேல் கொண்டு போகமுடிவதில்லை. ஓரிரண்டு மாதம் இந்தியாவில் தங்கி அதைச் செலவிட்டு மேலும் கடன்பட்டுக் கையில் காசில்லாமல் திரும்பும் பொழுது மண்டபத்திலும் மறித்து வைக்கப்படுவது மிகுந்த கஷ்டத்தை உண்டு பண்ணுகிறது. இதைத் தடுக்க இமிகிரேஷன் சபையில் ஸ்ரீ தொண்டமான் ஒரு சிறந்த யோசனை சொல்லியிருக்கிறார். தொழிலாளருக்கு இந்தியாவுக்குப் போகும் பொழுதே இந்த அம்மை குத்தி வைத்தியச் சடங்குகளை யெல்லாம் செய்து விட்டால் அவர்களுக்கு இந்தியாவில் தொத்து நோய் ஏற்படாமல் தடுக்க உதவுவதோடு, திரும்பும் பொழுது மண்டபத்தில் தடுத்து வைக்க வேண்டிய அவசியமும் இருக்காதென்று ஸ்ரீ தொண்டமான் சொல்லிய யோசனையை இமிகிரேஷன் சபையும் ஒப்புக் கொண்டிருக்கிறது. கூடிய சீக்கிரம் இந்த யோசனை அமுலுக்கு வருமாயின் அது இந்தியத் தொழிலாளருக்குப் பெரிதும் நன்மையாக இருக்கும்.

உறுதி மொழி காப்பாற்றப்படுமா?

ரஜனி

கொழும்பு, ஜூன் 7—

இலங்கைக்கு விஜயம் செய்திருக்கும் இந்தியாவின் சட்ட மந்திரி டாக்டர் அம்பேத்காருக்குச் சென்ற ஞாயிற்றுக் கிழமை ஹட்டன் நகரில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஒரு வரவேற்பளித்தது. அப்போது டாக்டர் அம்பேத்கார் இலங்கை இந்தியர் பிரச்னையைப் பற்றி நீண்ட நேரம் பேசினார். பிரஜா உரிமைச் சட்ட பகிஷ்காரத்தை வாபஸ் பெற்று இந்தியர்களைப் பல்லாயிரக் கணக்கில் பிரஜைகளாகப் பதிவு செய்வதென்று காங்கிரஸ் தீர்மானித்திருப்பதைப் பாராட்டி விட்டு, இந்தியாவைப் போல் சுதந்திர தேசமாகிய இலங்கைக்கும் விருப்பமான சட்டங்களை இயற்றும் உரிமை பரிபூரணமாக உண்டென்றும், ஆயினும் இந்திய காங்கிரஸின் மனோபாவம் மாறி ஒத்துழைப்பு மனப் பான்மை காட்டினால் இலங்கை அரசாங்கமும் பிரஜா உரிமைச் சட்டத்திலுள்ள கடுமையான நிபந்தனைகளை நீக்க முன் வரக்கூடுமென்றும் அவர் சொன்னார். இந்திய அரசாங்கத்திடம் இலங்கை இந்தியர்கள் உதவியை எதிர் பார்ப்பதில் பயனில்லையென்பதையும் அவர் தெளிவாகக் குறிப்பிட்டார். இலங்கையின் அபிலாஷைகளில் இந்தியரும் பூரணமாக பங்கு பற்றி, இலங்கை அரசாங்கத்துடன் ஒத்துழைத்தால் அவர்களுடைய கஷ்டங்களுக்கெல்லாம் நிச்சயமாகப் பரிகாரம் ஏற்படுமென்றும் கூறினார்.

கமிஷனரின் நல்லெண்ணம்

இந்தியர்களையும் பாகிஸ்தானியர்களையும் இலங்கைப் பிரஜைகளாகப் பதிவு செய்து கொள்ளும் கமிஷனர் ஸ்ரீ வி. எல். வீரசிங்க கல்யாணமான மனுதாரர்களிடமிருந்து சட்டம் கோருவதை விட அதிகப்படியான தகவல்களைக் கேட்பதாக முன் ஒரு சமயம் இலங்கைக் கடிதத்தில் குறிப்பிடப் பட்டிருந்தது. இதைப் பற்றி நீர விசாரித்த பொழுது மனுதாரர்களுக்குக் கூடிய மட்டில் உதவி புரிய வேண்டுமென்ற நல்லெண்ணத்துடனேயே அதிகப்படியான தகவல்களைக் கமிஷனர் கேட்பதாகத் தெரிகிறது. சட்டப் பிரகாரம் கல்யாண மானவர்கள் 1-1-1939 முதல் இலங்கையில் தொடர்பாக வசித்திருந்தால்தான் பிரஜா உரிமை பெற முடியும். ஆனால் யுத்த காலத்தில் இலங்கை மீது ஜப்பானியர் குண்டு வீசிய பொழுது அநேகர் தங்களுடைய மனைவி மக்களை இந்தியாவுக்கு அனுப்பி விட்டார்கள். 1942-ம் ஆண்டில் சென்ற இந்தக் குடும்பங்கள் 1946-ம் ஆண்டு வரை இலங்கைக்குத் திரும்பவில்லை. யுத்த காலத்தில் இந்தக் குடும்பங்கள் இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளின் படியே இந்தியாவுக்குச் சென்றன. ஆதலால் பிரஜா உரிமை பெற இதை ஒரு தடையாகக் கொள்ளக் கூடாதென்று இந்திய-இலங்கை ஒப்பந்தப் பேச்சுகளின்பொழுது பண்டித நேரு வற்புறுத்தியதை இலங்கைப் பிரதமரும் ஒப்புக் கொண்டிருக்கிறார்.


எனினும் சட்டப்படிப் பார்த்தால் யுத்த காலத்தில் இந்தியாவுக்குச் சென்ற எல்லாக் குடும்பங்களுக்கும் பிரஜா உரிமை கிடைப்பதற்கில்லை. ஆகையால் 1939-ம் ஆண்டுக்கு முன்பு கல்யாண மாகியவர்கள் கல்யாணமான தேதியிலிருந்து மனைவியுடன் இலங்கையில் வசித்தவரா யிருந்தால் யுத்த காலத்தில் குடும்பம் இந்தியாவுக்குச் சென்றதைப் பொருட்படுத்தாமல் இவர்களைப் பிரஜைகளாகப் பதிவு செய்து கொள்ள கமிஷனர் தயாரா யிருக்கிறார் என்று கூறப்படுகிறது.

உறுதிமொழி காப்பாற்றப்படுமா?

பிரஜைப் பதிவு கமிஷனர் தாராள மனப்பான்மையுடன் நடந்து கொள்ளுகிறாரென்றாலும் இமிகிரேஷன் இலாகா சம்பந்தப்பட்ட வரையில் அவ்வாறு கூறுவதற்கில்லை. இலங்கையில் சமார் நூறு ஏகரா காணியுடைய ஓர் இந்தியருக்குச் சென்ற நவம்பர் மாதம்

அறிவிப்பு

இந்த மாதம் 17, 18 தேதிகளில் "கல்கி" ஆசிரியர் கொழும்புக்குச் சென்று தமிழ்ச் சங்க ஆண்டு விழாவில் கலந்து கொள்வார் என்று அறிவிக்கப் பட்டிருந்தது. எதிர்பாராத காரணங்களினால் "கல்கி" ஆசிரியர் தற்சமயம் கொழும்புக்குச் செல்ல இயலவில்லை. வருகிற ஜூலை அல்லது ஆகஸ்டு மாதத்தில் செல்லக்கூடும்.



ஜயஸ்தம்பம்

இந்திய சுதந்திரப் போராட்டத்தில் 1930-ம் வருஷம் நடந்த உப்பு சத்தியாக்கிரகம் சரித்திரப் பிரசித்தி பெற்றதாகும். காந்திமகான் தலைமையில் தண்டியில் உப்பு சத்தியாக்கிரகப் போர் நடந்தபொழுது தென் இந்தியாவில் வேதாரண்யத்தில் உப்பு சத்தியாக்கிரகம் நடந்தது. ராஜாஜியின் தலைமையில் திருச்சியிலிருந்து வேதாரண்யம் வரை கால்நடையாகச் சென்ற தொண்டர்படைக்குத் தஞ்சை ஜில்லா வாசிகள் ராஜோபசாரம் செய்து வரவேற்பளித்தனர். அதனால் தஞ்சை ஜில்லா வாசிகளும் உப்பு சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்ட பல தொண்டர்களும் அதிகார வர்க்கத்தின் அடக்குமுறைக்கு உள்ளாக நேர்ந்தது. அந்த அடக்குமுறைகளை வென்று, வேதாரண்யம் சென்று, இயற்கையின் எழில் நிரம்பிய இடையக் தீவில் ஸ்ரீ சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் கதிரவன் உதித்து உலகைப் புனிதமாக்கத் தொடங்கும் காலை வேளையில் உப்பை அள்ளி ஏகாதிபத்திய சட்டத்தை உடைத்தெறிந்து கைது செய்யப்பட்டார். அவருக்குப் பிறகு, இப்பொழுது ரயில்வே உதவி மந்திரியாக இருக்கும் கனம் கே. சந்தானம் உப்புப் போருக்குத் தலைமை தாங்கிக் கைது செய்யப்பட்டார். இந்தப் புனிதமான போராட்டம் வேதாரண்யத்தில் நடைபெறுவதற்குக் காரண கர்த்தாவாயிருந்த சர்தார் வேதரத்தினம் அவர்களின் பெருமுயற்சியால் ராஜாஜி உப்பு அள்ளிய சரித்திரப் பிரசித்திபெற்ற இடையக் தீவில் இப்போது ஒரு ஞாபகார்த்த ஜயஸ்தம்பம் கட்டப்பட்டிருக்கிறது.

இந்த ஞாபகார்த்த ஜயஸ்தம்பத்தைக் கட்டி முடிப்பதற்கான செலவை வேதாரண்யம் ஸ்ரீ என். கே. சுப்பையாப் பிள்ளையும் ஜயஸ்தம்பம் கட்டுவதற்கு வேண்டிய நிலத்தை வேதாரண்யம் ஸ்ரீ ஏ. வி. ராமய்யாப் பிள்ளையும் மனமுவந்து அளித்தார்கள்.

சென்ற 30–5–50 அன்று மாலை மேற்படி ஜயஸ்தம்பத்தை உதவி ரயில்வே மந்திரி கனம் சந்தானம் திறந்து வைத்தார். சர்தார் வேதரத்தினம் பிள்ளை எம்.எல்.ஏ. விழாவில் கலந்து கொண்ட எல்லாருக்கும் நன்றி கூறினார்.

உப்பு சத்தியாக்கிரக ஜயஸ்தம்பத்தையும் அதைக் கட்டுவதற்குப் பெருமுயற்சி செய்த சர்தார் வேதரத்தினம் பிள்ளையையும் ஜயஸ்தம்பத்தின் திறப்பு விழாவை நடத்திய கனம் கே. சந்தானம் அவர்களையும் மேலே உள்ள படத்தில் காணலாம்.

முதலாவது மகா யுத்தத்துக்குமுன் வடகிழக்கு நியூகினி ஜெர்மனியின் காலனியாக இருந்து வந்தது. அந்த யுத்தம் முடிந்தபின் சர்வதேச சங்கம் மேற்படி பகுதியை ஆஸ்திரேலியாவின் நிர்வாகத்தில் ஒப்புவித்தது. அது இன்று ஆஸ்திரேலியாவுக்குச் 'சொந்தமாக' இருப்பதற்குக் காரணம் அதுதான்.

பிரிட்டிஷ் நியூகினியின் விஸ்தீரணம் 90,540 சதுர மைல்கள். ஜனத்தொகை சுமார் மூன்றரை லட்சம்.

ஆஸ்திரேலிய நியூகினியின் விஸ்தீரணம் 93 000 சதுர மைல்கள். ஜனத்தொகை ஆறேமுக்கால் லட்சம்.

டச்சு நியூகினியின் விஸ்தீரணம் லட்சத்து 61 ஆயிரம் சதுர மைல்கள். ஜனத்தொகை மூன்றரை லட்சம்.

இரண்டாவது மகா யுத்தம் நடந்த போது இந்தோனேஷ்யா முழுவதையும் ஜப்பானியர் கைப்பற்றினர்.


இந்தோனேஷ்யாவுக்குச் சுதந்திரம் கிடைத்து விட்டதெனினும் நியூகினியை பிரிட்டனும் ஆஸ்திரேலியாவும் நெதர்லண்ட்சும் விட மனமில்லாமல் இருந்து வருகின்றன. நியூகினியும் இந்தோனேஷ்யாவின் நிர்வாகத்துக்கு வந்தாலன்றி இந்தோனேஷ்யாவின் சுதந்திரம் பூர்த்தி பெற்றதாக ஆகாது.

ஸெலிபிஸ்: இந்தத் தீவு போர்னியோவுக்கும் மொலுக்காஸ் தீவுகளுக்கும் மத்தியில் இருக்கிறது. ஸெலிபிஸ் தீவின் விஸ்தீரணம் 72,986 சதுர மைல்கள் ஆகும். அங்கு நாற்பத்திரண்டு லட்சம் ஜனங்களுக்கு மேல் இருக்கிறார்கள்.

மற்ற இந்தோனேஷ்யத் தீவுகளைப் போல ஸெலிபிஸ் தீவிலும் தங்கம், கந்தகம், நிலக்கரி, தாமிரம், ஈயம் முதலியவை உற்பத்தியாகின்றன. அத் தீவின் மலைகளிலிருந்து வைரம் முதலிய நவரத்னக் கற்களும் கிடைக்கின்றன. மேற்படி தீவும் விவசாயத்துக்கு ஏற்றதாக இருப்பதால் அங்கு காப்பி, நெல், பழவகைகள் முதலியவை கிடைக்கின்றன.


இந்தோனேஷ்யா ஆசியா கண்டத்தில் முக்கிய ஸ்தானம் வகிப்பதுடன், உலகத்திலேயே முஸ்லிம்கள் அதிகமாக உள்ள தேசமாகவும் விளங்குகிறது.

எனவே, யுத்தமாயினும் சமாதானமாயினும் ஆசியாவின் எதிர்கால விதியை நிர்ணயிப்பதில் முக்கிய பங்கெடுத்துக் கொள்ள வேண்டிய ஒரு சில நாடுகளில் இந்தோனேஷ்யாவும் ஒன்று என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை.



பிருந்தாவதி - ராதா கிருஷ்ணன்

கடலூர் முனிஸிபல் கவுன்ஸிலரும் கால்டெக்ஸ் ஏஜெண்டுமான ஸ்ரீ என். வி. பாஷ்யம் ரெட்டியார் குமாரன் சி. வி. ராதாகிருஷ்ணனுக்கும் புதுவையைச் சேர்ந்த பாளையம் பிரபல மிராசுதார் ஸ்ரீ பி. வி. புருஷோத்தம ரெட்டியார் குமாரத்தி சௌ. பிருந்தாவதிக்கும் 5-6-50ல் கடலூர் மணமகன் இல்லத்தில் விவாஹம் வெகு சிறப்பாக நடைபெற்றது. பல பிரமுகர்களும் உறவினர்களும் விஜயம் செய்து தம்பதிகளை வாழ்த்தி, பரிசுகளும் வழங்கினர். மேற்படி திருமண வைபவத்தில், குமாரி கமலா பரத நாட்டியமும், ஸ்ரீமதி எம். எல். வஸந்த குமாரி இன்னிசைக் கச்சேரிகளும் நடைபெற்றன.



இரட்டைக் கொம்பு காண்டா மிருகம்.

அநேகமாக சீதோஷ்ண நிலை குளிர்ச்சியாகவே இருக்கும்.

பல பல ஆண்டுகளுக்கு முன் பாலி எரிமலைகள் தீயைக் கக்கியதால் எத்தனையோ நகரங்களும் கோவில்களும் அழிந்து போயிருக்கின்றன. அதன் காரணமாக பாலி மக்களிடையே மூட நம்பிக்கை மிகவும் அதிகமாக இருந்து வருகிறது.

சாதாரணமாக மனிதரின் வாழ்க்கை சுக துக்கங்களும் கஷ்ட நஷ்டங்களும் தோன்றி மறையும் நாடகத்தைப் போன்றது என்கிறார்கள் அல்லவா? ஆனால் பாலி மக்களின் வாழ்க்கையை நாடகமயமாக இருக்கிறது என்பதைக் காட்டிலும் நடனமயமாக இருக்கிறது என்பதே பொருத்தமாக இருக்கும். அவர்களின் நடையுடை பாவனை எல்லாம் நாட்டியக் கலையையே அடிப்படையாகக் கொண்டு அமைந்திருக்கிறது எனலாம்! பாலித் தீவுக்குச் சிறப்பைக் கொடுத்து அது உலகப் பிரசித்தி பெற்று விளங்குவதற்குக் காரணம் அந்தத் தீவிலுள்ள பண்டைய நாகரிகமும், பாலி மக்களின் நடனத் தேர்ச்சியும்தான்.

★

போர்னியோ: உலகத்திலுள்ள பெரிய தீவுகளில் போர்னியோ மூன்றாவது ஸ்தானம் வகிக்கிறது. அந்தத் தீவு சிங்கப்பூருக்குக் கிழக்கே நானூறு மைல்களுக்கு அப்பால் இருக்கிறது.

போர்னியோ இந்தோனேஷியத் தீவுகளில் ஒன்று என்றாலும், அதில் நாலில் ஒரு பாகமான ஸரவாக முதலிய பிரதேசங்கள் இன்றும் பிரிட்டனுக்குச் சொந்தமாக இருந்து வருகின்றன — சுதந்திர இந்தியாவில் கோவாவும் பிரஞ்சு இந்தியப் பிரதேசங்களும் இருப்பதைப் போல!

போர்னியோ சுமார் 2 லட்சத்து 90 ஆயிரம் சதுரமைல் விஸ்தீரணம் உள்ளது. இங்கிலாந்தைப்போல் சுமார் நாலு மடங்கு பெரியது. அதன் மொத்த ஜனத்தொகை கால் கோடியாகும்.

போர்னியோ மலைகள் அதிகம் உள்ள பிரதேசம். அந்தத் தீவின் பெரும் பகுதி சதுப்பு நிலமாக இருப்பதால் அது ஆரோக்கியத்துக்கு உகந்த இடம் அல்ல. எனினும் மற்றக் கிழக்கிந்தியத் தீவுகளைப் போல் போர்னியோவும் இயற்கைச் செல்வம் கொழிக்கும் இடமாகும்.

பெட்ரோல், ரப்பர் இவ்விரண்டும் போர்னியோவில் அதிகமாக உற்பத்தியாகின்றன. உலகத்துக்குத் தேவையான ரப்பரில் பன்னிரண்டில் ஒரு மடங்கு போர்னியோவில் உற்பத்தியாகிறது என்று கணக்கிட்டிருக்கிறார்கள்.

இவற்றைத் தவிர வைரம், தங்கம், தாமிரம், இரும்பு, ஈயம் முதலிய சுரங்கங்களும் அங்கு இருக்கின்றன. நெல், காப்பி, புகையிலை, சர்க்கரை, பருத்தி முதலியவையும் அங்கு உற்பத்தியாகின்றன.

அந்தத் தீவில் ரயில் பாதையின் மொத்த நீளம் 127 மைல்கள்தான். எனவே, சாமான்கள் போக்குவரத்து பெரிதும் படகுகளின் மூலம் ஆறுகளின் வழியாகவே நடைபெறுகின்றன.

★

நியூ கினி: ஆஸ்திரேலியாவுக்கு வடக்கே சுமார் எண்பது மைல் தூரத்தில் நியூ கினி இருக்கிறது. பசிபிக் மகா சமுத்திரத்தில் உள்ள பெரிய தீவுகளில் நியூ கினி முதல் ஸ்தானம் வகிக்கிறது. அதன் விஸ்தீரணம் மூன்று லட்சத்துப் பத்தாயிரம் சதுர மைல்கள் ஆகும். நியூகினியின் நடுவே இன்னும் பல இடங்கள் கண்டு பிடிக்கப்படாமல் இருக்கின்றன.

அங்கு பலவிதமான பழ வகைகள் உற்பத்தியாகின்றன. கொப்பரைதான் நியூ கினியின் முக்கியமான ஏற்றுமதி வியாபாரம். அங்கு தங்கம், வெள்ளி பிளாடினம் சுரங்கங்களும் இருக்கின்றன.

நியூகினித் தீவு மூன்று பிரிவுகளாக இருக்கிறது. அவற்றில் ஒரு பிரிவு பிரிட்டனுக்கும் மற்றொரு பிரிவு ஆஸ்திரேலியாவுக்கும் மூன்றாவது பிரிவு நெதர்லண்ட்சுக்கும் சொந்தமாக இருக்கின்றன.

இந்தோனேஷியாவுக்குச் சுதந்திரம் அளித்த டச்சு சர்க்கார் தங்களுக்குச் சொந்தமான நியூகினிப் பகுதியையும் இந்தோனேஷிய சர்க்காரிடம் ஒப்புவித்திருக்கவேண்டும். ஆனால் அவர்கள் அவ்வாறு ஒப்புவிக்கவில்லை. பிரிட்டனும் ஆஸ்திரேலியாவும் தங்கள் பகுதிகளை வைத்துக் கொண்டிருக்கையில் தாங்கள் மாத்திரம் ஏன் அதைக் கைவிட வேண்டும் என்று டச்சுக்காரர்கள் நினைத்திருக்கலாம். அது சம்பந்தமாக இந்தோனேஷியாவுக்கும் நெதர்லண்ட்ஸ், ஆஸ்திரேலியா நாடுகளுக்கும் தகராறு புகைந்து கொண்டிருக்கிறது.

ஜாவாவில் உள்ள ஆடவர்களிலும் பெண்களிலும் ஏராளமானவர்கள் நடனத்தில் தேர்ச்சி பெற்றவர்களாக இருப்பது அந்த நாட்டின் விசேஷ அம்சமாகும்.

ஜாவாத் தீவு ஒப்பற்ற இயற்கை அழகு வாய்ந்ததுடன், மிகச் செழுமையாகவும் இருக்கிறது. சுமத்ராவைப் போல ஜாவாவிலும் எரிமலைகள் ஏராளமாக இருக்கின்றன. அங்குள்ள எரிமலைகளே அதன் செழுமைக்குக் காரணம் என்று கூறுகிறார்கள்.

ஜாவாவை மிகவும் ரம்மியமான ஒரு பெரும் நந்தவனம் எனலாம். மரங்கள் அடர்ந்து பச்சைப் பசேலென்று காட்சி யளிக்கும் மலைகள், மலைகளின் சிகரங்களை எப்போதும் மறைத்துக் கொண்டிருக்கும் மேக மண்டலங்கள், ஏராளமான எரிமலைகள், புராதனக் கோவில்கள், நெல் வயல்கள் இவை எல்லாம் உலக யாத்திரிகர்களின் மனதைக் கொள்ளை கொள்ளும் நிரந்தரக் காட்சிகளாக விளங்குகின்றன.

ஆயிரம் வருஷங்களுக்கு மேற்பட்ட ஏராளமான ஹிந்து ஆலயங்களும் புத்த ஆலயங்களும் ஜாவாவில் இருப்பதிலிருந்து அங்கு ஹிந்துக்களின் நாகரிகமும் செல்வாக்கும் வேரூன்றி யிருப்பது நிதர்சனமாகத் தெரிகிறது. மேற்படி ஆலயங்களில் பல காலத்தினால் அழிந்து விடாமல் சமீபத்தில் நிர்மாணிக்கப்பட்டவை போல் இருக்கின்றன. அந்த ஆலயங்களுள் ஜாவாவின் தலை நகரிலிருந்து சில மைல்களுக்கு அப்பாலுள்ள போரோபுதூர் ஆலயம் உலகப் பிரசித்தி பெற்றதாகும். அதை உலக அதிசயங்களில் ஒன்று என்று சொல்லலாம். (போரோபுதூர் ஆலயத்தின் படம் சென்ற இதழில் வெளியாகி யிருக்கிறது.)

ஜாவாவில் சைலேந்திர சாம்ராஜ்யம் ஏற்பட்ட காலத்திலே போரோபுதூர் ஆலயம் நிர்மாணிக்கப் பட்டது. தமிழ் நாட்டின் சிற்பக் கலையை ஒட்டி சிருஷ்டிக்கப்பட்டுள்ள அந்த ஆலயம் மலையிலேயே செதுக்கப்பட்டதாகும். மேற்படி ஆலயத்தின் ஸ்தூபிகளிலும் சுவர்களிலும் புத்த மகானின் வாழ்க்கையை விவரமாகக் காட்டும் ஏராளமான சித்திரங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன. அந்த ஆலயத்தின் சிகரங்களைச் சிற்பக் கலையின் சிகரங்கள் என்று கூறுவது மிகையாகாது!

கவியரசர் ரவீந்திரநாததாகூர் பல வருஷங்களுக்கு முன் ஜாவாவுக்கு விஜயம் செய்தபோது மேற்படி ஆலயத்துக்கு அருகில் ஓர் ஆலமரத்தின் செடியை நட்டார். அந்தச் செடி இப்போது வளர்ந்து ஜாவாவிலுள்ள இந்தியர்களுக்கு ஒரு புனித யாத்திரை ஸ்தலமாக இருந்து வருகிறது.

புராணங்களும், பாரதம், ராமாயணம் முதலிய இதிகாசங்களும், காளிதாசன் எழுதிய நாடகங்களும், வியாகரணம், வேதாந்தம் முதலிய சாஸ்திரங்களும் இன்றும் ஜாவாவில் பிரபலமாக இருந்து வருகின்றன. மேற்படி நூல்கள் ஜாவா மக்களின் பாஷையில் இருக்கின்றன. ராமாயணத்தில் 'யவத்வீபம்' என்று இருப்பது ஜாவாவையே குறிப்பிடுகிறது என்பதை ஆதார பூர்வமாக நிர்ணயித்திருக்கிறார்கள். பஞ்ச தந்திரம், நீதி சாஸ்திரம் முதலிய நூல்களும் ஹிந்து வேதங்களிலுள்ள மந்திரங்களும்கூட ஜாவா பாஷையில் இருக்கின்றன. இதிலிருந்து கிறிஸ்துவ சகாப்தத்துக்கு வெகு காலத்துக்கு முன்பே பாரத நாட்டுக்கும் ஜாவா முதலிய தீவுகளுக்கும் தொடர்பு இருந்திருக்க வேண்டும் என்பது சந்தேகமின்றி நிச்சயமாகத் தெரிகிறது.

★

* பாலி: சுமார் பத்து லட்சம் ஜனத் தொகையுள்ள பாலித்தீவின் விஸ்தீரணம் இரண்டாயிரத்து இரு நூறு சதுர மைல்களுக்கு மேற்பட்டது. சுமத்ரா, ஜாவாத் தீவுகளில் இருப்பதைப்போல் இங்கும் ஐயாயிரம் அடியிலிருந்து பத்தாயிரம் அடி உயரம் உள்ள பல எரிமலைகள் இருக்கின்றன.

பாலித்தீவின் அழகையும் பாலி மக்களின் வனப்பையும் விசித்திர நடன வகைகளையும் பார்ப்பதற்கென்றே பல நாடுகளிலிருந்தும் யாத்திரிகர்கள் அங்கு வருஷம் முழுவதும் வந்த வண்ணமாக இருக்கிறார்கள். அங்கு வருஷம் முழுவதும்



பாலித் தீவிலுள்ள ஆடவர்.

* பாலி மக்களின் நடனக் காட்சியை இந்த இதழ் அட்டையில் காணலாம்.



சோளக் கொண்டைகளைப் பாதுகாக்க ஜாவா மக்கள் கையாளும் விசித்திர முறை. படத்தில் காணும் விதம் அவற்றை மரங்களில் தொங்க விடுகிறார்கள்.

மூன்றில் ஒரு மடங்கு பேர் ஜாவாவிலும் மதுராவிலும் மாத்திரம் வாழ்கிறார்கள்.

இந்தோனேஷ்யர்களில் ஏழு கோடி பேர் முஸ்லிம்கள். அவர்கள் யாவரும் ஆதியில் ஹிந்துக்களாக இருந்தவர்கள். கிறிஸ்துவர்களும், சீனர்களும், ஹிந்துக்களுமாக மொத்தம் அரைக் கோடி பேர் இருக்கிறார்கள்.

இந்தோனேஷ்யாவின் ஆதிக் குடி மக்கள் நெல் விவசாயிகளாகவும் செம்படவர்களாகவும் இருந்தார்கள் என்று பண்டைய சரித்திரம் கூறுகிறது.

★

சுமத்ரா: சுமத்ரா ஒன்றரை லட்சம் சதுரமைல் விஸ்தீரணமும் எண்பது லட்சம் ஜனத்தொகையும் உள்ள தீவு. அந்தத் தீவில் காடுகள் அதிகமாக இருப்பதால் காண்டா மிருகங்கள், மனிதக் குரங்குகள் முதலிய பல வகை மிருகங்கள் ஏராளமாக இருக்கின்றன. சுமத்ராவிலுள்ள அபூர்வமான ஒரு வகை மானை வேட்டையாடுவதற்காகப் பல தேசங்களிலிருந்தும் வேட்டையாளர்கள் வருவது உண்டு. இவற்றைத் தவிரப் பிரம்மாண்டமான மலைப் பாம்புகளும் பெரிய பெரிய ஸர்ப்பங்களும் அங்கு அதிகமாக இருக்கின்றன.

சுமத்ராவில், ஈயம், வெள்ளி கந்தகம், நிலக்கரி முதலிய சுரங்கங்கள் இருக்கின்றன. இதைத் தவிர தேக்குமரங்களுக்கும் அந்தத் தீவு பிரசித்தி பெற்றது. சென்ற பல வருஷங்களாக அங்கு காடுகளை வெட்டி ரப்பர் தோட்டங்கள் போடப் பட்டிருப்பதால் ரப்பர் உற்பத்தியிலும் சுமத்ரா முக்கிய ஸ்தானம் வகிக்கிறது.

சுமத்ராவில் மிகச் செழுமையுள்ள பள்ளத்தாக்குகளில் மிளகு, புகையிலை, நெல், காப்பி, தேயிலை முதலியன விளைகின்றன. மேற்படி தீவில் பெட்ரோலும் உற்பத்தியாகிறது.


நூற்றுக்கணக்கான எரிமலைகள் இருப்பது சுமத்ராவின் விசேஷ அம்சம்! அவற்றில் சில எப்போதும் குமுறிக் கொண்டும் தீயைக் கக்கிக் கொண்டும் இருக்கின்றன. எரிமலைகளுக்கு நேர்மாறாக ரோஜா புஷ்ப நந்தவனங்களும், நீர் வீழ்ச்சிகளும், மலைத் தொடர்களும், நெல் வயல்களும் சுமத்ராவின் இயற்கை அழகை அதிகப் படுத்துகின்றன.

★

ஜாவா: இந்தோனேஷ்யத் தீவுகளில் ஒன்றான ஜாவா சுமத்ராவைக் காட்டிலும் விஸ்தீரணத்தில் சிறியதாயினும், ஜன நெருக்கத்தில் ஜாவாவைப் போன்ற பிரதேசம் உலகிலேயே வேறு எங்கும் இல்லை.

ஐம்பதாயிரம் சதுர மைல் விஸ்தீரணம் உள்ள ஜாவாவில் நாலு கோடி ஜனங்களுக்குமேல் இருக்கிறார்கள். இவ் விஷயத்தில் ஜாவாவுக்கும் சுமத்ராவுக்கும் உள்ள முக்கியமான வேற்றுமையைக் கவனியுங்கள்!

ஜாவாவின் செல்வமும் செழுமையுமே அங்கு ஜனக்கூட்டம் அதிகமாக இருப்பதற்குக் காரணம். ஜாவா மக்கள் திறமையும் உழைப்பும் மிக்கவர்கள். நெசவுத் தொழிலிலும் சாயமேற்றுவதிலும் பித்தளை வெள்ளி சாமான்கள் செய்வதிலும் அவர்கள் உலகப் பிரசித்தி பெற்று விளங்குகிறார்கள்.



புத்த க்ஷேத்திரம்

இந்தோனேஷ்யா (தொடர்ச்சி)

சமுத்திரத்தில் ஆயிரக் கணக்கான மைல் நீளமுள்ள பிரம்மாண்டமான ஒரு பாலம் இருப்பதாகக் கற்பனை செய்து கொள்ளுங்கள். அந்தப் பாலத்தில் ஆங்காங்கு ஆயிரக்கணக்கான இடங்கள் ஜலப் பெருக்கில் மூழ்கி விட்டதாகவும் கற்பனை செய்து கொள்ளுங்கள். அப்போது மேற்படி பாலத் தொடர் மறைந்து அது பல திட்டுகளாகக் காட்சியளிக்கும் அல்லவா? இந்தோனேஷ்யாவின் பூகோள அமைப்பும் அது போலவே இருக்கிறது. சுமத்ராவிலிருந்து எத்தனையோ மைல்களுக்கு அப்பாலுள்ள ஆஸ்திரேலியா வரையில் இந்தோனேஷ்யத் தீவுகள் சமுத்திரத்தில் வரிசை வரிசையாக இருக்கின்றன.

மகா சமுத்திரத்தில் மூவாயிரம் மைல் தூரத்துக்குப் பரந்து கிடக்கும் முக்கிய இந்தோனேஷ்யத் தீவுகள் பத்து அல்ல, இருபது அல்ல, நூற்றுக் கணக்கில் இருக்கின்றன. இவற்றைத் தவிர ஆயிரக்கணக்கான சிறு தீவுகளும் இருக்கின்றன. எனினும் அவற்றில் சுமத்ரா, ஜாவா, மதுரா, பாலி, போர்னியோ, செலிபிஸ், நியூகினி முதலிய ஒரு சில தீவுகள் மாத்திரமே உலகப் பிரசித்தி பெற்று விளங்குகின்றன.

பண்டித ஜவாஹர்லால் நேரு பிரயாணம் செய்த ஐ. என். எஸ். டில்லி கப்பல் பூமத்ய ரேகையைக் கடந்து சென்றபோது வெகு காலத்திய சம்பிரதாயத்தை அனுசரித்து சமுத்திர ராஜன் தம்பதிகளுக்குக் கப்பலில் உள்ளவர்கள் யாவரும் வணங்கி மரியாதை செய்தார்கள் என்றும், அதன் சம்பந்தமாகப் பல விசித்திரமான சடங்குகள் நடைபெற்றன என்றும் பத்திரிகைச் செய்திகள் கூறின. மேற்படி பூமத்ய ரேகை இந்தோனேஷ்யத் தீவுகளில் ஒன்றான சுமத்ராவைச் சரி பாதியாகப் பிளந்து கொண்டு செல்கிறது. பூமத்ய ரேகையை அடுத்துள்ள இடங்களில் பிரதிவருஷமும் நூற்று அறுபது அங்குலம் மழை பெய்கின்றது!

இந்தோனேஷ்யாவின் மொத்த விஸ்தீரணம் ஏழரை லட்சம் சதுர மைல்கள் என்றும், அதன் மொத்த ஜனத்தொகை ஏழரைக் கோடி என்றும் கணக்கிட்டிருக்கிறார்கள். அவர்களில்

ஜெயமணி






★

பாலித் தீவைச் சேர்ந்த யொஞ்சர் ராஜாவுக்கும் சில மாதங்களுக்கு முன் நிகழ்ந்து மத சம்பிரதாயப்படி திருமணம் விமரிசையாக நடந்தது.

அப்போது மணமகனும் மணமகளும் சுவாமி தரிசனத்துக்காகக் கோவிலுக்கு அழைத்துச் செல்லப்படும் காட்சி.

★



இலங்கை செனட்சபை அங்கத்தினரான ஸர் ஜோஸப் அலாய்ஸியஸ் டொனேடஸ் விக்டோரியா, C. B. E., J. P., அவர்களுக்கு இலங்கை அரசாங்க சிபார்சினால் மாட்சிமை தங்கிய மன்னர்பிரான் "ஸர்" (Knighthood) பட்டத்தை வழங்கியிருக்கிறார். பாரத வகுப்பினரிடையே இலங்கையிலோ இந்தியாவிலோ இந்தக் கௌரவத்தைப் பெற்றதில் இவர் முதல்வர். இலங்கையில் முன்னுக்கு வந்த இந்தியரிடையே ஸர் டொனேடஸ் ஒரு உதாரண புருஷர்.

ஸர் டொனேடஸ் 15-10-1893ல் இலங்கையில் பிறந்தார். கொழும்பிலும் திருச்சியிலும் கல்வி பயின்றார். படிப்பு முடிந்ததும் ஹோட்டல் தொழிலின் விஷயங்களைத் தெரிந்துகொள்ள காலி பேஸ் ஹோட்டலில் சேர்ந்தார். இதன் பயனாக இதே தொழிலில் அவருக்குப் பெரும் புகழும் வாய்ந்தது.

அவர் சிறிய அளவில்தான் தொழிலை ஆரம்பித்தார். தந்தையின் மரணமும், சில குடும்பத் தொல்லைகளும் அவரது சொத்துக்களைப் பாதித்தன. மிஞ்சியது கொழும்பிலிருந்த அவரது பெல்பீரே பார்தான். அவர் நிர்வகித்த இச் சிறிய வியாபாரம் அவரது தற்போதைய உயர் ஸ்திதிக்கு ஒரு ஊற்றாயிற்று. ஸர் டொனேடஸ் மிகுந்த மனோ திடத்துடன் சொந்தமாக கொழும்பில் விக்டோரியா டீ ரூமையும் பேக்கரியையும் ஆரம்பித்தார். இதைத் தொடர்ந்து இலங்கையில் பேட்டாவிலிருந்து டெஹிவெலாவரை அநேக கிளைகளை ஏற்படுத்தினார். பிறகு கொழும்பிலுள்ள ஐந்து பெரிய ஹோட்டல்களை வாங்கினார். அவைகளில் வெளி நாட்டுப் பிரயாணிகளுக்கு மிகவும் வசதியானவை ப்ரிஸ்டல், விக்டோரியா ஆகிய இரு ஹோட்டல்கள்தான். கடந்த பதிமூன்று வருஷங்களாக இலங்கை ரயில்வேயில் சிற்றுண்டிச்சாலைகளை நடத்தி வந்திருக்கிறார். இதைத் தவிர ஸர் டொனேடஸுக்கு நிலபுலன்கள் வேறு இருக்கின்றன.

வாழ்க்கை முன்னேற்றத்துடனேயே ஸர் டொனேடஸின் தர்ம சிந்தனையும் பெருகியது. தமது முன்னோர்களின் ஊராகிய மணப்பாட்டில் முதன் முதலாக பல ஆயிர ரூபாய் செலவில் ஒரு ஆஸ்பத்திரியைக் கட்டினார். அங்கே ஒரு மாதாகோவிலையும் கட்டி, பல பள்ளிக்கூடங்களையும் நிறுவினார். கடந்த மகா யுத்தத்தின்போது யுத்த சேவை செய்தவர்களுக்கு இந்தியாவிலும் இலங்கையிலும் பொழுது போக்குக்காக பல ஹோட்டல்களையும் கிளப்புகளையும் நடத்தினார். இதனால் அவருக்கு இந்திய சர்க்கார் O. B. E. பட்டத்தை வழங்கினர்.

இந்தியாவில் போலவே, இலங்கையிலும் அநேக தரும கைங்கரியங்களைச் செய்திருக்கிறார். இலங்கை மாணவ சாரண இயக்கத்திற்கு ஒரு தலைமைக் காரியாலயத்தைக் கட்டிக் கொடுத்து, சரித்திரப் பிரசித்தியுள்ள மகாயங்கனு சின்னங்களை ரூ. 12,000 கொடுத்து வாங்கினார். 1946-ல் கௌரவ நீதிபதியாக நியமனமாகி 1947-ல் C. B. E. என்னும் கௌரவ பட்டத்தைப் பெற்றார்.

இலங்கையின் அரசியல்-சமுதாய இயக்கங்களில் ஸர் டொனேடஸுக்குப் பங்குண்டு. தவிர பல தேசீய சங்கங்களில் முக்கிய ஸ்தானங்களை வகித்து வருகிறார். இலங்கை வர்த்தக சங்கத்திலும் அங்கம் வகித்து வருகிறார். இலங்கையில் பிறந்த இந்தியராதலால், இலங்கைக்கும் இந்தியாவுக்கும் சம விசுவாசம் காட்டி வருகிறார். இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையே நேசபாவம் நீடிக்க அரும்பாடு பட்டிருக்கிறார். அரசியலில் பரந்த நோக்க முடையவர். புரட்சியை வெறுப்பவர். இந்தியர்-சிங்களவர்களுக்கிடையே ஒற்றுமை வளர பெரும் முயற்சி செய்து வந்தார். இதற்காக அரசாங்கத்தார் அமைத்த ஒரு சபையில் ஸர் டொனேடஸ் இரண்டு வருஷத்திற்கு மட்டும் அங்கத்தினரானார். இந்தக் காலவரை முடிந்ததும், அவரது அரிய சேவையைப் பாராட்ட, அப்பதவியை மேலும் ஆறு வருஷங்களுக்கு நீடித்தனர். சென்ற வருஷம் இலங்கையில் சகலவதக் குடியாகப் பதிவுகள் நடந்தபோது ஸர் டொனேடஸ் முதல் முதலாகப் பதிவு பெற்றார். இந்த விஷயத்தில் பலரும் இவரைப் பின்பற்றினார்கள்.

பொது வாழ்க்கையிலும் இதர தரும காரியங்களிலும் ஸர் டொனேடஸ் தமது அருமை மனைவியின் பரிபூரண ஒத்துழைப்பைப் பெற்றார். மகன், மருமகள், மகள், மருமகன் ஆகியவர்களுடன் ரோம் நகரத்தில் நடக்கும் திரு விழாவுக்குச் சென்றிருந்த விக்டோரியா சீமாட்டி தற்போது ஐரோப்பாவில் இருக்கிறார்.

அவருக்குக் கிட்டிய ஐஸ்வரியமும், பட்டம் பதவிகளும் அவரது வாழ்க்கையில் எளிமையை நீடித்தனவே தவிர கர்வத்தை உண்டாக்கவில்லை. என்றுமே இருந்து வந்த அவரது கனிவும் கண்ணியமும், ஏராளமான நண்பர்களின் நன் மதிப்பை சம்பாதித்துக் கொடுத்தன. தற்போது கிடைத்த கௌரவப் பட்டத்திற்கு ஸர் டொனேடஸ் முற்றிலும் தகுதியானவரே.

"மெட்ராஸ் அரசியல் எப்படி இருக்கிறது?" என்று கேட்டார்.

"எனக்குத் தெரியாது; நேருஜி என்னை இந்தோனேஷியாவில் ஸ்தானிகராகப் போட்டிருக்கிறார்" என்றேன்.

டாக்டர் சுப்பராயனுக்குத் தூக்கி வாரிப்போட்டது.

அம்பாஸிடர் சுப்பராயன் அதிசயத்துடன் தமது வாயிலிருந்த ஸிகரெட்டை எடுத்துக் கையில் வைத்துக் கொண்டு, "என்ன? என்னை யல்லவா நேருஜி இங்கே அம்பாஸிடராகப் போட்டிருக்கிறார்!" என்றார் ஆச்சரியத்துடன்.

"ஆமாம்; தாங்கள் அம்பாஸிடர். நானும் அம்பாஸிடர்தான். இந்தோனேஷியாவில் உள்ள இந்தியப் பிரஜைகள் யாவரும் தங்களை உத்தியோகத் தொடர்பற்ற ஸ்தானிகர்களாய்ப் பாவிக்க வேண்டும் என்பது நேருஜியின் விருப்பம். இப்போது நான் இந்தோனேஷியாவில் உள்ள இந்தியப் பிரஜையாகையால் நானும் ஒரு அம்பாஸிடர்தானே?" என்றேன்.

"அப்பாடா!" என்று ஒரு புகை மூச்சு விட்டார் டாக்டர் சுப்பராயன்.

"சரி, அதிருக்கட்டும்; மெட்ராஸ் அரசியலைப் பற்றிக் கொஞ்சம் விவரமாகச் சொல்லு" என்று கேட்டார்.

"மெட்ராஸ் அரிசியில் ஒரு அவுன்ஸ் குறைத்துவிடப் போகிறார்களாம். அரிசி இன்னும் இரண்டு வாரத்துக்குத்தான் ஸ்டாக் இருக்கிறதாம். சுத்த மோசம் போங்கள்" என்று சொன்னேன்.

"நான் அரசியலைப் பற்றிக் கேட்டால் நீ அரிசியலைப் பற்றி அளக்கிறாயே? எனது சகோதர மந்திரிமார்களெல்லாம் சௌக்யமா? நிதி மந்திரி சால சுகமா? பிரகாசம்காரு எப்படி உள்ளாரு? அவருடைய புகார்கள் விஷயம் என்ன?" என்று கேட்டார் சுப்பராயன்.

"மந்திரிகளெல்லாம் ரொம்ப ரொம்ப சௌக்கியம். சில மந்திரிகள் உதகமண்டலத்துக்கும், சில மந்திரிகள் பர்மாவுக்கும் போயிருக்கிறார்கள். கவர்னர் தம்பதிகள் க்ஷேத்திராடனம் செய்து கொண்டிருக்கிறார்கள். பிரகாசம் காருவின் புகார்களெல்லாம் பரிகாரத்துக்கிடமாகி ஒருவிதமாகத் தீர்ந்துவிட்டன. அவ்வளவுதான் நமது மெட்ராஸ் அரசியல்!" என்று சொன்னேன்.

இதற்குள் நேருஜியும் சுகர்ணுவும் மேற்கு ஜாவாத் தலைநகரமான பாண்டாங்குக்கு மோட்டாரில் கிளம்பி விட்டார்கள். 140 மைல் தூரம் மோட்டார்ப் பிரயாணம் செய்தால் உடம்புக்கு ஆகாது என்று நான் வானவெளி மூலமாக மானசீகமாகப் பறந்தேன். நேருஜியும் சுகர்ணுவும் வழிநெடுகிலும் வந்து நின்ற இந்தோனேஷிய மக்களையும் அவர்களுடைய குளிர்ந்த உள்ளங்களையும் கண்ட பிறகு பாண்டாங்கிலிருந்து 50 மைல் தூரத்திலுள்ள எரிமலைக்கு விஜயம் செய்தார்கள். 1 500 அடிக்குக் கீழே பாதாளப் பிரயாணம் செய்த பிறகு நேருஜிக்கு டாக்டர் சுகர்ணு கொதிக்கும் கந்தக எரிமலைக் குழம்பைச் சுட்டிக் காட்டினார்.

நேருஜி அதைப் பரவசத்துடன் பார்த்து மகிழ்ந்துகொண்டே "எப்படி இருக்கிறது இது?" என்று கேட்டார்.

"சுதந்திர ஆவேசம் கொண்ட அடிமை மக்களின் இருதயம்போல் இருக்கிறது" என்றேன் சுதந்திரத்துடன்.

"பலே, பலே, அப்படிச் சொல்லு; சரியான உவமானம்!" என்றார் நேருஜி.

எரிமலைக் காட்சியைக் கண்டு முடித்ததும், மேலே ஏறிவந்து இயற்கை வளங்கள் நிறைந்த இன்பகரமான ஜாவாக் காட்சிகளைப் பார்த்து ரஸித்துக் கொண்டே சென்றோம். மேற்கு ஜாவாக் காட்சிகளும், மேற்கு மலையாளக் காட்சிகளும் தோற்றத்தில் கிட்டத்தட்ட ஒரே மாதிரியாகவே யிருந்தது.

• • •

நேருஜியின் மூன்றுநாள் சுற்றுப் பிரயாணத்துக் குள்ளாகவே அலுத்துப் போன எனக்கு என்னை அறியாமலே தூக்கம் வந்து விட்டது. கண் விழித்துப் பார்த்தேன். ஆசிரியர் "ஜாவா விஜயம் எப்படி?" என்று கேட்டார்.

"ஜாம் ஜாம் என்றிருந்தது. கூட்டம் சொல்லி முடியாது" என்றேன்.

"அசாத்தியக் கூட்டமோ?" என்று கேட்டார் ஆசிரியர்.

"ஆமாம்; கூட்டம் ஜாம் (கூம்) மாதிரி ஆகி விட்டது!" என்றேன்.

"இந்தோனேஷியாவி லிருந்து என்ன கொண்டு வந்தீர்?" என்று கேட்டார்.

"நல்லுறவு, நட்பு இதை யெல்லாம் நேருஜி கொண்டு வருவார். நான் இரண்டொரு இந்தோனேஷியா வார்த்தைகளைக் கொண்டு வந்திருக்கிறேன். சொல்லட்டுமா? மர்டேகா, பங், பாண்டுங், டங், ஜிங்!" என்று அடுக்கினேன்.

"போதும், போதும். இந்தியாவில் இருக்கிற பாஷைகளும் பாஷைச் சண்டைகளுமே போதும். இந்த வார்த்தைகளை யெல்லாம் இந்தோனேஷியாவுக்கே திருப்பிவிடு!" என்றார் ஆசிரியர்.

ராஜன் முன்பு ஆஜர் செய்யப்பட்டோம். நேரு, பாரி இவர்களின் விசாரணையைப் பற்றி தினப் பத்திரிகைகளில் படித்திருக்கலாம். பிறகு கப்பல் படையினர் என்னை இழுத்துச் சென்று சமுத்திர ராஜன் முன்னிலையில் நிறுத்தினார்கள்.

சமுத்திர ராஜன் "இவர் என்ன குற்றம் செய்தார்?" என்று விசாரித்தார்.

"இவர் பெரிய பெரிய ஆசாமிகளை யெல்லாம் பேட்டி கண்டு கட்டுரைகள் எழுதுகிறார். இவர் பெயர் விடாக்கண்டர்" என்றனர் கப்பல் படையினர்.

"அப்படியா சேதி! இவருக்கு ஒரு புட்டி விளக்கெண்ணெய் போடுங்கள். அப்புறம் இவருடைய தமாஷெல்லாம் ஒழிந்து வழ வழ வென்று எழுத ஆரம்பித்து விடுவார்!" என்றார் கடல் மன்னன் தம்முடைய நீண்ட நரைத்த தாடியைத் தடவிக் கொண்டே.

கடல் மன்னன் விசாரணை முடிந்ததும் நேருஜி என்னைப் பார்த்து "நல்ல சமயத்துக்கு வந்து சேர்ந்து விட்டீர்! கடல் ராஜன் தர்பார் எப்படி? எனக்கு இந்தக் கப்பலிலேயே இருந்துவிடலாம் போலிருக்கிறது. பன்னிரண்டு வருஷங்களுக்குப் பிறகு இப்போதுதான் நான் மறுபடியும் கப்பல்பிரயாணம் செய்கிறேன்" என்றார்.

"நான்கூடத்தான். 31-வருஷங்களுக்குப் பிறகு நானும் இப்போதுதான் கடல் பிரயாணம் செய்கிறேன்" என்றேன்.

"அப்படியா? 31-வருஷங்களுக்கு முன்னால் நீர் எந்த ஊருக்குக் கப்பலில் பிரயாணம் செய்தீர்?" என்று கேட்டார் பண்டிட் ஜவாஹர்லால் நேரு.


"31 - வருஷங்களுக்கு முன்புதான் நான் பிறந்தேன். இப்போதுதான் கடலில் பிரயாணம் செய்கிறேன்" என்று கூறி விட்டு ஜாகர்த்தாவை நோக்கி வேகமாகத் தாவினேன்.

இந்தியாவின் பிரதமரை வரவேற்க ஜாகர்த்தா முழுதும் அல்லோலகல்லோலப்பட்டுக் கொண்டிருந்தது. வரவேற்பு கோலாகலங்களை பிரஸிடெண்ட் சுகர்ணு தாமே நேரில் மேற்பார்வை செய்துகொண்டிருந்தார்.

கப்பல் துறைமுகத்தில் நேருஜியை வரவேற்கப் பெருந் திரளாகக் கூட்டம் கூடி நெரித்துக்கொண்டு நின்றது. டாக்டர் சுகர்ணு, பிரதமர் ஹட்டா, அம்பாஸிடர் டாக்டர் சுப்பராயன் தம்பதிகள் அனைவரும் முன்னணியில் நின்று 'டில்லி' வரும் திசையை ஆவலோடு பார்த்துக் கொண்டிருந்தார்கள். டில்லிக் கப்பல் துறைமுகத்தை அடைந்ததும் நேருஜி கப்பலுக்குள் ளிருந்து முகமலர்ச்சியுடன் உதயமானார்.

முதலில் டாக்டர் சுப்பராயன் பண்டிட்ஜியை வரவேற்றார். நான் ஸ்ரீமதி இந்திரா நேருவிடமிருந்து அவருடைய இரு குழந்தைகளையும் வாங்கி ஸ்ரீமதி சுப்பராயனிடம் ஒப்படைத்தேன்.

மர்டேகா என்ற சுதந்திர கோஷமும் "நேருஜி வாழ்க!" என்ற வாழ்த்து கோஷமும் ஜாகர்த்தா முழுதும் எதிரொலி செய்ய, டில்லிக் கப்பல் போட்ட 21 மரியாதை குண்டுகள் இந்தோனேஷ்யா முழுதும் எதிரொலி செய்தது. புகை வந்த திக்கை நோக்கினேன். டாக்டர் சுப்பராயன் விட்ட புகை அது என்று தெரிந்தது. டாக்டர் சுப்பராயன் என் கைகளைப் பிடித்துத் தனிமையான ஓர் இடத்துக்கு அழைத்துச் சென்று மிகுந்த பரிவுடன் யோக க்ஷேமங்களை விசாரிக்கத் தொடங்கினார்.



ராயப்பேட்டை ஹாஸ்பிடல் சூபரின்டெண்டு டாக்டர் பி. ஆர். கல்யாணசுந்தரம் அவர்களின் குமாரர் ஸ்ரீ பாலசுப்பிரமணியன், பி. ஏ., பிகாம்., அவர்களுக்கும், ஸ்ரீ எம். வி. சுப்பிரமணியம் ஐ. ஸி. எஸ். அவர்களின் புதல்வி சௌ. பத்மாவதிக்கும் ஜூன்மீ 9உ திருமணம் விமரிசையாக நடந்தேறியது. நகரிலுள்ள ஐ. ஸி. எஸ். உத்தியோகஸ்தர்களும், பிரபல டாக்டர்களும், மற்றும் பிரமுகர்களும் நண்பர்களும் திருமணத்துக்கு விஜயம் செய்து தம்பதிகளை வாழ்த்தினார்கள்.

விவேகானந்தரின் திருவாக்குக்கு இடந் தந்திருக்கக் கூடாதா?

ஹாஸ்யம் வேண்டும் என்றால், நம் இணையில்லாத ஆசிரியர் எஸ். வி. வி.யின் கட்டுரை இல்லையா?

பழைய காலத்தில் இந்திய நாகரிகம் ஜாவா முதலிய தீவுகளில் பரவியதைப் பற்றி டாக்டர் கங்குலி முதலியவர்கள் எழுதி யிருக்கிறார்களே! அந்த நூல்களி லிருந்து ஒரு பகுதியை நமது பிள்ளைகள் படிக்கக்கூடாதா?

ஆங்கில நாட்டு ஆங்கில ஆசிரியர்கள் எழுதியவையாகவே இருக்க வேண்டும் என்றால், அடிஸன் முதல் ஏ. ஜீ. கார்டி னர் வரையில் எத்தனை நூற்றுக் கணக் கான ஆசிரியர்கள் மேலான விஷயங் களைப் பற்றி எழுதி யிருக்கிறார்களே!

அப்படியிருக்க, பாக்தாத் சக்கடை தானா நமது பள்ளிமாணவர்களின் தலை யிலே எழுதியிருக்க வேண்டும்?

இம்மாதிரி அபத்தமான விஷயங்களைப் பாடமாக வைத்துவிட்டு, அபத்தமான முறையில் குறிப்புக்கள் எழுதிவிட்டு, பிள்ளைகள் பரீட்சையில் தேறவில்லை யென்றால், 'மூடர்கள்; முட்டாள்கள்' என்று திட்டுவதில் என்ன பயன்?

ஜாம் ஜாம் ஜாவா!

[நமது விசேஷ விடாக்கண்ட நிருபர்]

நிதி மந்திரி பதவியிலிருந்து விலகிச் செல்லும் டாக்டர் ஜான் மத்தாய் குடும்ப சகிதமாய் டில்லி பாலம் விமான நிலையத் தில் உலாத்திக் கொண்டிருந்தார்.

"மத்தாய் ஸார்! என்ன திட்டம் போட்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டுக் கொண்டே அவர் அருகில் சென்றேன்.

"விடாக்கண்டரே! வாரும்; திட்டம் என்ற பேச்சை என் காதில் போடாதே யும். திட்டத்தினால் வந்த வினைதான் இவ்வளவும். உங்கள் பிரதமர் ஜவாஹர் லால் நேரு திட்டம் போட்டு வேலை செய் வதற்காக ஒரு தேசிய திட்டக் கமிஷனை நியமித்தார் அல்லவா? அந்தக் கமிஷனை யும் அதனுடைய திட்டங்களையும் எனக் குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. கஜானா நிறையப் பணம் கொட்டிக் கிடந்தால் திட்டம் போட்டுச் செலவழிக்கலாம். நிதி மந்திரி என்றால் எனக்கென்று தனிப் பட்ட அதிகாரம் எதுவும் கிடையாது. திட்டக் கமிஷனும், மந்திரி சபையும் பார்த்துச் செலவழிக்கச் சொன்னால் செல வழிக்க வேண்டுமாம். இதென்ன மந்திரி பதவி வேண்டிக் கிடக்கிறது. நான் போகிறேன்" என்றார் டாக்டர் மத்தாய்.

"எங்கள் நேருஜிக்கும் காங்கிரஸுக்கும் மந்திரி சபைக்கும் கொள்கைகளும் வாக் குறுதிகளும் உண்டு. அவை யெல்லாம் பொது மக்களிடையே பிரசாரம் செய்யப் பட்டவை. நேரு மந்திரி சபை அந்த வாக்குறுதிகளை நிறைவேற்ற விட்டால் நாளைக்குக் காங்கிரஸை எல்லோரும் திட்ட ஆரம்பித்து விடுவார்கள். இப் போதே சிலர் திட்ட ஆரம்பித்து விட் டார்கள். இதனால்தான் நேருஜி திட் டங்கள் போட்டு வேலை செய்ய வேண்டும் என்கிறார். இது புரியவில்லை என்றால் யார் பேரில் குற்றம்?" என்றேன்.

"உம்மோடு பேசிக் கொண்டிருக்க எனக்கு நேரமில்லை. நான் போய் வரு கிறேன். இப்போது என்னிடம் எவ்வித திட்டங்களுமில்லை. நிறைய ஜோலிகள் இருந்தால் அல்லவா திட்டம் போட்டு வேலை செய்ய வேண்டும்? ஓய்வுக்காக காஷ்மீர் செல்லுகிறேன். எனவே திட் டம் எதுவும் தலைகாட்டக் கூடாது" என்று திடமாகக் கூறி விட்டார் டாக் டர் ஜான் மத்தாய்.

"ரொம்ப சரி; நான் என்னுடைய திட்டப்படி இப்போது இந்தோனேஷியா செல்ல வேண்டும். பாதி சமுத்திரத்தில் போய்க் கொண்டிருக்கும் ஐ. என். எஸ். டில்லிக் கப்பலைப் பிடித்தாக வேண்டும்" என்று கூறி விட்டு டில்லிக் கப்பலை நோக்கி மானசிகமாகப் பாய்ந்தேன்.

அந்தச் சமயம் டில்லிக் கப்பல் பூமத்திய ரேகையைத் தாண்டிக் கொண் டிருந்தது. கப்பலுக்குள் ஒரே உல் லாசமும், குதூகலமும், கொம்மாள முமா யிருந்தன. 'ஈக்வேடார்' என் னும் பூமத்திய ரேகையைத் தாண்டும் கட்டத்தில் கப்பலுக்குள் ஓர் ஐதிகம் நடை பெறுவது வழக்கமாம். அந்த ஐதிகப்படி நேருஜி பிரயாணம் செய்து கொண் டிருக்க கப்பலுக்குள்ளும் விசாரணை நடந்து கொண்டிருந்தது. 'நெப்ட்யூன்' என்னும் சமுத்திரராஜன் கப்பலுக்குள் தர்பார் நடத்திக் கொண்டிருந்தான். கப்பலிலிருந்து கமாண்டர் பாரி, பண்டிட் நேரு, அடியேன் மூவரும் சமுத்திர

விரிந்து பரந்து கிடக்க, இந்த பாக்தாத் சாக்கடையிலேதானா நம்முடைய இளம் பிள்ளைகள் இறங்கிக் குளிக்க வேண்டும்?

பாக்தாத் சாக்கடைகளின் நாற்றத்தை நன்கு அநுபவித்து வர்ணிக்கும் ஸ்ரீமதி பிரேயா ஸ்டார்க் அம்மையார் மேலும் ஓரிடத்தில் சொல்லுகிறார்:—

"The diphtheria, however, was started by people who lived a most sanitary life at Rustum Farm, far from such slums as mine."

இந்த அம்மாள் பாக்தாத்தில் தங்கிய பகுதி சாக்கடை நாற்றம் சூழ்ந்த கேவலமான சேரி. ஆனால், இந்தச் சேரியில் வசித்தவர்களிடமிருந்து 'டிப்தீரியா' என்னும் கொடிய தொற்று நோய் தோன்றவில்லை. வெகு தூரத்தில் 'ரஸ்டம் பண்ணை' என்ற இடத்தில் மிகச் சிறந்த சுகாதார விதிகளின்படி வாழ்க்கை நடத்தியவர்களிடமிருந்தே மேற்படி தொற்று நோய் பரவிற்றாம்! "இந்த அதிசயத்தை என்னவென்று சொல்வது? சுகாதாரத்தைப் பற்றி உபதேசிப்பவர்களின் உபதேசமெல்லாம் பயனுள்ளவைதானா?" என்று பிரேயா ஸ்டார்க் தமது சந்தேகத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்.

இந்த எஸ். எஸ். எல். ஸி. பாட புத்தகம் தயாரித்த மகானுக்கும் சில சந்தேகங்கள் உதித்து அவரை வாட்டத் தொடங்கி விட்டன. முதலில் 'ரஸ்டம் பண்ணை'யைப் பற்றி அவருக்கு நன்கு தெரியவில்லை. ஆகவே, புத்தகத்தின் கடைசியில் பாடங்களுக்கு அவர் எழுதியிருக்கும் குறிப்புக்களில்,

"This place appears to have been outside the city"

என்று அர்த்தபுஷ்டியுடன் குறிப்பிட்டிருக்கிறார்! புத்தகம் தொகுத்தவருக்கே நிச்சயம் தெரியாமல், 'தோன்றுகிறது' (appears) என்ற வார்த்தையை உபயோகித்திருக்கிறார் என்றால், இது நம் பிள்ளைகளுக்கு எப்படித் தோன்றும்?

அவருடைய சந்தேகமும் சங்கடமும் அது மட்டுமல்ல. பிரேயா ஸ்டார்க் என்னும் மாதரசி, "சாக்கடைப் பிரதேசத்தில் வசித்த எனக்கு 'டிப்தீரியா' நோய் வரவில்லை. சுத்தமான இடத்தில் சுகாதாரமாக வசித்தவர்களுக்குத்தான் வந்தது!" என்று சொல்லியிருக்கிறார் அல்லவா?

இதை ஆதாரமாகக் கொண்டு, ஏற்கெனவே அசுத்தப் பிரியர்களான நம்நாட்டுச் சிறுவர்கள் மேலும் அசுத்தத்திலேயே உழலத் தீர்மானித்து விட்டால் என்ன செய்வது? ஆகையால் "மிஸ் ஸ்டார்க் சொல்வதை அதிக ஸீரியஸ்ஸாக எடுத்துக் கொண்டு விடாதீர்கள்!" என்று பிள்ளைகளுக்கு எச்சரிக்கை செய்திருக்கிறார்.

"She does not mean us to take this very seriously as she believes that it is best to live under healthy conditions."

மேற்படி வாக்கியத்தில் அந்த 'வெரி' (very) என்ற வார்த்தை விழுந்திருக்கும் அழகையும் பொருத்தத்தையும் சிந்தியுங்கள். 'வெரி ஸீரியஸ்'ஸாக எடுத்துக் கொள்ளக் கூடாதாம். கொஞ்சம் ஸீரியஸ்ஸாக எடுத்துக் கொள்ள வேண்டுமாம்! இந்த அபத்தக் களஞ்சியத்தையும் அபத்தக்களஞ்சியத்துக்கு அபத்தக் குறிப்புக்களையும் நம்முடைய பிள்ளைகள் படித்துப் பரீட்சையில் தேறவேண்டுமாம்!



வாத்தியார்களுக்குப் பரீட்சை வைத்தாலே தேற மாட்டார்களே? சிறுவர்களும் சிறுமிகளும் எப்படித் தேறுவார்கள்!

* * *

இந்திய தேசத்து மகான்களும் அறிஞர்களும் எத்தனையோ பேர் அருமையான நல்ல ஆங்கில நடையில் எவ்வளவோ அருமையான விஷயங்களைப் பற்றி எழுதியிருக்கிறார்கள்; இன்னமும் எழுதிக் கொண்டு வருகிறார்கள்!


ஆங்கில நாட்டிலிருந்து வந்து இந்தியர்களுடைய வாழ்க்கையில் ஒன்று பட்டுக் கலந்து கொண்ட சகோதரி நிவேதிதை, டாக்டர் பெஸண்ட், பூஜ்யர் ஆண்ட்ரூஸ் போன்றவர்கள் இந்திய நாகரிகத்தையும் இந்தியர் வாழ்வையும் அடிப்படையாகக் கொண்ட அற்புதமான நூல்களை எழுதியிருக்கிறார்கள்.

அப்படிப்பட்ட நூல்களிலிருந்து ஏதேனும் நல்ல விஷயங்களை எடுத்துப் போட்டிருக்கக் கூடாதா?

டாக்டர் டாகூரின் சிறுகதை ஒன்றைச் சேர்த்திருக்கக் கூடாதா? காந்திமகானின் ஆத்ம கதையிலிருந்து ஒரு அத்தியாயத்தைப் போட்டிருக்கக் கூடாதா! சுவாமி

பிரார்த்தனை மேற்படி கவிதைகளில் ஒன்று.

பகவத்கீதை, பிரம்ம சூத்திரம், உபநிஷதம், சிவஞான போதம், ஹெர்பர்ட் ஸ்பென்ஸரின் நூல்கள்,— ஆகியவற்றைக் கரைத்துக் குடித்தவர்களுக்கு இந்தக் கவிதையில் அடங்கிய தத்துவங்கள் ஒருவாறு விளங்கலாம்.



ஜகத்குரு சங்கராச்சாரியாரும், ஆசிரியர் ராதாகிருஷ்ணன் அவர்களும், சென்னை ஆர்ச் பிஷப் பாதிரியாரும், திருப்பனந்தாள் ஸ்ரீ அருள்நந்தித் தம்பிரானும், ஸ்ரீ காகா கலேல்கர் அவர்களும் இந்தக் கவிதையின் தத்துவங்களை விவாதித்து முடிவு கட்டலாம்.

பதினாறு வயதுக் குழந்தைகளுக்கு இந்தக் கவிதை விளங்கும் என்றோ, விளங்க வைப்பது அவசியம் என்றோ தோன்றவில்லை. போகட்டும்.


வசனப் பகுதியைப் பார்க்கலாம்.

வசனப் பகுதியில் பண்டித ஜவாஹர்லால் இந்தியாவின் பிரதம மந்திரி என்பதை முன்னிட்டு அவருக்குக் கப்பம் செலுத்தும் முறையில் அவர் எழுதிய பாடம் ஒன்று சேர்த்திருக்கிறார்கள்.

மற்றப் பாடங்கள் எல்லாம் மேனாட்டு ஆசிரியர்கள் எழுதியவை.

மேனாட்டு ஆசிரியர்களுக்குள்ளேயும் பிரேயா ஸ்டார்க் (Freya Stark) என்னும் பெண்மணி இரட்டிப்பு கௌரவம் பெற்றிருக்கிறார். அந்தப் பரதேவதை எழுதிய புத்தகத்திலிருந்து இரண்டு பாடங்கள் இதில் சேர்க்கப்பட்டிருக்கின்றன!

பிரேயா ஸ்டார்க் உலக யாத்திரை செய்தார். (எதற்காக வென்றால், நம் சென்னை மாகாணத்துக் குழந்தைகளின் பிராணனை வாங்குவதற்காகத்தான்!) அந்த யாத்திரையில் பாக்தாத் நகருக்கு வந்தார். பாக்தாத் நகரில் இந்த அம்மாள் அடைந்த அநுபவங்களைப் பற்றி இரண்டு பாடங்கள் நம் சிறுவர் சிறுமிகள் படித்தாக வேண்டும். "In the Moslem Quarter" என்று ஒரு பாடம். "Concerning Smells" என்று இன்னொரு பாடம். இரண்டாவது பாடத்தில் பாக்தாத் நகரின் சாக்கடைத் துர் நாற்றங்களைப் பற்றி அபாரமாக வர்ணித்திருக்கிறார் ஸ்ரீமதி பிரேயா ஸ்டார்க் அம்மையார்!



வீட்டுச் சாக்கடைகளைப்பற்றி வர்ணித்திருக்கிறார்; அதில் திருப்தி யடையாமல் வீதிச் சாக்கடைகளைப்பற்றியும் விவரமாகச் சொல்லியிருக்கிறார்.

இந்தப் பாட புத்தகத்தைத் தயாரித்த புண்ணிய புருஷருக்குப் பிரேயா ஸ்டார்க் அம்மையாரின் எழுத்தில் மோகமா, அல்லது பாக்தாத் நகரின்மேல் மோகமா, அல்லது பாக்தாத் சாக்கடைகளின் பேரிலேயே அவர் மோகங்கொண்டு விட்டாரா என்பது ஒரு பெரிய மர்மமான விஷயந்தான்.

பாடம் ஆரம்பிக்கும் தோரணையைப் பாருங்கள்:—

"True happiness, We consider, is incompatible with an inefficient drainage system. It is one of those points of which we differ most fundamentally from the East, where happiness and sanitation are not held to have any particular connection."

தமிழில் இதன் சாராம்சமாவது:—

"சாக்கடைத் திட்டம் சரியாக இல்லாவிட்டால் அவ்விடத்தில் உண்மையான சந்தோஷம் இராது என்று நாம் கருதுகிறோம். கீழ் நாட்டாரோடு நாம் அடிப்படையில் மாறுபடுகிற விஷயங்களில் இது ஒன்று. சுகாதார சுத்தத்துக்கும் சந்தோஷத்துக்கும் குறிப்பிட்ட சம்பந்தம் எதுவும் உண்டு என்று அங்கே (கீழ் நாட்டில்) கருதப்படுவதில்லை."

மேற்கண்ட வாசகத்தில் 'நாம்' என்பது மேனாட்டாரை. முக்கியமாக இங்கிலீஷ்காரர்களைக் குறிக்கிறது. கீழ்நாட்டார் என்றால் பாக்தாத் வாசிகள், இந்தியர்கள், சீனர்கள் எல்லாருந்தான்.

ஆக, பிரேயா ஸ்டார்க் கூறுவதின் தாத்பரியம் என்னவென்றால், "மேனாட்டார் மிகவும் சுத்தமானவர்கள். கீழ்நாட்டார் சாக்கடை அசுத்தங்களில் கிடந்து உழலுகிறவர்கள்" என்பதுதான்.

இப்பேர்ப்பட்ட அருமையான விஷயத்தை,— மிஸ் மேயோ அம்மாளின் மூத்த சகோதரி எழுதிய அரும் பெரும் உண்மையை —நம்முடைய பள்ளிக்கூடங்களில் சிறுவர்—சிறுமிகளுக்குப் பாடமாக வைக்க வேண்டியது அவசியந்தானா? இவ்விதம் கீழ் நாட்டார் அசுத்தத்தில் உழலுகிறவர்கள் என்று பாடத்தில் படிக்கும் குழந்தைகளின் மனோநிலை என்னவாகும்? ஆங்கில இலக்கியம் என்னும் மகா சமுத்திரம்

மடமைக்குப் பலி!
அல்லது
பாக்தாத் சாக்கடை!

"பெற்றோன்"

ஜூன் மாதம் 7உ சென்னை மாகாணத்துச் சிறுவர் சிறுமிகளுக்கு ஒரு பயங்கரமான தினம்.

அன்றைக்கு எஸ். எஸ். எல். ஸி. பரீட்சை முடிவு வெளியாயிற்று.

இந்த வருஷத்தில் மொத்தம் 66,000 குழந்தைகள் எஸ். எஸ். எல். ஸி. பரீட்சை எழுதினார்கள். இவர்களில் 28,000 பேர் பரீட்சையில் தேறினார்கள். மிச்சம் 38,000 பேர் தேறவில்லை.

இந்த முப்பத்தெட்டாயிரம் பேரும் பதினைந்து வயதுக்கு உட்பட்ட சிறுவர்—சிறுமிகள். இந்தக் குழந்தைகளின் இளம் உள்ளங்கள் அன்றைக்கு எப்படித் தவித்திருக்குமோ, கடவுளுக்குத்தான் தெரியும். பரீட்சை நடத்தியவர்களுக்குத் தெரியாது; கல்லால் சமைந்த கல்வி இலாகாவுக்குத் தெரியவே தெரியாது.

குழந்தைகளின் உள்ளங்கள் தவித்துப் புண்பட்டது போதாது என்று, புத்தியற்ற ஆசையுள்ள பெற்றோர்கள் அவர்களைத் திட்டுவார்கள். சிந்தனையற்ற மற்றச் சிறுவர் சிறுமிகள் பரிகசிப்பார்கள். மாமாக்களும் சித்தப்பாக்களும் தாத்தாக்களும் பாட்டிகளும் குழந்தைகளைப் பிடுங்கி எடுப்பார்கள்.

கருணையற்ற ஆசிரியர்மார்கள் "நீ உருப்பட மாட்டாய் என்று நான் முன்னமே சொல்லவில்லையா?" என்று இடித்துக் காட்டுவார்கள்.

புண்ணிலே கோல் இடுவது போன்ற இத்தகைய பேச்சுக்களினாலும் ஏசக்களினாலும் முப்பத்தெட்டாயிரம் பிள்ளைகள் ஏங்கித் தவிப்பார்கள்.

அவர்களில் சிலர் தற்கொலை செய்து கொண்டு உயிரைவிடத் துணிந்தால் அதில் வியப்பு ஒன்றுமிராது. அத்தகைய அறியாத்தனமான முயற்சி ஒன்றும் பலிக்காமல் போக வேண்டும் என்று கடவுளைப் பிரார்த்திப்போமாக.

* * *

முப்பத்தெட்டாயிரம் குழந்தைகள் பலியானார்களே! இவர்கள் எந்தப் பலிபீடத்தில் பலியானார்கள்?—என்று சிறிது யோசித்துப் பார்க்க வேண்டும்.

"இவர்களில் மிகப் பெரும்பாலோர் இறுக்குப் பிடித்த கல்வி இலாகாவுக்குப் பலி ஆனார்கள்; மற்றவர்கள் பரீட்சகர்களின் மடமைக்குப் பலியானார்கள்" என்றுதான் சொல்ல வேண்டும்.

இந்த வருஷத்து எஸ். எஸ். எல். ஸி. பரீட்சைத் தாள்களின் அலட்சணத்தைப் பற்றி அப்போதே பலர் சொல்லி விட்டார்கள்! பள்ளிக்கூட உபாத்தியாயர்களும் ஹெட்மாஸ்டர்களுமே ஒரு குரல் ஒப்பாரி வைத்து அழுது விட்டார்கள்! ஆகவே, பரீட்சை முடிவு இப்படி இருப்பது யாருக்கும் வியப்பு ஏற்பட்டிராது.

பின்னை, வியப்பு என்னவென்றால், இவ்வளவெல்லாம் முறையிட்டு அழுது புலம்பிய பிறகுங்கூட, கல்வி இலாகா என்னும் பூதம் தன்னுடைய பழைய போக்கிலேயே போய்க் கொண்டிருக்கிறதே.—கொஞ்சங்கூட அந்த பூதத்தின் கல் மனம் கரைந்திருப்பதாகத் தெரியவில்லையே என்பதுதான்.

இதற்கு ஓர் உதாரணத்தைச் சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

புதிய வருஷத்துக்கு—அதாவது 1951-ம் வருஷத்து எஸ். எஸ். எல். ஸி. பரீட்சைக்கு—இங்லீஷ் பாட புத்தகம் வெளியாகியிருக்கிறது

Madras and Andhra Universities

என்று அட்டைத் தலைப்பில் கொட்டை எழுத்தில் முத்திரை பதித்துக் கொண்டு வெளியாகியிருக்கிறது.

முதல் 11 பக்கம் கவிதைப் பாடங்கள்; பின்னர் 46 பக்கம் வசன பாடங்கள்.



பொறுக்கி எடுத்திருக்கும் கவிதைகள் பெரும்பாலும் பிள்ளைகளுக்கும்,—பெரியவர்களுக்குங்கூட.—மனதில் கிரகித்து இருத்திக் கொள்ள முடியாத தத்துவ விசாரணைகளாயிருக்கின்றன.

ஜான் குடிதண்ணீர்! (ஜான் டிரிங்க் வாட்டர்) என்பவரின்

அக்கப்போர்

"ரயிலில் டிக்கெட் இல்லாமல் பிரயாணம் செய்பவர்களிடமிருந்து சென்ற வருஷத்தில் ஒன்றரைக் கோடி ரூபாய் வசூல் செய்யப்பட்டது."

—ரயில்வே விளம்பர அறிக்கை.

அடேயப்பா! டிக்கெட் இல்லாப் பிரயாணத்தினால் இவ்வளவு வருமானம் சர்க்காருக்குக் கிடைக்கும் போது, எதற்காக அதை ஒழித்து விட்டு மறுவேலை பார்க்கவேண்டும் என்கிறார்கள்?

★

"இந்தியாவில் தொழில் வளர்ச்சி ஏற்பட வேண்டுமானால், உற்சாகமுள்ள ஒரு கோஷ்டியைச் சிருஷ்டிக்க வேண்டும். இவர்கள் சர்க்காருடன் ஒத்துழைக்க வேண்டும். அந்தக் கோஷ்டியுடன் சர்க்கார் ஒத்துழைக்க முன் வரவேண்டும்."

—கூனூரில் ஸர் ஸி. பி.

இப்படியெல்லாம் சுற்றி வளைத்துக் கொண்டு சொல்வானேன்? "இந்தியாவில் தொழில் வளர்ச்சி ஏற்படாது" என்று ஒரே வார்த்தையில் சொல்லிவிடலாமே!

★

"எங்கள் ஊரில் உள்ள குளங்களிலும் கிணறுகளிலும் காவல் போட்டிருக்கிறார்கள்" என்றார் வெளியூர்க்காரர் ஒருவர்.

"ஓகோ! சுகாதாரத்தை அவ்வளவு கவனிக்கிறார்களா?" என்று கேட்டார் ஒரு சென்னை நகரவாசி.

"அதற்காக இல்லை! பரீட்சையில் தேறாத மாணவர்கள் விழுந்து உயிரை விடுவதைத் தடுப்பதற்காகக் காவல் போட்டிருக்கிறார்கள்!" என்றார் வெளியூர்க்காரர்.

★

"புதிய இந்தோ சைனாவில் ஸ்திரீகளின் அந்தஸ்து எப்படியிருக்கும்?" என்று ஒரு ஸ்திரீ இந்தோ சீனத்தின் சுதந்திர இயக்கத் தலைவர் ஹோ-சி-மின்னைக் கேட்டார். அதற்கு அவர், "கான்பூஷியஸ் கூறிய மூன்று கொள்கைகளையும் ஒழித்துவிடுவோம்" என்றாராம். அந்த மூன்று கொள்கை என்னவெனில், ஒரு ஸ்திரீ முதலில் தந்தை, பின்னர் கணவன், கடைசியில் மகன்—இம் மூவர் ஆதரவிலும் கட்டாயம் வாழ்ந்து வரவேண்டும் என்பது.

இந்த ஒழிப்பை நாம் ஆதரித்தாலும், இது மட்டும் போதுமா என்று ஐயுறுகிறோம். ஒரு ஸ்திரீயின் ஆதரவில் தகப்பன், கணவன், மகன் மூவரும் வாழலாமா என்பதை ஹோ-சி-மின் தெளிவுபடுத்தக் கோருகிறோம்.

"இந்த வருஷத்துக்கு வேண்டிய உணவுப் பொருள்களை நாங்களே உற்பத்தி செய்து கொள்ளப் போகிறோம். அநேகமாக, மத்திய சர்க்காருடைய உதவி எங்களுக்குத் தேவையாயிராது" என்று ராஜஸ்தான் சர்க்கார் இந்திய சர்க்கார் உணவு இலாகாவுக்கு அறிவித்திருக்கிறார்கள்.

"ராஜஸ்தான் வேண்டாமென்று சொல்லும் உதவியையும் சேர்த்து இங்கே அனுப்பி வையுங்கள்" என்று சென்னையிலிருந்து ஒரு குரல் கேட்கிறது.

★

திடீரென்று மரங்களுக்கு யோகம் பிறந்திருக்கிறது. மரங்களின் அவசியத்தைப் பற்றியும் உபயோகத்தைப் பற்றியும் இந்திய சர்க்கார் புது உணவு மந்திரி ஸ்ரீ கே. எம். முன்ஷி, போகும் இடமெல்லாம் பேசுகிறார். ஜூலை முதல் வாரத்தை மரம் நட்டு விழா வாரமாகக் கொண்டாடப் போகிறார்களாம்.

இதைப் படித்துவிட்டு பக்கத்து வீட்டு அம்பிப் பயல், "எங்கள் வாத்தியார் இனிமேல் எத்தனை தடவை வேண்டுமானாலும் 'ஏண்டா! மரம்போல் நிற்கிறாய்?' என்று கேட்கட்டும், பாதகம் இல்லை" என்கிறான்.



"நம்ம பையன் விஷயத்தைக் கேட்டீர்களோ? இந்த வருஷத்துப் பரீட்சையிலே தேறவில்லை...... விர்ருன்னு போய் ரயில்லே......"

"ஐயையோ, ... உம்?"

"ரயில் ஏறி, பம்பாய்க்குப் போய் 'செலவுக்குப் பணம் இல்லை, உடனே அனுப்பிவையுங்கள்' என்று கடிதம் எழுதியிருக்கிறான்!"

யான சம்ஸ்கிருதத்தையும் போட்டியிட்டு மூட்ட விடுவதுதான் அந்தப் பெருங் குறையாகும்.

வெறும் வாயை மெல்லுகிறவர்களுக்கு அவலும் கிடைத்ததுபோல், தேசத்தின் விரோதிகளும் காங்கிரஸ் எதிரிகளும் இதை நன்றாக உபயோகப் படுத்திக் கொள்வார்கள். "சம்ஸ்கிருத பூதம் தமிழ்க் கல்வியின் கழுத்தை நெறித்துக் கொல்லுகிறது!" என்று கூச்சலிடுவார்கள். முக்கியமாக, தமிழ் நாட்டில் இத்தகைய பூசல்களைக் கிளப்பியே வாழ்க்கை நடத்தி வருகிறவர்களுக்குக் கொண்டாட்டமா யிருக்கும்.

எதிரிகளின் கொண்டாட்டம் ஒரு புறம் இருக்க, தமிழ் நாட்டில் தமிழையும் தெலுங்கு தேசத்தில் தெலுங்கையும் தனிப் பாடமாகக் கற்கவேண்டிய அவசிய மில்லை என்ற நிலைமை அபத்தமானதுதானே!

இதை யெல்லாம் பலரும் எடுத்துக் காட்டினார்கள். கோயமுத்தூரில் நடந்த தமிழ் வளர்ச்சி மகாநாட்டில் தீர்மானமும் போட்டார்கள். கனம் மாதவமேனனின் காதிலும் இந்தக் கூக்குரல்கள் விழுந்தன.

• • •

ஜனநாயகம் என்பது பொது மக்களின் கருத்தைக் கூடியவரையில் அறிந்து அதையொட்டி அரசியல் நடத்துவதுதான். தான் பிடித்த முயலுக்கு மூன்றேகால் என்று பிடிவாதம் பிடிப்பதல்ல. சத்தியம், நேர்மை, மனச்சாட்சி சம்பந்தப்பட்ட காரியங்களிலும் கொள்கைகளிலும் பொது ஊழியர்கள் இம்மியும் அசையாமல் உறுதியுடன் நிற்க வேண்டும். மற்றப்படி சாதாரண சௌகரியங்களை முன்னிட்ட காரியங்களில் மக்களின் கருத்தை யொட்டிப் போக வேண்டும். இந்த முறையில் கனம் மாதவமேனன் ஜனநாயக தத்துவத்தை யனுசரித்து நடந்து கொள்ள முன் வந்தார். பாஷை போதனைத் திட்டத்தை மறுபடியும் மாற்றினார். நல்ல முறையில் மாற்றி யிருக்கிறார்.

முதல் மொழிக்கென்று அளித்திருந்த ஆறு பீரீடுகளில் ஒரு பீரீடை எடுத்தார். இரண்டாவது ஹிந்தி பாஷைக்குக் கொடுத்திருந்த நாலு பீரீடில் இரண்டை எடுத்தார்.

இந்த மூன்று பீரீடுகளையும் புராதன பாஷைக்கு என்று ஒதுக்கினார். அதாவது இந்த மூன்று பீரீடுகளில் ஒரு மாணாக்கன் இஷ்டப்பட்டால் சம்ஸ்கிருதம் கற்கலாம்; அல்லது பழைய தமிழ் இலக்கியங்களைக் கற்கலாம்.

மற்றப்படி தமிழ்நாட்டில் தமிழையும் தெலுங்கு தேசத்தில் தெலுங்கையும் முதல் மொழியாக ஐந்து பீரீடுகள் எல்லா மாணாக்கர்களும் கற்கவேண்டும்.

இது நிராட்சேபணையான திட்டம் என்று கருதுகிறோம். இரண்டு விதத்தில் நன்மை பயப்பது.

ஹிந்தி நாலு பீரீடுகளில் இரண்டு பீரீடைக் குறைத்தது ஒரு பெரிய நன்மையல்லவா? போதும்' ஹிந்திக்கு வாரம் இரண்டு பீரீடு யதேஷ்டம்!

தாய் பாஷைக்கும் சமஸ்கிருதத்துக்கும் போட்டியில்லாமல் போயிற்று.

தாய் பாஷை கட்டாயம் கற்றாக வேண்டும். சமஸ்கிருதம் இஷ்டமுள்ளவர்கள் கற்கலாம்.

ஏதேதோ கஷ்டப்பட்டுத் திண்டாடித் திணறிக் கடைசியில் பாஷை விஷயமாக ஒரு நல்ல முடிவுக்கு வந்ததின் பொருட்டுக் கல்வி மந்திரி கனம் மாதவமேனனை மனமாரப் பாராட்டுகிறோம்.

இந்தப் புதிய திட்டம் நிகழும் வருஷத்தில் அமுலுக்கு வராது என்று தெரிகிறது. இதுதான் சிறிது ஏமாற்றத்தை அளிக்கிறது. போன வருஷத்து முறையே இந்த வருஷத்தில் அனுசரிக்கப்படும் என்றும், புதிய திட்டம் அடுத்த வருஷத்தில் வரும் என்றும் அறிகிறோம்.

சாத்தியமானால், இந்த வருஷத்திலே புதிய திட்டம் அமுலுக்கு வருவது நலம் என்று கருதுகிறோம். பள்ளிக்கூடங்களில் பாஷைப் பிரச்னை ஒரு வழியாகத் தீர்ந்துவிட்டது என்று திருப்தி யடைய ஏதுவா யிருக்கும். கல்வி இலாகாவின் நூறு பிரச்னைகளில் ஒன்று தீர்ந்து விட்டது என்ற குதூகலத்துடன் மற்ற 99 பிரச்னைகளைக் கவனிக்கலாம் அல்லவா?

களுக்கு அதிக கௌரவம் கொடுக்க ஏற்பாடு செய்தார். தேசிய பாஷையாகிய ஹிந்தி போதனைக்கும் ஏற்பாடு செய்தார். ஹிந்தியைக் கட்டாயமாகப் போதிப்பதா, இஷ்ட பாடமாகப் போதிப்பதா, பதினாறு அணா கட்டாயத்துக்கும் இரண்டணா இஷ்டத்துக்கும் போதிக்குமாறு விடுவதா என்னும் மகத்தான பிரச்னைகளில் கொஞ்சம் குழப்பம் ஏற்பட்டது. கருப்புச் சட்டைப் பயம் இத்தகைய குழப்பத்துக்குக் காரணமாயிருந்தது. கடைசியில் அந்தப் பயம் ஒரு வழியாகத் தீர்ந்ததும் குழப்பமும் ஒருவாறு தெளிந்தது. ஆனால் மொத்தத்தில் எந்தெந்த பாஷைக்கு எந்தெந்த வகுப்பில் எவ்வளவு இடம் என்னும் விஷயம் நிச்சயமாகவில்லை. வருஷத்துக்கு வருஷம் பாஷைத் திட்டங்கள் மாறித் தொல்லை கொடுத்துக் கொண்டிருந்தன. பிள்ளைகளும் தொல்லைப் பட்டார்கள்; ஆசிரியர்களும் தொல்லை பட்டார்கள்; மந்திரிமார்களும் தொல்லைப்பட்டார்கள்.

* * *

தாய் பாஷை தமிழ், — தேசிய பாஷை ஹிந்தி, —சர்வ தேச பாஷை ஆங்கிலம், இந்த மூன்று பாஷைகளையும் தமிழ் நாட்டுக் குழந்தைகள் கற்றுக்கொண்டே யாகவேண்டும். இவற்றுடன், இந்தியாவின் பூர்வீக கலாச்சார பாஷையான சம்ஸ்கிருத பாஷைக்கும் இடம் கொடுக்கத்தானே வேண்டும்? சம்ஸ்கிருத பாஷையின் அபூர்வமான செல்வங்களையெல்லாம் தென்னாடல்லவோ இத்தனை காலமும் போற்றிக் காப்பாற்றி வந்திருக்கிறது? ஆப்கானியர்—மொகலாயர் படையெடுப்பினால் வடநாட்டில் வடமொழிச் செல்வம் மறைந்து விட்டதே! நமது சங்கரர், இராமானுஜர் போன்றவர்கள் அல்லவா காப்பாற்றி வந்திருக்கிறார்கள்? உபநிஷதமும், பகவத்கீதையும், வால்மீகியும், காளிதாஸனும், பவபூதியும், பட்டபாணனும் அளித்திருக்கும் மகா இலக்கியச் செல்வங்களைத் தென்னாடு அலட்சியம் செய்ய முடியுமா? செய்து விட்டால் நஷ்டம் யாருக்கு? இந்த நாளில் சம்ஸ்கிருதம் கற்பிக்கும் தனிப்பட்ட வேத பாடசாலைகள் மறைந்து போய்விட்டன. சாதாரணப் பள்ளிக்கூடங்களிலும் சம்ஸ்கிருதம் கற்க வழியில்லாவிட்டால், அந்த பாஷை அரோகராத்தான்! — இவ்வாறு பாரத நாட்டின் பழம் பெரும் கலாச்சாரத்திலும் பண்பாட்டிலும் மிகுந்த சிரத்தை கொண்ட பெரியோர்களும் அறிஞர்களும் தங்கள் கவலையைத் தெரிவித்தனர்.

இந்தக் கோரிக்கைகள் எல்லாவற்றையும் சம்மேளனப் படுத்திச் சமரசம் செய்து ஹைஸ்கூல்களில் பாஷைகளின் போதனைக்கு ஒரு திட்டம் வகுத்து வெளியிட்டார் கல்வி மந்திரி கனம் மாதவமேனன். துரதிர்ஷ்டவசமாக, அதில் ஒரு பெரிய குறை இருந்துவிட்டது! நல்லெண்ணம் படைத்தவர்களுக்கு அது கண்ணை உறுத்தும் குறை; எதிரிகளுக்கும் விஷமிகளுக்கும் மனதிற்குள் கொண்டாட்டம் அளிக்கக்கூடிய குறை,

குறையுடன் கூடிய மேற்படி திட்டத்தின் முக்கிய அம்சங்கள் இவை :—

1. இங்கிலீஷ் மூன்றாவது ஸ்தானத்துக்குத் தள்ளப்படும். எனினும் அதை நம் ஹைஸ்கூல் பிள்ளைகள் வாரத்துக்கு ஐந்து பீரிட் கட்டாயமாகக் கற்றுத் தொலைக்க வேண்டும்.

2. தேசிய பாஷை ஹிந்தி நடுநாயகமான இரண்டாவது ஸ்தானத்தை வகிக்கும். அதை வாரத்துக்கு நாலு பீரிட் அவசியமாக நம் பிள்ளைகள் படித்தாக வேண்டும்.

3. பிரதான முதல் பாஷையாக எந்த பாஷையைக் கற்பது என்ற கேள்விக்கு மூன்று விடைகள் :

(அ) தமிழ் நாட்டில் உள்ள தமிழ்க் குழந்தைகள் தமிழை முதல் மொழியாகக் கற்கலாம்.

(ஆ) தமிழ்நாட்டில் உள்ள தெலுங்குக் குழந்தைகள் தெலுங்கை முதல் மொழியாகக் கற்கலாம். (அதே மாதிரி தெலுங்கு நாட்டில் வசிக்கும் தமிழ்க் குழந்தைகளும் தமிழை முதல் மொழியாகக் கொள்ளலாம்.)

(இ) மற்ற எல்லாப் பாடங்களும் தாய் பாஷையில் இனி நடக்குமாதலால், தாய் பாஷையைத் தனியாகக் கற்க அவசியமில்லை என்று நினைப்போர் இந்தியாவின் புராதன கலாச்சார மொழியாகிய வடமொழியைப் பிரதான முதல் மொழியாக எடுத்துக் கொண்டு படிக்கலாம்.

மேற்படி பாஷைத் திட்டம் எவ்வளவோ ஆழ்ந்த யோசனைகளின் பேரில் சமரசப்படுத்தும் நோக்கத்துடன் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்பது படிக்கும்போதே தெரிகிறது. ஆயினும் அதில் உள்ள குறையும் தெளிவாகத் தெரிகிறது. தாய் மொழியான தமிழ் அல்லது தெலுங்கையும் கலாச்சார பாஷை

பாராட்டுகிறோம்

ஜனாம் மாதவ மேனன் அவர்கள் சட்ட இலாகாவுக்கு மந்திரியாயிருந்து கொண்டு கல்வி இலாகா மந்திரியாகவும் பொறுப்பு வகிக்க முன் வந்தபோது நாம் நம்முடைய அநுதாபத்தையும் கவலையையும் தெரிவித்துக் கொண்டிருந்தோம்.

ஏனெனில், சட்ட இலாகாவே கொஞ்சம் கஷ்டமான இலாகா. வக்கீல்கள், பப்ளிக் பிராஸிகியூடர்கள், மாஜிஸ்ட்ரேட்டுகள், கோர்ட்டுகள், குற்றவாளிகள், சிறைகள், வார்டர்கள், கம்யூனிஸ்ட் கைதிகள், — ஆகியவர்களோடு விடாமல் மாரடிப்பது இலேசான காரியம் அல்ல.

கல்வி இலாகாவிலோ என்றால், ஓயாமல் அதிகச் சம்பளம் கேட்கும் உபாத்தியாயர்கள், கிராண்ட் அதிகம் கேட்கும் பள்ளிக்கூடங்கள், உளுத்துப்போன கல்வி அதிகாரிகள், பரீட்சை தேறாத மாணுக்கர்கள், வீரத் தமிழ் ஆசிரியர்கள், வகுப்புவாரி ஸீட்டுக்கள், கட்டாய ஹிந்தி, கருப்புச் சட்டை,— ஆகிய பல சஞ்சித கர்மங்களைக் கட்டிக்கொண்டு தொல்லைப்பட வேண்டும்.

இவ்வளவு தொல்லைகளுக்கும், தர்ம சங்கடங்களுக்கு மிடையே, கல்வி மந்திரி பதவி வகிப்பவர் நாம் பாராட்டக் கூடியதான ஏதாவதொரு காரியத்தைச் செய்து விட்டால், அதைப் பூதக் கண்ணாடி வைத்துப் பார்த்தாவது தெரிந்து கொண்டு, நாம் களிப்படைந்து அவரையும் பாராட்டுவது நியாயமே யல்லவா?

* * *

அன்னிய அரசாங்க இயந்திரத்துக்குக் குமாஸ்தாக்களை உற்பத்தி செய்து கொடுப்பதே முக்கிய இலட்சியமாகக் கொண்ட கல்வி முறை இந்தியா தேசத்தில் சென்ற நூற்றைம்பது வருஷத்துக்கு மேலாக நிலைபெற்று வந்திருக்கிறது. அந்தக் கல்வி முறை சுதந்திர இந்தியாவுக்குப் பொருந்தவே பொருந்தாது. அதை அடியோடு ஒழித்து விட்டு வேறு முறையை அமைப்பதுதான் நல்லது. ஆனால் அப்படி அடியோடு பழைய முறையை ஒழிப்பதற்கு வேண்டிய தைரியம் உள்ளவர் யாரும் இல்லை. அத்தகைய தைரியசாலி காந்தி மகான் ஒருவர்தான். அவர் இன்று நம்மிடையே இல்லை. ஆகையால் அந்தப் பழைய காலங்கடந்த உளுத்துப்போன குமாஸ்தா கல்வி முறையையே இன்னமும் கட்டிக் கொண்டு அழுகிறோம். அந்தக் கல்வி முறையில் உள்ள குறைகளைப் போக்கிச் சீர்திருத்திச் சுதந்திர இந்தியாவுக்குத் தகுதியாக்குவதற்காக நம் தேசியத் தலைவர்களும் காங்கிரஸ் மந்திரிகளும் முயன்று வருகிறார்கள். அவர்களுடைய முயற்சி இதுவரையில் கணிசமான பலன் எதுவும் அளித்து விடவில்லை. சல்லடைத் துவாரங்களை ஒவ்வொன்றாக அடைப்பதற்குச் செய்யும் முயற்சியைப்போலவே கல்விச் சீர்திருத்த முயற்சியும் இருந்துவருகிறது. ஒரு துவாரத்தை அடைத்து விட்டு இன்னொரு துவாரத்துக்குப் போவதற்குள்ளே அடைத்த துவாரம் மறுபடியும் பொத்துக்கொண்டு விடுகிறது.


பழைய கல்வி முறையில், — அதாவது இன்னமும் நம்மைப் பிரிய மனமின்றி அட்டைபோல் ஒட்டி நம் குழந்தைகளின் இரத்தத்தை உறிஞ்சிக் கொண்டிருக்கும் கல்வி முறையில்.— பாஷைகள் வகித்த ஸ்தானம் முக்கியமாகச் சீர்திருத்த வேண்டிய காரியங்களில் ஒன்றாயிருந்தது. நமது பள்ளிக்கூடங்களிலும் கலாசாலைகளிலும் ஆங்கில பாஷையே தனியரசு செலுத்தி வந்தது. பிள்ளைகளின் தாய் மொழியும் மற்ற இந்திய மொழிகளும் மூலையில் ஒதுங்கி நின்று, அழைக்கும்போது அருகில் வந்து, கைகட்டி வாய் பொத்தி ஆங்கிலத்துக்குச் சேவகம் செய்து வந்தன. இந்தப் படு கேவலமான நிலைமையைச் சுதந்திர இந்தியாவில் யாரும் சகிக்க முடியாதுதானே?


ஆகையால் மாகாணங்களில் காங்கிரஸ் ஆட்சி ஏற்பட்டவுடனே காங்கிரஸ் மந்திரிகள் பாஷைச் சீர்திருத்தத்தை முதலாவது சீர்திருத்தமாக எடுத்துக் கொண்டனர். ஆங்கிலத்தைச் சர்வாதிகார பீடத்திலிருந்து இறக்கவும், தாய் பாஷைக்கும் தேசிய பாஷையாகிய ஹிந்திக்கும் தக்க இடம் கொடுக்கவும் முயன்றனர்.

சென்னையில் மாஜி கல்வி மந்திரி ஸ்ரீ டி. எஸ். அவிநாசிலிங்கம் தமிழ் நாட்டில் தமிழுக்கும் தெலுங்கு நாட்டில் தெலுங்குக்கும்—இப்படித் தாய் மொழி

நிகழ்ச்சிச் சித்திரம்

-சாஸ்திரி







மான பழியும் வேறு இல்லை. சுதந்திர இந்திய சர்க்கார் ஏற்பட்டவுடன் மிகவும் பொறுப்பும் கௌரவமும் வாய்ந்த சட்ட மந்திரி பதவிக்கு காங்கிரஸ் தலைவர்கள் டாக்டர் அம்பேத்காரை நியமித்தார்கள். அது மாத்திரமல்ல, குடியரசு இந்தியாவின் அரசியல் திட்டத்தைத் தயாரிக்கும் மகத்தான பொறுப்பையும் அவரிடம் ஒப்புவித்தார்கள்.


டாக்டர் அம்பேத்கார் காங்கிரஸ்காரர் அல்ல; காங்கிரசுக்கு நேர் விரோதமாகவும் இருந்தவர். அப்படியிருந்தும் அவரை மந்திரி பதவியில் நியமித்து, இந்தியாவின் தலைவிதியை நிர்ணயிக்கும் பொறுப்பையும் அவரிடம் ஒப்புவித்ததன் மூலம் காங்கிரஸ் சர்க்கார் ஹரிஜனங்கள் மீது தங்களுக்குள்ள அபிமானத்தையும் மதிப்பையும் காட்டினர்; ஹரிஜனங்களுக்கும் மற்றவர்களுக்கும் சுதந்திர இந்தியாவில் எவ்வித வேற்றுமையும் இல்லை என்பதைச் செய்கையில் நிரூபித்தனர்.

மதமாற்ற மிரட்டல்!

ஹரிஜனங்களுக்கு இன்னும் பல குறைகள் இருக்கின்றன என்று மேற்படி மகாநாட்டில் சிலர் கூறியதில் உண்மை இருக்கிறது. எனினும் அதற்குக் காரணம் காங்கிரஸ் சர்க்கார்கள் என்று சொல்லுவதற்கில்லை. ஜாதி ஹிந்துக்களின் மனம் மாறவில்லை என்றும் சொல்ல முடியாது. எத்தனை எத்தனையோ வருஷங்களாக ஹிந்து மதத்தில் படிந்துள்ள ஊழல்கள் அடியோடு மறைவதற்கு இன்னும் சிறிது காலம் செல்லும் என்பதைத் தவிர, அத்தகைய நிலைமைக்கு வேறு காரணம் எதுவுமில்லை. எனினும் அந்த மகாநாட்டின் தலைவர் குறிப்பிட்டிருப்பது போல் ஹரிஜனங்கள் தனிக் கட்சியாக இருப்பதால் மேற்படி குறைகள் உடனடியாக மறைந்து விடாது. டாக்டர் அம்பேத்காரின் பிரசாரத்துக்கு இணங்க மத மாற்ற மிரட்டலினாலும் அந்தக் குறைகள் நிவர்த்தியாகிவிட முடியாது.

ஹரிஜனங்களின் கஷ்டங்கள் தீர மதம் மாறவேண்டும் என்று கூறுவோர், சில தினங்களுக்கு முன் நாகபுரியில் நடந்த ஹரிஜனத் தலைவர்களின் மகாநாட்டுக்குத் தலைமை வகித்த சென்னை சபா நாயகர் ஸ்ரீ ஜே. சிவஷண்முகம் பிள்ளை என்ன யோசனை சொன்னார் என்பதை ஊன்றிக் கவனிக்க வேண்டும்.

"தீண்டாமையை ஒழிப்பதற்கு மத மாற்றந்தான் அருமருந்து என்று கூறுவதை நான் முற்றிலும் ஆட்சேபிக்கிறேன். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தாழ்த்தப்பட்டோரின் மதம் எதுவாயினும், இன்று நாம் ஹிந்து மதத்தையே பின்பற்றி வருகிறோம். எனவே, ஜாதி ஹிந்துக்களுக்குப் பயந்துகொண்டு நாம் மதம் மாறுவது கூடாது. ஹிந்து மதத்தில் இருந்து கொண்டே நமது உரிமைகளைப் பெறுவதற்காகப் போராடி வெற்றிபெற வேண்டும்" என்று ஸ்ரீ சிவஷண்முகம் பிள்ளை கூறினார். ஹரிஜனங்கள் ஸ்ரீ பிள்ளை அவர்களின் புத்திமதியைப் பின்பற்றுவார்களாயின் அவர்கள் இந்தியாவிலுள்ள மற்றவர்களைப்போலச் சமத்துவ உரிமைகளைப் பெற அதிக காலம் செல்லாது. ஹரிஜனங்கள் வேறு மதத்தையோ அல்லது கம்யூனிஸ்டு கட்சியையோ நாடாதிருக்க வேண்டுமாயின் ஜாதி ஹிந்துக்கள் அவர்களுக்குச் சர்வ உரிமைகளையும் அளிக்கச் சிறிதும் தயங்கக் கூடாது.



திருமணம்

★

பி. எஸ். மணி விளம்பரக் கம்பெனியின் முதலாளியான ஸ்ரீ பி. எஸ். ஐயரின் புதல்வி சௌ. பார்வதிக்கும் நெல்லிக்குப்பம் எலெக்டிரிகல் இன்ஜினியர் ஸ்ரீ ஏ. எஸ். கைலாசம் அவர்களுக்கும் ஜூன் மீ 4-ந் தேதி தியாகராய நகரில் சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது. திருமணத்துக்கு உறவினர்களும் நண்பர்களும் திரளாக விஜயம் செய்து தம்பதிகளை ஆசீர்வதித்தனர்.

மலர் 9

கல்கி

இதழ் 46

என்ன சேதி?

மறுக்க முடியுமா?

“ஹரிஜனங்கள் போன்ற பிற்போக்கான சமூகத்தினரின் கல்வி, பொருளாதார வசதிகளை அபிவிருத்தி செய்ய வேண்டியது சர்க்காரின் முழு முதற் கடமை. அவர்களுக்கு யாரும் எவ்வித அநீதியும் இழைக்காமல் பாதுகாக்கச் சர்க்கார் முற்றிலும் கடமைப் பட்டிருக்கிறார்கள்.

“தீண்டாமை அடியோடு ஒழிக்கப்பட்டிருக்கிறது. தீண்டாமையை அடிப்படையாகக் கொண்ட எந்தக் காரியமும் சட்டப்படி தண்டிக்கக் கூடிய குற்றமாகும்.”

இவ்வாறு குடியரசு இந்தியாவின் புதிய அரசியல் திட்டம் உலகத்துக்குப் பறை சாற்றுகிறது.

இந்தியா கதி மோட்சம் அடைந்து சுதந்திரம் பெறுவதற்கு எவ்வாறு மகாத்மா காந்தியும் காங்கிரசும் பொறுப்பாளிகளோ, அதுபோலவே ஹரிஜனங்களுக்குக் கதி மோட்சம் ஏற்படுவதற்கும் காந்தி மகானும் காங்கிரசுமே காரணமாக இருந்து வந்திருக்கிறார்கள். இந்த உண்மையை உலகம் முழுவதும் ஒத்துக்கொண்டிருக்கிறது; சரித்திரமும் ஒத்துக்கொள்ளும் என்பதில் சந்தேகம் இல்லை.

ஆனால், யாரும் மறுக்க முடியாத இந்த உண்மையை மறைக்க முயற்சிக்கும் ஒரு கோஷ்டியினர் இந்த நாட்டில் இருக்கத்தான் செய்கிறார்கள். சென்னையிலே சென்ற வாரம் நடந்த தமிழ் நாடு ஷெட்யூல்ட் வகுப்பினர் மகாநாட்டில் ஹரிஜனங்களுக்காகக் காங்கிரஸ் எதுவுமே செய்யவில்லை என்று முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைக்க முயற்சித்திருக்கிறார்கள்!

இந்தியா சுதந்திரம் பெறவேண்டியது எவ்வளவு அவசியமோ, அதுபோல் தீண்டாமை ஒழிய வேண்டியதும் அவசியம் என்று மகாத்மா காந்தி இடைவிடாது வலியுறுத்தி வந்ததை யாராவது மறுக்கவோ மறைக்கவோ முடியுமா? ஹரிஜனங்களை நிரந்தரமாக ஒதுக்கி வைக்கும் முறையை, அதாவது விபரீதமான தனித் தொகுதி முறையைத் தகர்ப்பதற்காக காந்தி மகான் உயிரையும் தியாகம் செய்யத் தயாராக இருந்ததை யாராவது மறைக்க முடியுமா? தீண்டாமை என்பது ஹிந்து மதத்தின் சாபக்கேடு என்று காங்கிரஸ் தலைவர்கள் இடைவிடாது பிரசாரம் செய்து வந்ததால் ஏற்பட்டுள்ள மகத்தான பலனை யாராவது மறைக்க முடியுமா?

இந்தியா முழுவதும் தீண்டாமையை ஒழிப்பதற்காக ஆலயப் பிரவேசத்தைச் சட்டபூர்வமாக அமுலுக்குக் கொண்டு வந்தது காங்கிரஸ் சர்க்கார்களேயன்றி வேறு யாருமில்லை. குடியரசு இந்தியாவின் அரசியல் திட்டத்தின்படி ஹரிஜன் வகுப்பைச் சேர்ந்த யாருக்கும் எந்த உயர்தரப் பதவியும் வகிப்பதற்கு உரிமை உண்டு. ஏன், இந்தியாவின் ஜனாதிபதியாவதற்கும் உரிமை உண்டு. அவர்களுக்குள்ள எல்லாக் குறைகளும் அரசியல் திட்டத்தின் மூலம் அறவே நிவர்த்திக்கப் பட்டிருக்கின்றன.

அபாண்டமான பழி

தமிழ் நாடு ஷெட்யூல்ட் வகுப்பினரின் மகாநாட்டுக்குத் தலைமை வகித்த அகில இந்தியா ஷெட்யூல்ட் வகுப்பினர் பெடரேஷன் காரியதரிசி ஸ்ரீ பி. என். ராஜபோஜும், மகாநாட்டில் பேசிய மற்றவர்களும் காங்கிரஸ் பக்தர்களான ஹரிஜனங்களுக்கு மாத்திரமே காங்கிரஸ் சர்க்காரில் உத்தியோகங்கள் கிடைக்கின்றன என்று புகார் கூறினார்கள். அதைக் காட்டிலும் அபத்தமும் அபாண்ட

16-6-50 முதல் தென்னிந்தியாவில் எல்லா
முக்கிய நகரங்களிலும் திரையிடப்படுகிறது

சோபனாசலாவின்



மகோன்னதச் சித்திரம்

லக்ஷ்மம்மா

(தமிழ்)

கற்புக்காக பலியான காரிகையின் பரிதாபக் கதை

○●○

★ கிருஷ்ணவேணி ★ ருக்மணி


★ நாராயண ராவ் ★ டாக்டர் சுப்பராவ்

மற்றும் பலர் நடித்தது

○●○

CHAMRIA TALKIE DISTRIBUTORS

MADRAS-2 - MADURA - ERNAKULAM





கல்கி

பொருளடக்கம்

மலர் 9 } ஜூன் 18 { விக்ருதி ௵
இதழ் 46 } { ஆனி 4

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்: சம்பவங்களும் கற்பனையே.


நடைமுறைக்கேற்ற
நாகரீகம்
பரம்பரையாகக் குன்றின்மீது விளக்காகப் புகழுடன் விளங்கும் 'இன்டர் நேஷனல்' கடிகாரங்களில் ஸ்திரீகளுக்கென நடைமுறை நாகரீகத்துக்கு ஏற்றபடி புதிய பாஷனில் கடிகாரங்களை பேவர்-லூபா கம்பெனியார் தயாரித்துள்ளனர். பேவர்-லூபா ஷோரூம்களிலோ அல்லது உங்கள் பேவர்-லூபா டீலரிடமோ பார்வையிடலாம். அல்லது I.W.C. காட்லாகிற்கு எழுதுங்கள்.
● மேலேயுள்ள படம்: No. M7/3292 5''' மூவ்மென்ட் 16 ஜுவெல், 18 காரட் குஷன் ஷேப், கோல்டு கேஸ், ஆப்டிக் கண்ணாடி, வெள்ளி வார்த்த டயல். ரூ. 648
IWC
● நடுவிலுள்ள படம்: No. 7777. 7$\frac{3}{4}$''' மூவ்மென்ட் 17 ஜுவெல், எடுப்பான சதுர வடிவத்தில் 18 காரட் கோல்டு கேஸ், வெள்ளி வார்த்த டயல், பட்டு அல்லது தோல் காறுடன். ரூ. 628
● அடியிலுள்ள படம்: No. 7787. 7$\frac{3}{4}$''' மூவ்மென்ட் 17 ஜுவல், கவர்ச்சியுள்ள 18 கா. கோல்டு கேஸ், வெள்ளி வார்த்த டயல் பட்டு அல்லது தோல் காறுடன் ரூ. 616
FAVRE-LEUBA
FAVRE-LEUBA
பேவர் - லூபா & கோ. லிட்., பம்பாய் & கல்கத்தா
Stronachs


எனக்குப் புரியவில்லை
(ஆனால் அம்மா அறிவாள்!)
குழந்தை அழுததன் காரணம்—
"ஐயோ, என்னமா குழந்தை இப்படி அழுகிறது? இப்பொழுது தானே பாலூட்டி துணியும் மாற்றிப் போட்டேன்!"
"பெண்ணே, காரணம் நானறிவேன் - அசௌகரியத்தினால் தான் அது அழுகிறது-சீர் படுத்தும் வழி இதோ!"
5 நிமிஷத்திற்குப் பிறகு:
"அம்மா, என்ன ஆச்சரியம் இது! இப்பொழுது எவ்வளவு குஷியாக சிரித்து விளையாடுகிறான், பார்!"
"குழந்தைகளின் இளம் சருமம் எரிச்சல் கொடுக்கும் போது, அதுகள் அழாமல் என்ன செய்யும்? ஆனால் ஜான்ஸன்ஸ் பேபி பவுடர் எரிச்சலை க்ஷணம் தணித்து இதமும் சுகமும் அளிக்கிறது. குளிப்பாட்டிய பிறகு தவறாமல் அதை உபயோகிப்பது நலம்."
அதற்குப் பிறகு தாயாரின் யோசனைப் படியே நடந்து வந்தேன்.
குழந்தை இப்பொழுது படுத்துவதில்லை—
—காரணம் ஜான்ஸன்ஸ் பேபி பவுடர்!
ஜான்ஸன்ஸ் பேபி பவுடர் உலகிலேயே மிக மென்மையான சருமத்திற்கும் இதமும் சுகமும் அளிப்பதற்கென்று தயாரிக்கப்பட்டது. அதனால் தான் புத்திசாலிகளான தாய்மார்கள் என்றுமே தமது குழந்தைகளுக்கும், தமக்கும் கூட இப் பவுடரை உபயோகித்து வருகின்றனர்.
குழந்தைக்குச் சிறந்தது— உங்களுக்கும் சிறந்தது!
Johnson's BABY POWDER
உலகில் மிக அதிகமாக விற்பனையாகும் பேபி பவுடர்!
ஜான்ஸன்ஸ் பேபி பவுடர்
Johnson's
Reg. Trade Mark
BABY POWDER
ஜான்ஸன் & ஜான்ஸன் தயாரிப்பு
ஏகபோக விநியோகஸ்தர்கள்: ஐ.ஸி.ஐ. (இந்தியா) லிமிடெட்

உங்கள் குழந்தைக்குப் பூரண பாதுகாப்பை அளியுங்கள்.




புரியாத கோளாறுகளுக்கு சாதாரண சமாதான மொழிகளினால் திருப்தி அடையாதீர்கள். அவை மறுபடியும் உண்டாகின்றதா? ஏன்? என்பதைப்பற்றி கவனியுங்கள். அந்த சாதாரண, புரியாத கோளாறுகள்தான் ஈரல், குலை நோயைக்குறிக்கலாம். கவனிக்காவிடில் நோய்க்குட்பட்ட ஈரல், குலை மாதக்கணக்கில் துன்பத்தைக் கொடுக்கலாம்.

வைத்திய சிகிச்சையொன்றுதான் குழந்தைகளை வியாதியினின்று மீட்டு ஆரோக்யத்தை அளிக்கும்.

ஜம்மி குமாரர் நாற்பது வருடங்களாக குழந்தைகளின் ஈரல், குலை வியாதியை குணப்படுத்துவதில் ஒன்றிலேயே ஈடுபட்டு உறுதியான சிகிச்சை முறையை நுணுக்கமாக ஏற்படுத்தியுள்ளார். இந்நீண்டகால அனுபவத்தின் உதவியை பெற்றோர்களும், டாக்டர்களும் ஜம்மி சிகிச்சை ஸ்தாபனங்களின் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

ஜம்மியின் ஆலோசனை டாக்டர்கள் அடிக்கடி மற்ற நகரங்களுக்கும் வருவார்கள்.



அபாயத்திற்குட்படும் குழந்தைகள்

இரண்டு வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு ஈரல், குலை நோய் சர்வ சாதாரணம். உங்கள் குழந்தை முற்றிலும் ஆரோக்யமாகக் காணப்பட்டாலும் டாக்டர்களின் அனுபவம் வாய்ந்ததை, இவ்வியாதியின் ஆரம்ப அறிகுறிகளை கண்டு பிடிக்கலாம். இந்த வயதில் குழந்தைகளுக்கு கிரமப்படி வைத்ய பரிசோதனை செய்யுங்கள். இவ்வயதிலேயே ஜம்மியின் லிவர்க்யூரை உபயோகப்படுத்த ஆரம்பித்தால் குழந்தைகளுக்கு ஈரல், குலை நோய்களிலிருந்து பாதுகாப்பு அளிக்கலாம்.

பெரிய கடை தெரு, தெப்பக்குளம், திருச்சிராப்பள்ளி - பெரிய தெரு, கும்பகோணம் - ஆர்காட் ஸ்ரீனிவாஸாச்சார் தெரு, பெங்களூர் ஸிடி.

மற்ற சிகிச்சை ஸ்தாபனங்கள் :— மதுரை - நாகப்பூர் - டில்லி - கல்கத்தா - விஜயநகரம் - விஜயவாடா.

இவைகளின் காரணம் புரியாவிட்டால்.....

நெடுநெடுப்பு — சோம்பல் — இலேசான காய்ச்சல் — பசியின்மை — மலச்சிக்கல் — அல்லது வயிற்றுப்போக்கு — வாந்தி — பெருத்த அல்லது உஷ்ணமான வயிறு — சீர் இளைப்பு.

உங்கள் குழந்தையை டாக்டரிடம் எடுத்துச் செல்லுங்கள்.

ஜம்மியின்

லிவர்க்யூர்

[illegible]

ஜம்மி வெங்கடரமணய்யர் & ஸன்ஸ்,

பிராடிஸ் ரோடு, மைலாப்பூர், மதராஸ்.

MCAR-J 3M-TAMIL

ஜூன் 24-ம் தேதி முதல் திரையிடப்படும்



மாப்பிள்ளை வருகிறார்!

கோணல்

தபால்காரன் கொடுத்து விட்டுப் போன கடிதத்தைப் படித்துவிட்டு, ரங்கு அதை அலுப்புடன் மேஜைமீது வீசி எறிந்தான்.

புவனா மெதுவாக மேஜை மீது கிடந்த அந்தக் கடிதத்தைப் பார்த்து விட்டு, "அண்ணா, யாரு கடிதம் எழுதி இருக்கா?" என்றாள் ஒன்றும் தெரியாதவள் போல். அந்தக் கடிதத்தைப் பார்த்தவுடன் அது யாரிடமிருந்து வந்திருக்கிறது என்பது அவளுக்கு நன்கு விளங்கி விட்டது. இருந்தாலும் சாமர்த்தியமாகவோ, அசட்டுத்தனமாகவோ ரங்குவை அப்படி ஒரு கேள்வியைக் கேட்டு வைத்தாள்.

"யார் எழுதி இருப்பா என்று நீ அவசியம் தெரிந்து கொள்ள வேண்டுமோ?" என்று சொல்லிக் கொண்டே அந்தக் கடிதத்தை எடுத்துப் பின்புறமாக மறைத்துக் கொண்டான் ரங்கு.

"நான் கேட்டது பிசகுதான்: மன்னித்துக் கொள்!" என்று சொல்லி முகத்தை வெடுக்கென்று திருப்பிக் கொண்டாள்.

"அதற்குள் கோபித்துக்கொள்கிறாயே? இதோ சொல்லுகிறேன். இந்தக் கடிதம் யார் எழுதியிருக்கிறார்கள், தெரியுமா?— சரி, நீயேதான் சொல்லு பார்ப்போம்?" என்றான் விளையாட்டாக.

புவனாவின் முகத்தில் சிறிது நாணம் பரவியது. "ஒருவேளை அவர் எழுதியிருப்பாரோ என்று கேட்டேன்!" என்றாள்.

"ஆமாம், அவரேதான்! உன்னை ஆட்கொள்ளவும், எங்களை ஆட்டிவைக்கவும் இந்தப் பூலோகத்தில் அவதாரமெடுத்துள்ள ஒரே ஒரு புண்ணிய புருஷர் இருக்கிறாரே, அவரே தான் இந்த ஸ்ரீமுகத்தை எழுதி இருக்கிறார்! ஆனால் அவர் என்ன எழுதியிருக்கிறார் என்பதை மாத்திரம் நான் சொல்லவே மாட்டேன்."

"நீ சொல்லவே வேண்டாம். அவர் ஏதாவது புதிதாக எழுதி இருந்தாலல்லவோ நான் தெரிந்து கொள்ள வேண்டும்? 'நான் புறப்பட்டு வருகிறேன்' என்று எழுதி யிருப்பார். 'வருகிறேன், வருகிறேன்' என்று ஏதாவது பரிகாசம் செய்கிறாரா? ஏன் நம்மை இவர் இப்படிப் பயித்தியமாய் அடிக்கறும்? எனக்கு இதைக் கேட்கவே பிடிக்கவில்லை!" என்றாள் அலுப்புடன்.

"எனக்குக்கூடத்தான் இந்தக் கடிதத்தைப் பார்க்கவே பிடிக்கவில்லை. ஆனால் பார்த்துத்தானே ஆக வேண்டியிருக்கிறது? ஆனால் இந்தத் தடவை அவர் கட்டாயம் வந்து விடுவார் என்று தோன்றுகிறது. இந்தக் கடிதத்தைப் படி: 'கட்டாயம்' 'அவசியம்' 'நிச்சயம்' வந்து விடுகிறேன் என்று எவ்வளவு இடத்தில் எழுதி இருக்கிறார், பார்!"

புவனா கடிதத்தை வாங்கிப் படித்தாள். அவள் முகத்தில் எவ்விதமான மலர்ச்சியும் ஏற்பட்டுவிடவில்லை. "இப்பொழுது மாத்திரம் என்ன புதுமையாக எழுதி விட்டார்? பழைய கதைதானே? அவர் எழுதும்போதெல்லாம் தலைபோகிற காரியமிருந்தாலும் எல்லாவற்றையும் விட்டுவிட்டு வந்து விடுவதாகத்தான் எழுதுகிறார். ஆனால் அவர் புறப்படுகிற போது இதைவிடத் தலை போகிற காரியங்களெல்லாம் வந்து தடுத்து விடுகிறது. அண்ணா, அவர் வருகிறவரையில் ஒன்றும் நிச்சயமில்லை."

"ஆமாம், வருகிறவரையில் நிச்சயமில்லைதான்! இந்தக் காலத்தில் ஒன்றையுமே நம்ப முடியவில்லை. அவர் இவ்விடம் வருவதாகக் கிளம்பினாலும் அவர் வருகிற வண்டி இந்த ஊர் ஸ்டேஷனுக்கு வந்து சேருகிற வரையில் எனக்கு நிச்சயமே இல்லை......"

புவனா 'கடகட' வென்று சிரித்தாள். "ஆமாம், ஆறு தடவை வருகிறேன், வருகிறேன் என்று கடிதம் போட்டு வராமல் ஏமாற்றி விட்டு, இந்தத் தடவை புறப்பட்டு வந்தால் ரயில்கூட எங்கேயாவது கவிழ்ந்தாலும் கவிழ்ந்துவிடும், இந்த அதிசயத்தைக்கண்டு!" என்றாள்.

"நான் அப்படி நினைக்கவில்லை. மாப்பிள்ளை மாத்திரம் சொன்ன வார்த்தையைக் காப்பாற்றுவது என்று முடிவு செய்து விட்டால் இந்த அதிசயத்தைக் கண்டு தண்டவாளம் அத்தனையும் பிடுங்கப்பட்டிருந்தாலும் ரயில் பத்திரமாக நம்ம ஊருக்கு வந்து சேர்ந்து விடும்" என்று சொல்லிவிட்டு ரங்கு சிரித்தான்.

புவனா வேறெங்கோ பார்வையைச் செலுத்திய வண்ணம் ஆழ்ந்த யோசனையிலிருந்தாள். அவளுக்கு இவ்வளவு அலுப்

பும் வெறுப்பும் ஏற்படுவதற்குக் காரணங்கள் இருந்தன. அவள் கணவன் ராகவன் ஆறு தடவை வருவதாகக் கடிதம் எழுதி வராம லிருந்து விட்டான். இது ஏழாவது கடிதம். அண்ணா இப்படிப் பரிகாசமாகப் பேசும்படி தன் கணவன் நடந்து கொள்வது அவளுக்கு அவமானமாகவும் ரோசமாகவும் இருந்தது. ஆகவே, அவள் ஒரு பெருமூச்சு விட்டு விட்டு, "அண்ணா! நீ வீணாகச் சிரமப்படாதே! இந்தத் தடவை நீ அனாவசியமாக ரயில்வே ஸ்டேஷனுக்குப் போக வேண்டாம். அவர் அப்படி வந்தாலும் சின்னக் குழந்தையா? தானாக வீட்டிற்கு வந்து சேரட்டும்!" என்றாள் அலட்சியமாக.

"நான் போகாமல் இருந்து விடுவேன். ஆனால் அந்த ஆசாமி யார் தெரியுமா? மாப்பிள்ளை! ஆமாம், புது மாப்பிள்ளை!" என்றான் கேலியாகச் சிரித்துக் கொண்டே.

"மாப்பிள்ளை என்றால் என்ன, இரண்டு கொம்பு முளைத்திருக்குமா?"

"ஹாம், சந்தேகமில்லாமல்! அந்த ஆசாமிக்கு இரண்டு கொம்பு முளைத்திருப்பது உனக்குத் தெரியாது. ஏனென்றால் நீ அவருடைய மனைவி. சில மாப்பிள்ளைகளுக்குக் கொம்பு மாத்திரம் முளைப்பதில்லை. ஒரு வால்கூட முளைத்திருப்பதாகச் சிலர் சொல்லுகிறார்கள்!"

"இருந்தாலும் நீ இந்தத் தடவை இரண்டு மைல் தூரம் நடந்து போய் ரயில்வே ஸ்டேஷனில் காத்துக் கிடக்க வேண்டாம். அவர் எப்படி வேண்டுமானாலும் வந்து சேரட்டும். என்ன குடி முழுகிப் போய்விடப் போகிறது!"

"அடாடாடா! உனக்குத் துளிக்கூடத் தெரியவில்லை, புவனா! ஒரு குடும்பத்திற்கு ஒரு மாப்பிள்ளை அணுகுண்டு, ஹைட்ரஜன் குண்டு இவைகளை யெல்லாம்விட அபாயமானவர். தவிர ஒரு புது மனிதனுக்கு இந்த ஊர் ரயில்வே ஸ்டேஷனில் ஒரு டாக்ஸியோ, சாதாரண குதிரை வண்டியோ கிடைப்பது எவ்வளவு சிரமம் தெரியுமா?"

"எவ்வளவு சிரமம் என்று அவர்தான் ஒரு தடவை அனுபவப்பட்டுத் தெரிந்து கொள்ளட்டுமே!"

"தரமான யோசனைதான்! இந்த அனுபவத்தினால் ஏற்பட்ட படிப்பினையை எந்த மாப்பிள்ளையும் நல்லதாக எடுத்துக் கொள்ள மாட்டார்."

இந்தச் சமயத்தில் புவனாவின் தாயார் மீனாக்ஷி அம்மாள் பிரவேசித்தாள். 'என்ன? மாப்பிள்ளை, மாப்பிள்ளை என்று பேசுகிறீர்களே! அவர் ஏதாவது கடிதாசு எழுதி இருக்காரா?" என்றாள் ஆர்வமும் ஆவலும் பொங்க.

"வழக்கம்போல் வருகிறேன் என்று அண்ணாவுக்குக் கடிதம் எழுதி இருக்கிறார்!" என்றாள் புவனா சுவாரஸ்யமில்லாமல்.


"அவர் நிச்சயம் வருகிறதாக எழுதி இருக்கிறார் அல்லவா? எப்பொழுது வரப்போகிறார்?" என்றாள் முன்னிலும் அதிக ஆவலுடன் அவள் தாயார்.

"எந்தத் தடவைதான் அவர் நிச்சயம் வந்து விடுவேன் என்று எழுதவில்லை? ஆனால் அவர் ஒரு தடவைகூட நிச்சயம் வந்ததில்லை!"

"இல்லை, இல்லை. இந்தத் தடவை அவர் நிச்சயம் வந்து விடுவார்! ஏனென்றால் 'அவசியம் வருகிறேன். நிச்சயம் வருகிறேன். கட்டாயம் வருகிறேன்' என்று மூன்று இடத்தில் எழுதி இருக்கிறார்" என்றான் ரங்கு.

"'சத்தியமாக வருகிறேன்' என்று எழுத மறந்து போயிருப்பார்!" என்றாள் புவனா கேலியாக.

"பைத்தியம், உனக்கு என்ன தெரியும். பெரிய உத்தியோகத்திலே இருக்கிற



பிள்ளைகளுக்கு நினைத்தால் நினைத்தபடி வரமுடியாமல்தான் இருக்கும். அது போகட்டும், அவர் எப்போ வருகிறார்? அதையும் சொல்லிவிடு. எனக்குத் தலைக்கு மேல் காரியம் கிடக்கு; போகணும்!" என்று துடித்தாள் மீனாக்ஷி அம்மாள்.

"நாளை சாயந்திர வண்டியில் வருகிறார்" என்றான் ரங்கு.

"சரி, அப்படி யென்றால் இப்பொழுதிலிருந்தே வேண்டிய காரியங்களைச் செய்தால்தான் சரியாக இருக்கும். வருகிற பிள்ளையாண்டானுக்கு வாய்க்கு ருசியாக ஏதாவது இரண்டு செய்து கொடுக்க வேண்டாமா? சர்க்கரை அகப்படுவது கஷ்டமாக இருக்கிறது! எதிர்வீட்டுச் சங்கரன் எங்கேயோ வீசை மூன்று ரூபாய் வீதம் வாங்கினானாம். அவனிடம் மூன்று வீசைக்குப் பணம் கொடுத்து வாங்கிக் கொண்டு வரச்சொல்லுகிறேன். நாடார் கடையில் நல்ல நெய் வீசை ஏழரை ரூபாயாம். குப்பம்மாவை விட்டு இரண்டு வீசை வாங்கிக்கொண்டு வரச்சொல்லுகிறேன். நல்ல காப்பிக்கொட்டை எங்கே கிடைக்கும்? அதை நீதான் பார்த்து வாங்கிக் கொண்டு வரணும். பணம் போனால் போகட்டும்" என்று நிற்கக் கூட சாவகாசம் இல்லாதவள் போல் பரபர வென்று சொல்லிக் கொண்டே போனாள் மீனாக்ஷி அம்மாள்.

"ஏனம்மா இவ்வளவு அலட்டிக்கிறே? அவர் வருகிறார் என்பது என்ன நிச்சயம்? ஒவ்வொரு தடவையும் நீ எல்லாம் செய்து வைக்கிறாய். அந்தத் துரதிருஷ்டம் பிடித்த மாப்பிள்ளை இந்த அல்வாவையும் லட்டுவையும் சாப்பிடக் கொடுத்து வைப்பதில்லை கடைசியில் அண்ணாவும் நானும்தான் சாப்பிடுகிறோம்" என்றாள் புவனா.

"ஆமாம், அவர் வாரத்திற்கு ஒரு தடவை வருகிறேனென்று கடிதம் எழுதினால் கூடத் தேவலை போலிருக்கிறது. அவர் வருகிற சாக்கிலாவது நமக்கு நல்ல பக்ஷணங்கள் கிடைக்கிறதே!" என்றான் ரங்குவும் சிரித்துக் கொண்டு.

"ஆமாம். பேசுவீர்கள்! உங்களுக்கு என்ன தெரியும், மாப்பிள்ளை அருமை? இரண்டு பெண் குழந்தைகள் பிறந்து கல்யாணம் செய்து கொடுக்கிற போதல்லவா தெரியும்?" என்று சொல்லிக் கொண்டே தன் காரியங்களைக் கவனிக்கச் சென்றாள் மீனாக்ஷி அம்மாள்.

* * *

மாப்பிள்ளை வரப் போகிறார் என்பதற்காக அன்று வீடு அமர்க்களப்பட்டது. அங்கும் இங்குமாகக் கிடந்த புஸ்தகங்கள், துணிகள் எல்லாம் அடுக்கிச் சீராக வைக்கப்பட்டன. நாற்காலி, மேஜை போன்ற சாமான்கள் இடம் விட்டு இடம் மாறின. ரங்கு மார்க்கெட்டிற்குப் போய்க் காய்கறி முதலியவைகளை வாங்கிக் கொண்டு வந்து குவித்தான். வீட்டு வேலைக்காரி துடைப்பமும் கையுமாக நின்றாள். ஐந்து நிமிஷத்திற்கொரு முறை வீட்டைச் சுத்தம் செய்ய வேண்டுமென்று மீனாக்ஷி அம்மாள் உத்தர விட்டிருந்தாள்.

மாப்பிள்ளையை அழைத்து வருவதற்காக முன்னதாகவே ரயில்வே ஸ்டேஷனில் ஒரு டாக்ஸிக்கு ஏற்பாடு செய்திருந்தான் ரங்கு. அன்று மாப்பிள்ளை வந்து விடுவார் என்பதற்கு அடையாளமாகவோ, என்னவோ வானம் கூடக் கருத்து மேகம் மூடி மழை பெய்யும் போலிருந்தது. தாயாரின் இம்சை பொறுக்க முடியாமல் ரங்கு மூன்று மணிக்கே ரயில்வே ஸ்டேஷனுக்குப் போய்விட்டான். அவன் சென்ற அரை மணிக்கெல்லாம் மழையும் காற்றும் பிரமாதமாக வீச ஆரம்பித்தது.

மணி ஆறு ஆகியது. மழை விடவில்லை. அவர் வந்திருந்தால் இவ்வளவு நேரம் டாக்ஸியில் வீடு வந்து சேர்ந்திருப்பார் என்று குழம்பிய வண்ணம் வாசற் பக்கத்து ஜன்னல் வழியாகத் தெரு நோக்கி ஆவலுடன் பார்வையைச் செலுத்திக் கொண்டிருந்தாள் புவனா.

மணி ஆறரை ஆகியது. மழை நின்ற பாடாயில்லை. கைப்பிடி வேறு, கம்பியும் துணியும் வேறாக ஒரு குடையைக் கையில் பிடித்துக் கொண்டு ஓடி வந்து வீட்டு வாசற்படியில் ஏறினான் ரங்கு. அவன் உடையெல்லாம் நனைந்து ஜலம் சொட்டிக் கொண்டிருந்தது. எங்கோ வழுக்கி விழுந்தவன்போல் காவி மண் தேகமெங்கும் திட்டுத் திட்டாகத் தெரிந்தது. இந்த அலங்கோலக் காட்சியைக் கண்டு வாசலுக்கு ஓடி வந்தாள் புவனா.

"இனி அவர் எனக்கு ஆயிரம் கடிதம் போட்டாலும் இனிமேல் நான் ரயில்வே ஸ்டேஷனுக்குப் போக மாட்டேன். இப்பொழுதுதான் எனக்கு நல்ல புத்தி வந்தது!" என்றான் ரங்கு.

"நான் சொன்னபோது வந்ததா, அந்த நல்ல புத்தி? எல்லோருக்கும் அனுபவித்தால்தான் தெரியும். அது சரி, டாக்ஸிதான் முன்னதாகப் பேசி இருந்தாயே, அதில் வந்திருக்கக் கூடாதா?"

"அவர் வராதபோது எதற்காக டாக்ஸி என்று வந்து விட்டேன்."

"சரிதான், உனக்குச் சாதாரண மாட்டு வண்டி கூட அகப்படவில்லையா?"

"எப்படி அகப்படும் இந்த ஊரில்? எனனும் தேடித் தேடிப் பார்த்தேன். கடைசியில் நடந்தே வந்து விடலாம் என்று நினைத்து வந்தேன்."

"குடை ஏது?"

"போகும்போது மழை பெய்யும் போலிருந்ததால் என் சிநேகிதனிடமிருந்து வாங்கிக் கொண்டு போனேன்."

"இந்த ஓட்டைக் குடையையா?"

"போகும்போது நல்ல குடையாய்த் தானிருந்தது. இந்த மழையையும் காற்றையும் தாங்காமல் துணி வேறு, பிடி வேறாகப் பிய்த்துக் கொண்டு கிளம்பி விட்டது......"

"நீயும் வழுக்கி விழுந்து விட்டாய் போலிருக்கிறது!" என்றாள் புவனா, பச்சாத்தாபத்துடன்.

"நான் வழுக்கி விழ மாட்டேன். பறந்துபோன குடையைப் பிடிக்கப் போனேன்: விழுந்து விட்டேன். அதிகமாக ஒன்றும் அடிபடவில்லை. கால் கொஞ்சம் சுளுக்கிக் கொண்டு விட்டது. அவ்வளவுதான்!" என்றான் ரங்கு.

"போகட்டும், இந்த மட்டுமாவது வீடு வந்து சேர்ந்தாயே?" என்றாள் புவனா.

இந்தச் சமயத்தில் "ரங்கு, எப்பொழுது வந்தாய்? மாப்பிள்ளை வரவில்லையா?" என்று கேட்டுக் கொண்டே மீனாக்ஷி அம்மாள் வந்தாள்.

"ஆமாம், வந்து விட்டார்! அண்ணா அவரைச் சட்டை ஜேபியில் போட்டு வைத்திருக்கிறான்!" என்றாள் புவனா.

அவள் தாயாருக்கு எல்லாம் விளங்கி விட்டது. இது வழக்கமாய்ப் போய் விட்ட ஏமாற்றம்தானே?

• • •

மறுநாள் காலை தபால்காரன் ரங்குவிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்துவிட்டுப் போனான்.

பெங்களூர்
5—6—49

அன்புமிக்க ரங்கு,

நான் முன்பு எழுதிய கடிதப் பிரகாரம் வரத் தவறியதற்காக மன்னிக்கவும். முக்கியமான வேலையின் காரணமாக வர முடியாமல் போய்விட்டது. நான் தவறாமல் நாளை மறுநாள் சனிக்கிழமை சாயந்திர வண்டியில் வந்து சேருகிறேன். நீ தவறாமல் ஸ்டேஷனுக்கு வரவும். புவனாவுக்கு என் அன்பைச் சொல்லவும். —ராகவன்

இந்தக் கடிதத்தை வேறு ஒருவருக்கும் காட்டாமல் ரகசியமாக வைத்துக் கொள்ள வேண்டுமென்று புவனாவும் ரங்குவும் முடிவு செய்தனர்.

அன்று சாயந்திரம் வழக்கம் போலக் கோயில் மடத்தில் ராமாயணம் கேட்பதற்காகப் புவனாவின் தாயார் போய் விட்டாள். வீடு பழைய நிலைமையிலேயே அலங்கோலமாக இருந்தது.

மழை வேறு இரண்டு நாளாய் விடாமல் பெய்து கொண்டிருந்தது.

அன்றுதான் அவர் - மாப்பிள்ளை - வரப் போவதாகக் கடிதம் எழுதியிருந்தார். இந்த ரகசியம் ரங்குவுக்கும் புவனாவுக்கும்தானே தெரியும்? இந்தக் கொட்டுகிற மழையில் அவர் வந்தால் ...... புவனாவின் மனம் திக்குத் திக்கென்று இருந்தது. ரங்குவை ரயில்வே ஸ்டேஷனுக்குப் போகச் சொல்லவும் அவளுக்குத் தைரியமில்லை. ரங்குவிற்கும் மனது அப்படித் தானிருந்தது. ஆனால் ஒவ்வொரு தடவையும் ரயில்வே ஸ்டேஷனுக்குப் போய் அவமானப்பட அவனுக்கு இஷ்டமில்லை, அப்படியே தெய்வச்செயலாக மாப்பிள்ளை





மனைவி:—எழுந்திருங்கோ! காப்பி சாப்பிடுகிறீர்களா, அல்லது விளக்கெண்ணெய் குடிக்கிறீர்களா?

கணவன்:—உன் கையால் எது கொடுத்தாலும் ஒன்றுதானே?

வந்து விட்டாலும் தனக்கு சுரம் என்று படுத்துக் கொள்வதற்காகவும் அதற்கு அனுசரணையாக புவனா இருக்கவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டான்.

சாயந்திரம் மணி ஆறரை இருக்கலாம். மழையும் காற்றும் ஆவேசமாகத்தான் இருந்தது. புவனா வாசற்பக்கத்து ஜன்னலிலேயே உட்கார்ந்திருந்தாள். ஒரு கையில் பெட்டியும் தோளில் ஒரு படுக்கையுமாக அவர்கள் வீட்டு வாசற்படியில் ஒரு உருவம் நின்றது. புவனா உற்றுப் பார்த்தாள். திடுக்கிட்டுப் பதறிக் கொண்டே எழுந்தாள். "ரங்கு. அவர் வந்து விட்டார்!" என்று அலறியபடியே உள்ளே ஓடினாள்.

ரங்கு இதைக் கேட்டதும் கட்டிலில் படுத்துக் கொண்டு போர்வையால் தன் முழு தேகத்தையும் கொஞ்சம் கூட வெளியே காட்டாமல் மூடிக் கொண்டான்.

புவனா அவசர அவசரமாக வாசற் பக்கம் வந்து தன் கணவரை வரவேற்றாள். "ஐயோ பாவம்! இந்த மழையில் நனைந்து கொண்டு வந்தீர்களா? ஒரு வண்டி கூட அகப்படவில்லையா?" என்று கேட்ட வண்ணம் அவன் கையிலிருந்த பெட்டியை வாங்கிக் கொண்டாள்.

"பாதகமில்லை, நான் இங்கு வந்து சேருவேன் என்று நினைக்கவே இல்லை. உன்னை எப்பொழுது பார்க்கப் போகிறோம் என்ற துடிப்புத்தான் எனக்கு ஆறு மாதமாய். இந்தத் துடிப்பில் மழை, பூகம்பம் ஒன்றுமே எனக்குப் பெரிதில்லை" என்று சொல்லிப் பெருமூச்சு விட்ட வண்ணம் தோளிலிருந்த படுக்கையை இறக்கி வைத்தான் ராகவன்.

புவனாவுக்கு ராகவனைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. அவனுடைய கோட்டும் சூட்டும் தொப்பலாக நனைந்திருந்தது. அவனுக்குச் சிசுருஷை செய்வதில் தன் கவனத்தைச் செலுத்தினாள்.

ரங்கு படுக்கையில் புரண்ட வண்ணம் முக்கி முனகினான்.

"யார், ரங்குவா அது? அவனுக்கு சுரமா?" என்று கேட்ட வண்ணம் அவனுக்குச் சமீபமாகப் போனான் ராகவன்.

ரங்கு போர்வைக்கு வெளியே மெதுவாக முகத்தைத் தூக்கி, "மாப்பிள்ளையா, வாங்கோ! எனக்குச் சாதாரண சுரம். மூன்று நாட்கள் ரயில்வே ஸ்டேஷனுக்கு வந்து மழையில் நனைந்து வந்தேன். அதனால்தான் இன்று வர முடியவில்லை. பாவம், நீங்கள் கூட மழையில் நனைந்து கொண்டுதான் வந்தீர்கள் போலிருக்கிறது சுரம் வராமலிருக்க வேண்டுமே!" என்றான்.

"எனக்கு அதெல்லாம் வராது. எனக்காக அலைந்து உனக்குத்தான் சுரம் வந்து விட்டது. உடம்பைப் பார்த்துக்கொள். மருந்து சாப்பிட்டாயா?" என்றான் ராகவன் பச்சாதாபத்தோடு.

"மருந்து வேண்டாம். இந்த சுரம் தானாகப் போய்விடும்" என்றான் ரங்கு.

அன்று இரவு புவனா, ரங்குவிடம் தனிமையில் "அண்ணா! என்ன இருந்தாலும் உனக்கு இவ்வளவு நெஞ்சழுத்தம் கூடாது. எந்தக் குடும்பத்திலாவது வீட்டிற்கு வரும் புது மாப்பிள்ளையை இப்படி மழையில் நனைந்து வரும்படி தவிக்க விடுவார்களா? அவர் வராத போதெல்லாம் என் வார்த்தையைக் கூடக் கேட்காமல் ரயில்வே ஸ்டேஷனுக்கு ஓடிப் போய் நிற்பாயே? இன்று ஏன் உனக்கு இவ்வளவு பிடிவாதம்? பாவம், அவர் இப்படி மழையில் நனைந்து கொண்டு வருவாரென்று நான் நினைக்கவே இல்லை. உனக்கு மாப்பிள்ளை என்றால் அவ்வளவு அலட்சியமாய்ப் போச்சு!" என்று பெருமூச்சு விட்டுக்கொண்டே சொல்லி நிறுத்தினாள். அவள் முகத்தில் துக்கமும் விழிகளில் நீரும் ததும்பி நின்றது.

ரங்கு ஒரு பெருமூச்சு விட்டான். அப்பொழுதுதான் அவனுக்கு ஒரு ரகசியம் விளங்கியது. 'சகோதரன் என்கிற பாசத்தைவிடக் கணவன் என்கிற பாசம் பெண்களுக்கு அதிகமானது. அதற்காக அவர்கள் சகோதரனை இடித்துக் காட்டவோ, பழி சொல்லவோ, காட்டிக் கொடுக்கவோ தயங்க மாட்டார்கள்' என்ற அரிய பெரிய தத்துவம்தான் அது!

கம்பர் தரும் காட்சி

டி. கே. சி

297. உயிரைக் கொடுத்துத் தீர்க்க வேண்டியதுதான் !

விபீஷணன் கும்பகர்ணனிடம் வந்தான். அவன் காலில் விழுந்தான். ராமனிடம் வந்து விடும்படியாகக் கண்ணீர் விட்டுப் புலம்பினான்.

கும்பகர்ணனது மனசு இளகி விட்டது. தம்பியை எடுத்து மார்போடு அணைத்துக்கொண்டு கண்ணீர் பெருகிய வாறாகவே சொன்னான்.

“அண்ணன் ராவணன் யுத்தத்துக்கு என்றே என்னை வளர்த்து விட்டான். அவனுக்காக உயிரை தத்தம் பண்ண வேண்டியதுதான். இந்த நிலைமையில் நான் சொல்லுவதை நீ கேட்க வேண்டும்.

“என்னுடைய துயரத்தைத் தீர்க்கிறது என்றால் இப்போதே திரும்பிப் போய் அந்த ராமபிரானோடு கூடிவிட வேண்டும் நீ” என்று மிக்க பரிவோடு சொன்னான் கும்பகர்ணன்.

* *

மேலும் சொல்லுகிறான் :—

“நமக்குக் குலதெய்வம் சிருஷ்டி கர்த்தாவாகிய பிரம்மாதான். அந்த பிரம்மாவின் அருளினாலே உயர்ந்த குணங்கள் உன்னிடத்தில் அமைந்திருக்கின்றன. உலகத்துக்கே ஒப்பற்ற தலைவனாய் இருக்கிறாய் நீ. உன்னுடைய லக்ஷ்யத்திலேயே நின்று நீ தொழில் செய்கிறாய். பொருத்தம்தான் அது உனக்கு.”

‘மலரின்மேல் இருந்தவள் ளல்
வழுவிலா வரத்தினால் நீ
உலைவிலாத் தருமம்பூண் டாய்,
உலகுள தனையும்உன் னாய்,
தலைவன்நீ உலகுக்கெல் லாம்,
உனக்கது தக்கதே யால் :
புலையுறு மரணம்எய் தல்
எனக்குறு புகழ்என்று மால்.’

[மலரின்மேல் இருந்த வள்ளல் : தாமரை மலரில் இருக்கும் பிரம்மதேவன் அருளிய ; வழுவிலா. வரத்தினால் : சிறந்த வரத்தினால் ; நீ உலைவிலாத் தருமம் பூண்டாய் : என்றும் நிலைத்து நிற்பதான தர்ம நெறியைக் கைக்கொண்டு ஒழுகி வருகிறாய் ; அது காரணமாக—உலகு உள தனையும் உள்ளாய் ; உலகம் இருக்கும் வரை புகழுலகத்தில் நீயும் இருப்பாய் ; தலைவன் நீ உலகுக்கெல்லாம் : உலகத்தாருக்கு எல்லாம் வழிகாட்டும் தலைவனாய் இருக்கிறாய் நீ ; உனக்கது தக்கதே யால் : தர்ம நெறியோடு ஒட்டி ஒழுகுதல் உனக்குச் சரிதான் ; ஆனால், புலையுறு மரணம் எய்தல் : மிருகத் தன்மையோடு யுத்தத்தில் சாடி உயிரை விட்டு விட்டால் ; எனக்குறு புகழ் என்றுமால் : எனக்குத் தகுதியான புகழ் என்று ஆகும் ; அவ்வளவுதான்.

குறிப்பு.—ஒரு வீரனுக்கு உயிரை விடுகிற காரியம் பெரிதே அல்ல. ஆயிரம், லக்ஷம் என்று யுத்தகளத்தில் சாமானிய மக்கள் உயிரை விடுவதைப் பார்த்திருக்கிறான் கும்பகர்ணன். அப்படி உயிர் விடுவது மிருக இயல்பு என்றே படுகிறது அவனுக்கு. அப்படி உயிர் விடுவதைப் “புலையுறு மரணம்” என்று குறிக்கிறான்.]

ஒரு உயர்ந்த லக்ஷ்யத்தை ஒட்டித் தனித்து நிற்கும் தன்மையை மிகப் பெரிய தன்மையாகக் கருதுகிறான் கும்பகர்ணன். அந்தக் கருத்து காரணமாகவே தம்பி விபீஷணனை மிக உயர்ந்த லக்ஷ்ய புருஷனாக மதிக்கிறான்.

* *

விபீஷணனை மிக உயர்ந்த ஸ்தானத்தில் ஒதுக்கி வைத்துவிட்டுத் தன் போன்ற சாமானிய மக்களுக்கு உரிய கடமை இன்னது என்பதை எடுத்துச் சொல்லுகிறான்.

“அரசனானவன் யோசனை இல்லாமல் அக்கிரமம் செய்ய எத்தனிக்கலாம். அப்போது என் போன்றவர்கள் செய்யவேண்டியது என்ன என்பதைச் சொல்லுகிறேன்.

“அக்கிரம வழியை விட்டு நல்வழிக்குக் கொண்டுவர முயலவேண்டும். அது நல்ல காரியம். சந்தேகமில்லை.

“ஆனால் அவனைத் திருத்துதல் முடியாது என்றால், வேறு வழி இல்லைதான் என்போன்றவர்களுக்கு.

“என்ன செய்ய வேண்டும் நாங்கள் ? சொல்லுகிறேன் கேள்.”

கருத்திலா இறைவன்றீ மை
 கருதினல், அதனைக்காத் துத்
திருத்தலாம் ஆகில்நன் றே;
 திருத்துதல் தீராதா யின்
பொருத்துறு பொருள்உண்டா மோ?
 பொருதொழிற்(கு) உரியராய்
 மற்(று)
ஒருத்தரின் முன்னம்சா தல்
 உண்டவற்(கு) உரிமையம் மா.

[கருத்திலா இறைவன் தீமை கருதினல்: யோசனை இல்லாமல் அரசன் அக்கிரமம் செய்யக் கருதினல்; அதனைக் காத்துத் திருத்தலாம் ஆகில் நன்றே: அந்த அக்கிர மத்தைத் தடுத்து அவனை வழிக்கு வரச் செய் தல் நன்றுதான். ஆனல்; திருத்துதல் தீரா தாயின் பொருத்துறு பொருள் உண்டாமோ: திருத்த முடியாமல் போனல் அவனிடத்திலச் சொல்லுவதற்கு வேறு என்ன இருக்கிறது. ஒன்றும் இல்லை. ஆகையால்; பொரு தொழிற்கு உரியராய்: யுத்தம் செய்வதற்கு உரிய ஆளாய்; மற்று ஒருத்தரின் முன்னம் சாதல்: வேறு ஒருவர் உயிரைக் கொடுப்ப தற்கு முன்னதாகவே உயிரைக் கொடுக்கும் காரியம்; உண்டு அவர்க்கு உரிமை அம்மா: அரசனுக்கு உரிய கடமை ஆகும். சந்தேகம் இல்லை.]

உலக மக்களில் இரண்டு விதமான லக்ஷ்யம் கொண்டவர்கள் இருக்கிறார்கள்.

ஒரு வகை லக்ஷ்யம் உடையவர்களுக்குச் சத்தியம், தர்மநெறி இவைகளை விட்டு எக்காரணத்தாலும் விலக முடியாது. அவர்களுக்கு உயிரை விடுவது எளிது. தன் உயிரை மாத்திரம் அல்ல தன்னேடு ஒட்டியவர்கள் உயிரைக்கூடத் தத்தம் செய்துவிடுகிறதும் பெரிய காரியம் அல்ல.

மனுநீதி கண்ட சோழன் ஒரு கன்றுக்காகத் தன் ஒரே மகனையே தத்தம் செய்தான் என்பது புராணக் கதைதான். ஆனலும் கதை ஒரு லக்ஷ்யத்தைக் குறித்தே எழுந்தது.

மனுநீதி கண்ட சோழனை ஒத்த அரசர்கள் உலகத்தில் பல இடங்களிலும் இருந்திருக்கிறார்கள் என்பதைச் சரித்திரம் சொல்லும்.

அத்தகைய அரசர்களது மனப்பாங்கைக் கும்பகர்ணன் நன்கு அறிந்தவன்.

தம்பி விபீஷணனை அந்த அரசர் கூட்டத்தில் வைத்துப் பார்க்கிறான். அப்படிப் பார்க்க முடிகிறது கும்பகர்ணனுக்கு.


அத்தகைய லக்ஷ்ய புருஷர்களை விட்டு விட்டுத் தன்னைப் போன்ற சாமானிய மக்களது நிலைக்கு வந்தால் அது வேறு காரியம்.

ஏதோ ஒரு வகையான லக்ஷ்யத்தை வைத்து வாழ்க்கையை நடத்த வேண்டும். உண்மையோ நீதியோ, கூடுமான வரை ஒட்டி ஒழுக வேண்டிய காரியங்கள்தாம் அவை. ஆனலும் கொஞ்சம் அப்படியும் இப்படியுமாக பேரம் பண்ணிக் கொள்ள வேண்டியதுதான்.

ஆகவே, வீரர்களுக்கு அதாவது போர் வீரர்களாக வளர்க்கப்பட்டவர்களுக்கு, யுத்தம் செய்து உயிரை விட்டுச் சமாளிக்க வேண்டியதுதான் காரியம்.

இந்த இனத்தில் தன்னைச் சேர்த்துக் கொள்ளுகிறான் கும்பகர்ணன்.

தாளம் தப்பவில்லை!



சமர்த்துச் செண்பகம்

வசு

பொங்கலுக்கு முந்திய இரவு மணி எட்டு இருக்கும். அரிசி மண்டி முதலாளி அருணாசலம் செட்டியார் அன்றைய வியாபாரத்தை முடித்துக் கொண்டு கடையை மூடி வாசல் கதவைப் பூட்டிச் சாவிக் கொத்தை எடுத்துக் கொண்டு வீட்டை நோக்கிப் புறப்பட்டார். பொங்கல் காரணமாக அடுத்த நாள் விடுமுறை நாளானதால் வழக்கத்தை விட அன்று வியாபாரம் மும்முரமாக நடந்து கொண்டிருந்தது. பிற்பகல் வழக்கம்போல் வீட்டுக்குப் போய்ச் சாப்பிட்டுவிட்டு வரக்கூடச் செட்டியாருக்கு அவகாசம் கிடைக்கவில்லை. சாப்பாட்டைக் கடைக்கே வரவழைத்துச் சாப்பிட்டு விட்டு வேலையில் ஈடுபட்டார். வேலைக் கவலையில் சாப்பாடுகூடச் சரியாகச் செல்லவில்லை. போதாத குறைக்கு அன்று சாயங்காலம் அடுத்த ஊரிலிருந்த அவருடைய கடைசி மாப்பிள்ளை மாணிக்கம், அருணாசலம் செட்டியார் வீட்டிலிருந்து செட்டியாரின் மகளும் தன் மனைவியுமான செண்பகத்தை அழைத்துக் கொண்டு வரும்படி அவனுடைய வண்டியை வண்டிக்காரன் சகிதம் அனுப்பி வைத்திருந்தான். செட்டியார் வியாபாரத்தில் தீவிரமாக ஈடுபட்டிருக்கும் பொழுது அந்த வண்டிக்காரன் வந்து செட்டியாரை வணங்கி விட்டுத் தான் வந்த காரியத்தைத் தெரிவித்தான். செட்டியார் ஒரு கணம் மௌனமாக இருந்தார். அதே சமயத்தில் அவருடைய மாப்பிள்ளை கொஞ்ச நாளைக்கு முன் ஏதோ குடும்ப மனஸ்தாபங்கள் காரணமாக அவருக்குக் காரசாரமாக எழுதிய கடிதங்களும், அதைத் தொடர்ந்து அவருடைய அறுபதாவது வயதுக் கலியாணத்துக்குச் செண்பகத்தைக் கூப்பிடச் சென்ற இடத்தில் அலட்சியமாக நடந்து கொண்டதும், கடைசியாக அவளை வேண்டா வெறுப்பாக அனுப்பி வைத்த சம்பவமும் அவர் மனக்கண் முன் நிழலாடின.

செட்டியார் மௌனமாயிருப்பதைப் பார்த்த வண்டிக்காரன் பணிவாக "வீட்டிலே போய்க் கேட்டேன். பெரியம்மா 'சரி'ன்னு சொல்லிட்டாங்க. சின்னம்மா எதுக்கும் உங்களைக் கேட்டுக்கிட்டுத்தான் புறப்படணும்னு சொல்லிடிச்சு. அதுக்காகத்தான் உங்களை ஒரு வார்த்தை கேட்டு விட்டுப் போகலாம்னு வந்தேன்" என்றான்.

"சரி, ஒரே வார்த்தையிலே பதில் சொல்லட்டுமா? இப்போ செண்பகத்தை அனுப்ப முடியாது. 'முடியாது'ன்னு சொல்லிட்டாருன்னு போய்ச் சொல்லு" என்றார் செட்டியார், வண்டிக்காரனைப் பார்த்துத் தீர்மானமான குரலில். அதற்கு மேல் அங்கே நிற்பதில் பயனில்லை என்றறிந்த வண்டிக்காரன் அங்கிருந்து நகர்ந்தான்.

செட்டியார் வீட்டுக்குத் திரும்பும் வழி நெடுக அன்று சாயங்காலம் நடந்த சம்பவம் அவர் மனதை உறுத்திக் கொண்டே இருந்தது. இதற்கு மேலாக வீட்டுக்குப் போனதும் செண்பகத்துக்கு என்ன சமாதானம் சொல்லுவது என்ற யோசனை வேறு அவரை வாட்டத் தொடங்கியது.

செட்டியார் வீட்டை அடைந்ததும் அவர் மகள் செண்பகம் ஏமாற்றத்தால் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டிருப்பாள் என்று அவர் எதிர்பார்த்ததற்கு மாறாக எப்பொழுதும் போலவே அவள் குதூகலமாயிருந்தது செட்டியாருக்கு மன நிம்மதியைக் கொடுத்தது. அவர் வீட்டுக்குள் நுழைந்ததும் நுழையாததுமாகச் செண்பகம் எதிர் கொண்டழைத்து "என்ன அப்பா, மணி ஒன்பதாகப் போகிறது. பகலிலே கூட நீங்க வீட்டுக்கு வந்து சரியாகச் சாப்பிடாமல் கடைக்கே சாப்பாட்டைக் கொஞ்சமாக அனுப்பிருப் போதும்னு சொல்லிட்டிங்க. இப்படியெல்லாம் இருந்தால் உங்கள் உடம்பு எதற்கு ஆகும்? இலை போட்டாச்சு. சாப்பிட வாங்க" என்று பரிவுடன் சொன்னதைக் கேட்ட செட்டியாருக்கு அவர் மனதிலும் உடம்பிலுமிருந்த ஆயாசமெல்லாம் மறைந்து விட்டது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது!

சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக் கொண்டு செட்டியார், "மாணிக்கம் இன்னிக்குச் சாயங்காலம் உன்னைக் கூட்டிக் கொண்டு வரச் சொல்லி அவன் பண்ணையாளை


வண்டியுடன் அனுப்பியிருந்தான். பண்ணையாள் கடைக்கு வந்திருந்தான். நான் உன்னை அனுப்ப முடியாதென்று கண்டிப்பாச் சொல்லிட்டேன்" என்றார்.

"ஆமாம், அப்பா! நீங்க யோசனை இல்லாமலா செய்திருக்கப் போறீங்க? கொஞ்ச நாளைக்கு முந்தி அவர் உங்களுக்கு மாமா என்கிற மரியாதை கூட வைக்காமல் தாறுமாறாக எழுத்து எழுதினாரே, அதுதான் போகட்டும். உங்கள் அறுபதாம் வயசுக் கலியாணத்திற்கு நீங்க என்னை அங்கே வந்து அழைச்சபோது அவர் என்ன மாதிரியெல்லாம் பேசினார்? என்னமா ஆடினார்? இதையெல்லாம் நீங்க மறந்து போனாக்கூட நான் மறக்க முடியுமா என்ன?" என்று செட்டியாரின் மனதிலிருந்ததை எதிரொலிப்பதுபோல் செண்பகம் சொன்னதும் செட்டியாரின் உள்ளம் உவகை அடைந்தது.

"ஒரு வேளை நீ கோபப் படுவாயோன்னு நான் சந்தேகப்பட்டுக் கொண்டிருந்தேன்" என்றார் செட்டியார் அடுத்தாற்போல்.

"என் அப்பா, நீங்க செய்தது நியாயமாக இருக்கிறபோது நான் எதுக்காகக் கோபப் படணும்? இதைப்பற்றி அப்புறம் பேசிக் கொள்ளலாம். நாழிகையாகிறது. நீங்க சீக்கிரம் சாப்பிட வாங்க" என்றாள் செண்பகம் மறுபடியும்.

செட்டியார் பின் கட்டுக்குப் போய்க் கைகால்களைச் சுத்தம் செய்து கொண்டு வந்து நெற்றியில் திருநீறை அணிந்து கொண்டு, கொஞ்ச நேரம் ஈசுவரத்தியானத்தில் ஈடுபட்டுவிட்டு, சாப்பிட உட்கார்ந்தார். அவருடைய மனைவி அடுப்பங்கரையிலிருந்து கொடுத்து அனுப்பிய பதார்த்தங்களைச் செண்பகம் தகப்பனுக்குக் கொண்டு வந்து பரிமாறினாள். செட்டியார் சாப்பாட்டை



பெண் ஆந்தை :—எதற்காக என்னைப் பார்த்து இப்படி விழிக்கிறீர்கள்?


ஆண் ஆந்தை:-உன் முகத்தைப் பூர்ண சந்திரனோடு ஒப்பிட்டுப் பார்க்கிறேன்!

ஒரு விதமாக முடித்துக் கொண்டு கையில் வெற்றிலைப் பெட்டியுடன் வீட்டு முன் கட்டுக்கு வந்தார்.

அவர் அங்கே போனதும் வாசலிலிருந்து "ஐயா இருக்காரா?" என்ற குரல் கேட்டு வெளியே வந்தார். வாசலில் அவர் கடை வேலையாள் வேலாயுதம் கையில் ஒரு புறாவை வைத்துக் கொண்டு நின்றான். செட்டியார் அவன் கையிலிருந்த புறாவைப் பார்த்ததும் "இதேது புறா? புதிதாக வாங்கினாயா?" என்றார்.

"இல்லீங்கோ, நம்ம கடையிலே ஜோடிப் புறா இருந்தது பாருங்க; அதிலே இது ஒண்ணுங்க. நீங்க கடையை மூடுகிறபோது இது வெளியிலே தங்கிப் போச்சுங்க. உள்ளே போக வழியில்லாம இது இறகை அடிச்சு அடிச்சுக் கர்ணம் போட்டுக் கீழே விழுறதுங்க. வலை போட்ட ஜன்னல் வழியாக் கடைக்கு உள்ளே பார்த்தேனுங்க. இதனுடைய ஜோடி உள்ளே யிருந்து ஓரே முட்டா கூவிக்கிட்டிருக்குதுங்க. இதை ராப்பொழுதுக்கும் இப்படியே பிரிச்சு வெச்சா என்ன ஆகுமோன்னு தெரியாம பயந்து போய் உங்ககிட்ட ஓடிவந்தேனுங்க" என்றான்.

வேலாயுதத்தினிடமிருந்து புறாவை வாங்கிச் செட்டியார் பரிவுடன் தடவிக் கொடுத்தார். கடைச் சாவியை எடுத்துக் கொண்டு இருவருமாகப் புறாவுடன் கடையை நோக்கி நடந்தனர். ஆறு மாதத்திற்கு முன்பு ஒரு நாள் பருந்துக் கூட்டம் ஒன்றினால் துரத்தப்பட்ட அந்தப் புறாக்கள் இரண்டும் செட்டியார் அரிசி மண்டிக்குள் நுழைந்தன. அவைகள் அங்கே வந்து அடைக்கலம் புகுவதற்கும் அதே சமயத்தில் பத்து வருஷமாகச் செட்டியாருக்குக் கவலை கொடுத்துக் கொண்டிருந்த கேஸ் வெற்றியடைந்து விட்டதாகச் சென்னையிலிருந்த அவர் வக்கீல் கொடுத்த தந்தி வந்து சேருவதற்கும் சரியாயிருந்தது. அந்தப் புறாக்கள் வந்த நாள் முதலாகச் செட்டியாரின் வியாபாரத்திலும் விருத்தியேற்பட்டது. இதற்கெல்லாம் காரணம் அந்த அதிர்ஷ்டப் புறாக்கள்தான் என்ற எண்ணம் அவர் மனதில் வேரூன்றியது. நாள் தவறாமல் அந்தப் புறாக்களுக்குத் தானியம் வைப்பது, தண்ணீர் வார்ப்பது, சாயங்கால வேளைகளில் அவைகளைப் பறக்க விட்டு இருட்டினதும் அவைகளை அரிசி மண்டியிலிருந்த கூரையை ஒட்டிய மாடத்தில் சேர்ப்பது ஆகிய காரியங்களை முறைப்படி நடத்த ஏற்பாடு செய்திருந்தார். இப்படிப்



பிரியமாக வளர்க்கப்பட்ட புறாக்களுக்குத் தீங்கு ஏற்படச் செட்டியார் சம்மதிப்பாரா?

கையில் புறாவுடன் சென்று கடையின் கதவைத் திறந்தார். அவ்வளவுதான்; அவர் கையிலிருந்த புறா சிறகை அடித்துக் கொண்டு அதன் ஜோடியில் மற்றொன்று இருந்த மாடத்தை அடைந்தது. செட்டியார் மன நிம்மதியுடன் வீட்டிற்குத் திரும்பினார்.

வேலாயுதம் மெள்ள பேச்சை ஆரம்பித்தான். "பொழுது விடிஞ்சா பொங்கலுங்க. நாளைக்கு நம்ம கடை கிடையாதுங்க. இந்த வாயில்லா ஜீவன்களை நல்ல நாளும் அதுவுமா பிரிச்சு வெச்சா நல்லதில்லேன்னு சொல்லுவாங்க. அதை நெனச்சுத்தான் நான் உங்க வீட்டைத் தேடி ஓடி வந்தேனுங்க!" என்றான்.

செட்டியாரின் நினைவு வீட்டிலிருக்கும் பெண் செண்பகத்தை நோக்கி ஓடியது. தன்னுடைய சுய கௌரவத்தின் காரணமாக அவளை அவள் புருஷனிடமிருந்து பிரித்து வைத்திருக்கிறோம் என்ற எண்ணம் அவர் மனதில் பளிச்சிட்டு மறைந்தது. அதற்குப் பரிகாரம் காண வேண்டும் என்ற தீர்மானத்துக்கு வந்தவராய் வீட்டிற்குள் நுழைந்ததும், "செண்பகம், யோசனை பண்ணிப் பார்த்தேன். நாளைப் பொழுது விடிந்தால் பொங்கல். நீ நாளைக்கு உன் புருஷன் வீட்டில் இருப்பதுதான் நியாயம். உனக்கு வேண்டிய சாமான்களை எடுத்து வைத்துக் கொள். இப்பொழுதே உன்னை அங்கே கொண்டுபோய் விட்டு விடுகிறேன்" என்று சொன்னார்.

"என் அப்பா, அவர் உங்ககிட்டே மரியாதையில்லாமல் நடந்து கொண்டாரே!" என்றாள் செண்பகம்.

"விட்டுத்தள்ளு, செண்பகம்! வயசுப் பிள்ளை அவன். அவனை எனக்குச் சரியா வெச்சு சண்டை போடறது எனக்கு அழகா என்ன?" என்று சமாதானம் சொன்னார் செட்டியார்.

"நீங்க சொன்னால் சரி, அப்பா!" என்றாள் செண்பகம். தனக்கு வேண்டிய சாமான்களை எடுத்து வைத்துக்கொண்டு தாயாரை

வணங்கிவிட்டு வாசலில் தயாரா யிருந்த வண்டியில் தகப்பனாருடன் ஏறிக் கொண்டாள் செண்பகம். வேலாயுதம் வண்டியை ஓட்ட ஆரம்பித்தான்.

ஒரு மணி நேரம் கழித்து வண்டி அடுத்த ஊரிலுள்ள அருணாசலம் செட்டியாரின் மாப்பிள்ளை மாணிக்கம் வீட்டை அடைந்தது. வாசலில் நின்று கொண்டிருந்த மாணிக்கம் வண்டியிலிருந்து இறங்கிய அருணாசலம் செட்டியாரையும் செண்பகத்தையும் அன்புடன் வரவேற்று உள்ளே அழைத்துக்கொண்டு போனான்.

சுமுகமாக இருந்த மாப்பிள்ளையைப் பார்த்ததும் அருணாசலம் செட்டியார் அவனுடைய முன் நடவடிக்கைகளை மன்னித்து அவனிடம் கொஞ்ச நேரம் அளவளாவி விட்டு அவனிடமும் செண்பகத்தினிடமும் விடை பெற்றுக் கொண்டு திரும்பிப் போவதற்காக வாசலிலிருந்த வண்டியில் வந்து ஏறிக்கொண்டார். வேலையாள் வேலாயுதம் மாப்பிள்ளை மாணிக்கத்தினிடம் பேசிக் கொண்டிருந்ததால் அவன் வரும்வரை, வண்டியை விட்டு இறங்கிக் காற்றோட்டமாக இருந்த வாசல் திண்ணையில் வந்து உட்கார்ந்தார். வேலையாள் வேலாயுதம், எஜமானர் அருணாசலம் செட்டியார் வண்டியில் இருக்கிறார் என்ற நினைப்பில் சற்று இரைந்தே பேசிக் கொண்டிருந்தான்.

மாணிக்கம், "வேலாயுதம், நீ மாத்திரம் இன்னிக்கு அந்த ஜோடிப் புறாக்களில் ஒன்றைப் பிரித்து வைத்து என் மாமாவுக்குத் தெரியும்படியாகச் சேர்த்து வைக்காமலிருந்தால், என் மாமா மனம் மாறிச் சின்னம்மாவை இங்கே அனுப்பியிருக்க மாட்டார்" என்று சொன்னது செட்டியாரின் காதில் 'கணீர்' என்று விழுந்தது.

'அடேடே, இதெல்லாம் வேலாயுதத்தின் வேலையா! ஆள் பலே ஆசாமி போலிருக்கு!' என்று செட்டியார் மனதிற்குள் நினைத்துக் கொண்டார்.

இதைத் தொடர்ந்து வேலாயுதம் மாணிக்கத்துக்குப் பதிலளிக்கும் முறையில், "இந்த யோசனை எனக்குப் புலப்படலிங்களே! இந்த மாதிரி செய்யணும்னு செண்பகத் தம்மாதான் எனக்குச் சொல்லிக் கொடுத்தாங்க!" என்று சொன்னதைக் கேட்டதும், "என் செண்பகம் சாதாரண செண்பகமா? சமர்த்துச் செண்பகம் என்றால் அவளுக்குத் தான் தகும்" என்று செட்டியார் தமக்குள் முணுமுணுத்துக் கொண்டார்.



15. மறுபடியும் தாமோதரன்!

“நரிகளைக் கொன்றால் பரிசு” என்று நல்ல நரிக்காட்டு ஜமீன்தார் ஏற்பாடு செய்தவுடன் ஊரெல்லாம் ஒரே அமர்க்களமாகப் போய் விட்டது. கையில் துப்பாக்கி வைத்திருந்தவர்கள் அத்தனை பேரும் நரி வேட்டையில் தீவிரமாக இறங்கி விட்டனர். இந்தச் செய்தி சுற்று வட்டாரங்களிலுள்ள நகரங்களில் எல்லாம் பரவி விட்டது.

இதனால் ஒரு பலன் ஏற்பட்டது. ஜனங்களிடைத் தீவிர பரபரப்பையும் சர்ச்சையையும் கிளப்பி விட்டது. சிலர் ‘இவ்விதம் காட்டு மிருகங்களை அழிப்பது அரட்டுத்தனம்; இதை உடனே நிறுத்த வேண்டும்’ என்று ஜில்லா மாஜிஸ்திரேட்டுக்குக் கடிதம் எழுதினர். இன்னொரு விதமான அபிப்பிராயம் கொண்டவர்களும் இருந்தனர். அவர்கள் இவ்விதம் தனிப்பட்ட ஒரு சில இடங்களில் நரிகள் உண்மையிலேயே உபத்திரவம் அளிப்பனவாக இருந்தால் சுடுவதில் தவறில்லை என்று வாதித்தனர். ஆனால் இவ்விதம் சுட்டுக் கொல்லும்போது நிரபராதிகளான சாது நரிகளும் இக்கொலைக்கு உள்ளாகலாம். ஆகவே, கண்ணில் பட்ட நரிகளையெல்லாம் கொல்வது என்பதற்கு மாறாக, தொல்லை கொடுக்கும் நரிகளைத்தான் கொல்ல வேண்டும் என்று விதியைத் திருத்தி நரி பலியைக் குறைக்க வேண்டும் என்றனர்.

இந்த இரண்டு கோஷ்டியைத் தவிர மூன்றாவது கோஷ்டியும் இருந்தது. அந்தக் கோஷ்டியினர் மேற்கண்ட இரு கோஷ்டியினர்போல் இரக்க சிந்தையுள்ளவர்களல்ல. அத்தகைய அனுதாபக் கருத்துக்களுக்குச் சற்றும் மதிப்புக் கொடுக்காமல், “நரிகளுக்கு அனுதாபப் படவாவது! அவை பிறவியிலேயே அபசகுனங்கள்! அவைகளுக்குப் பரிந்து பேசிப் பயனில்லை” என்று விட்டார்கள்.

இந்த மூன்றாவது கோஷ்டியினரை எதிர்க்கும் நோக்குடன்தான், திருவாளர் தாமோதரன் ஒரு துள்ளுத் துள்ளி எழுந்தார்.

இத்தனை நாள் அவர் சும்மா இருந்தார். அதாவது அவருடைய விவசாய சம்பந்தமான திட்டங்களைப் பத்திரிகைகள் பிரசுரித்து வேண்டிய அளவு பிராபல்யப் படுத்திய பிறகு திருவாளர் தாமோதரன் ‘இனி நம் செயலாவது ஒன்றில்லை’ என்று மௌனமாக மறைவிலிருந்தார். ஆனால் இப்பொழுது அவரால் அப்படி இருக்க முடியவில்லை. நல்ல நரிக்காட்டு நரிகளைக் கூண்டோடு கைலாசம் அனுப்பச் செய்துள்ள அக்கிரமமான திட்டத்தைப் பற்றிக் கேள்விப் பட்டவுடன் அவருடைய இரத்தம் கொதித்தது. இனியும் சும்மா இருப்பது தவறு என்று கருதி தயவு தாட்சண்யமின்றித் தம் அபிப்பிராயங்களை வெளியிடலானார். ஆம், நல்ல நரிக்காட்டு நரிகளின் குணவிசேஷங்களைப் பற்றிய துண்டுப் பிரசுரங்கள் தம் சொந்தச் செலவிலேயே அச்சிட்டு இனாமாக ஏராளமாக வழங்கினார். அதில் நல்ல நரிக்காட்டு நரிகள் பிச்சைமுத்துவின் வயல்களுக்குத் தண்ணீர் இறைத்த சம்பவத்தைப் பொது ஜனங்களுக்கு மறுபடியும் நினைவுறுத்தினார். அந்தச் சம்பவம் காரணமாக ‘நரிகளை விவசாயத்துக்கு உபயோகித்துக் கொள்ளலாம்’ என்று தாம் எழுதிய பல கட்டுரைகளைப் பற்றியும் அதில் கூறியிருந்தார். அது மட்டுமா? தம்முடைய திட்டங்களையும் யோசனைகளையும் குறுகிய நோக்

கும் பஞ்சத்தை விரட்ட பத்து வருஷத் திட்டம்' ஒன்று தயாரித்து அதன் நகல்களை எல்லாப் பத்திரிகைகளுக்கும் அனுப்பி விட்டுத்தான் சென்றார். ஆகா! திரு தாமோதரன் அவர்களின் ஆர்வமே ஆர்வம்! அது வேறு யாருக்கு வரும்!

* * *

பிச்சை முத்து ரொம்பவும் கஷ்டப் பட்டுக் கொண்டிருந்தான். யாராகிலும் தன் நிலங்களை வாங்குவார்களா என்று பார்த்துக் கொண்டிருந்தான். ஒரு காலத்தில் பணம் படைத்தவர்கள் அவன் நிலங்களை எவ்வளவு பணம் கொடுத்தும் வாங்கத் தயாராக இருந்தார்கள். நரிகள் மனிதர்களைப் போல் விவசாயத்தில் ஈடுபட்டுத் தண்ணீர் இறைக்கின்றன என்ற செய்தி நாடெங்கும் பரவியபோது அவன் விற்பதாக விளம்பரம் செய்திருந்தானாகில் நல்ல விலை கிடைத்திருக்கும். நல்ல அதிர்ஷ்டமே அடித்திருக்கும். ஆனால் அந்த அரிய சந்தர்ப்பத்தை இழந்து விட்டான். இப்பொழுது நாட்டாண்மைக்காரனின் வயல் மீது மோகங் கொண்டிருந்த திரு தாமோதரன் ஒருவர்தான் வாங்க முன் வந்தார். ஆனால் அவர் கொடுக்கத் தயாராய் இருந்த விலையோ, பிச்சைமுத்துவுக்கு ரொம்பவும் குறைவாகத் தோன்றியது. ஆனால் அவன் மனைவியோ இந்தச் சமயமாகிலும் புத்திசாலியாக இருந்து, நிலத்தை விற்றுத் தொலைத்துவிடும்படி ரொம்பவும் சொன்னதின் பேரில் பிச்சை முத்து விற்கச் சம்மதித்தான்.

திருவாளர் தாமோதரன் அவர்கள் தமது நாட் குறிப்பு(டைரி)ப் புஸ்தகத்தில் இதைப்பற்றி எழுதும்போது 'நரிகளின் கருணைகடாக்ஷத்தினாலும், மாதுவின் அபாரமான செயல் திறமையினாலும் பண்பட்ட அற்புதமான நிலம்' என்று இந்த நிலத்தைப் பற்றி எழுதியிருக்கிறார். அப்படிப்பட்ட நிலத்தை வாங்கியதும் தமது திட்டங்களைக் காரியாம்சத்தில் நிறைவேற்றத் தீவிரமாக முனைந்தார்.

* * *

ஆம், ஒரு நிமிஷம் சும்மா இருக்கவில்லை. நரி உலகத்துடன் தொடர்பு கொண்டிருக்கும் நூற்றுக் கணக்கான நரிக் குறவர்களை, நரிகளைப் பிடிக்க நியமித்தார். ஒவ்வொரு நரிக்குறவனையும் பார்த்து அவனிடம் நீண்ட நேரம்



கேள்விகள், குறுக்குக் கேள்விகள் எல்லாம் கேட்டுப் பிறகுதான் வேலைக்கு வைத்துக் கொண்டார்.

மாதுவைப் பார்த்தவர்கள் மாதுவைப் பற்றிக் கேள்விப்பட்டவர்கள், மாதுவுடன் நெருங்கிப் பழகிய நரிகளை அறிந்தவர்கள் யாரெல்லாம் உண்டோ அவர்களை யெல்லாம் வேலைக்கு வைத்துக் கொள்வது என்ற ஒரே குறிக்கோளுடன் நரிக் குறவர்களை வேலைக்கு எடுத்துக் கொண்டார்.

"ஐயா, எனக்கு ஒரு நரியைத் தெரியும். அதுதான் இப்பக்கங்களில் உள்ள நரிகளுக்கெல்லாம் 'தலைவர்' என்று பெயர்" என்று ஆரம்பித்தான் ஒரு நரிக் குறவன். அவன் தான் போந்தலி என்று சொல்லவும் வேண்டுமா என்ன? அவன் மேலும் தொடர்ந்து சொன்னான்: "அந்த நரியை விடப் பருத்த நரியை நான் பார்த்ததில்லை. அதை விடக் கம்பீரமான நடையுள்ள நரியையும் பார்த்ததில்லை. இரண்டு முறை அதை ஏறத் தாழப் பிடித்து விட்டேன் என்றுதான் சொல்ல வேண்டும். ஆனால் முதல் தடவை அந்த அயோக்கியப் பயல் மாது அதைக் காப்பாற்றி விட்டான். இரண்டாவது தடவை ஜமீன்தார் துப்பாக்கியால் சுட்ட போது குறி தவறிவிட்டது. இவ்விதம் இரண்டு முறையும் உலகத்திலேயே கிடைத்தற்கரிய நரித் தோலை இழந்து விட்டேன்!"

நரிக்குறவன் கூறியவற்றைக் கடைசி வரை கேட்டுவிட்டுத் திருவாளர் தாமோதரன் கூறலானார்:

"இனி உன் பழக்க வழக்கங்களையும், வாழ்க்கைக் குறிக்கோளையும் மாற்றிக் கொள்ள வேண்டும். நரி உலகில் நீ தோல்வி அடைந்ததற்குக் காரணம் நரிகளிடம் நீ வெறுப்புக் கொண்டதுதான். மாது வெற்றி யடைந்ததற்குக் காரணம் நரிகளை அவன் நேசித்தான் என்பதே. ஆம்; அவன் வெற்றியின் ரகசியமே அன்புதான். நரிகள் நம் தோழர்கள், இல்லை, நம் ரக்ஷகர்கள். ஆகவே, அவற்றுடன் சிநேகம் செய்து கொள். அவற்றை அவற்றின் தோலுக்காக மதிக்காதே!"

இவ்வாறு கூறிய திருவாளர் தாமோதரன் தாம் அரிய கருத்துக்களை வெளியிட்டுவிட்டதாக மனசுக்குள் பெரிதும் மகிழ்ந்தார். அத்துடன் தம்முடைய கருத்துக்கள் நரிக்குறவனின் மனோபாவத்தை மாற்றிச் சீர்திருத்துவதாக வேறு நினைத்தார். ஏன், அன்றிரவு தம் நாட்குறிப்பில் 'நரிக்குறவனின் சீர்திருத்தம் ஒன்றே போதும், என் திட்டம் வெற்றிடையும் என்பதற்கு ஒரு நல்ல சுப சூசகம்' — என்று எழுதி வைத்தார். ஆனால் நரிக் குறவனும் தாமோதரனும் பேசிக்கொண்டிருந்ததைப் பார்த்த சில சிறுவர்கள், நரிக்குறவன் கண்ணைச் சிமிட்டி அவரைக் கேலி செய்ததையும் பார்த்தார்கள்.

எனினும் திருவாளர் தாமோதரன், மனோசஞ்சாரத்தை விட்டு "மாதுவுடன் பார்த்த சில நரிகளைப் பிடித்து வரவேண்டும். அப்போதுதான் நம் வேலை சுலபமாக முடியும்" என்று காரியப் பேச்சுப் பேசத் தொடங்கினார்.

இதைவிடச் சுலபமான காரியம் தனக்கு வேறு கிடையாது என்று உறுதி கூறினான் நரிக்குறவன்.

மாதுவின் தோழர்களைப் போந்தலிக்குத் தெரியும் என்ற காரணத்தினால்தான் அவன் தேர்ந்தெடுக்கப்பட்டான். மறுநாளே மாதுவின் தோழர்களில் ஒரு நரியைப் பிடித்து வந்து தனக்கு மாதுவின் தோழர்களைத் தெரியும் என்பதை நிரூபித்தான். அந்த நரி மெலிந்து பசியால் வாடியிருந்தது. மாதுவின் பிரிவாற்றாமை தாங்காமல்தான் அது அவ்வாறு மெலிந்து விட்டது என்று அழுத்தம் திருத்தமாகச் சொன்னான். மேலும் இந்த நரியை மாதுவுக்குப் பிடித்த வேலையைச் செய்ய வைத்தால், அது உண்ணா விரதத்தை நிறுத்தி ஆகாரம் உட்கொண்டு மறுபடியும் பழைய நிலைக்குப் பருத்துக் கொழுத்துவிடும் என்று சொன்னான்.

திருவாளர் தாமோதரன் போந்தலியின் செயல் திறமையையும், சுறுசுறுப்பையும் கண்டு பெரிதும் திருப்தியடைந்தார். அவனிடமே எல்லாக் காரியங்களையும் ஒப்படைத்தார். போந்தலியும் அவனுடைய தோழர்களாகிய மற்றக் குறவர்களும் முதல் பன்னிரண்டு நரிகளுக்குப் பயிற்சி யளித்தனர். இந்தச் செய்தி ஒரு சில நாட்களில் ஊர் முழுவதும் பரவி விட்டது. எல்லோரும் இதைப் பற்றியே பேசத் தொடங்கி விட்டனர்.

எல்லோரும் இந்தப் புதுத் திட்டம் நிச்சயம் வெற்றிபெறும் என்று நம்பினார்கள். மாட்டுச் சந்தைகளில் பல வியாபாரிகளின் முகத்தில் கவலைக்குறி படரத் தொடங்கி விட்டது. மாடுகளுக்குப் பதில் நரிகளை உபயோகிக்கும் காலம் வெகு தூரத்தில் இல்லை என்று எண்ணினார்கள். அவர்களை வெகு சீக்கிரத்தில் மாட்டுச் சந்தைகளுக்குப் பதில் நரிச் சந்தை நடத்தப் போவதைக் கற்பனை செய்து பார்த்துக் கொண்டார்கள்.

கேள்விகள், குறுக்குக் கேள்விகள் எல்லாம் கேட்டுப் பிறகுதான் வேலைக்கு வைத்துக் கொண்டார்.

மாதுவைப் பார்த்தவர்கள் மாதுவைப் பற்றிக் கேள்விப்பட்டவர்கள், மாதுவுடன் நெருங்கிப் பழகிய நரிகளை அறிந்தவர்கள் யாரெல்லாம் உண்டோ அவர்களையெல்லாம் வேலைக்கு வைத்துக் கொள்வது என்ற ஒரே குறிக்கோளுடன் நரிக் குறவர்களை வேலைக்கு எடுத்துக் கொண்டார்.

"ஐயா, எனக்கு ஒரு நரியைத் தெரியும். அதுதான் இப்பக்கங்களில் உள்ள நரிகளுக்கெல்லாம் 'தலைவர்' என்று பெயர்" என்று ஆரம்பித்தான் ஒரு நரிக் குறவன். அவன் தான் போந்தலி என்று சொல்லவும் வேண்டுமா என்ன? அவன் மேலும் தொடர்ந்து சொன்னான்: "அந்த நரியை விடப் பருத்த நரியை நான் பார்த்ததில்லை. அதை விடக் கம்பீரமான நடையுள்ள நரியையும் பார்த்த இல்லை. இரண்டு முறை அதை ஏறத் தாழப் பிடித்து விட்டேன் என்றுதான் சொல்ல வேண்டும். ஆனால் முதல் தடவை அந்த அயோக்கியப் பயல் மாது அதைக் காப்பாற்றி விட்டான். இரண்டாவது தடவை ஜமீன்தார் துப்பாக்கியால் சுட்ட போது குறி தவறிவிட்டது. இவ்விதம் இரண்டு முறையும் உலகத்திலேயே கிடைத்தற்கரிய நரித் தோலை இழந்து விட்டேன்!"

நரிக்குறவன் கூறியவற்றைக் கடைசி வரை கேட்டுவிட்டுத் திருவாளர் தாமோதரன் கூறலானார்:

"இனி உன் பழக்க வழக்கங்களையும், வாழ்க்கைக் குறிக்கோளையும் மாற்றிக் கொள்ள வேண்டும். நரி உலகில் நீ தோல்வி அடைந்ததற்குக் காரணம் நரிகளிடம் நீ வெறுப்புக் கொண்டதுதான். மாது வெற்றி யடைந்ததற்குக் காரணம் நரிகளை அவன் நேசித்தான் என்பதே. ஆம்; அவன் வெற்றியின் ரகசியமே அன்புதான். நரிகள் நம் தோழர்கள், இல்லை, நம் ரக்ஷகர்கள். ஆகவே, அவற்றுடன் சினேகம் செய்து கொள். அவற்றை அவற்றின் தோலுக்காக மதிக்காதே!"

இவ்வாறு கூறிய திருவாளர் தாமோதரன் தாம் அரிய கருத்துக்களை வெளியிட்டுவிட்டதாக மனசுக்குள் பெரிதும் மகிழ்ந்தார். அத்துடன் தம்முடைய கருத்துக்கள் நரிக்குறவனின் மனோபாவத்தை மாற்றிச் சீர்திருத்துவதாக வேறு நினைத்தார். ஏன், அன்றிரவு தம் நாட்குறிப்பில் 'நரிக்குறவனின் சீர்திருத்தம் ஒன்றே போதும், என் திட்டம் வெற்றியடையும் என்பதற்கு ஒரு நல்ல சுபசூசகம்'—என்று எழுதி வைத்தார். ஆனால் நரிக் குறவனும் தாமோதரனும் பேசிக்கொண்டிருந்ததைப் பார்த்த சில சிறுவர்கள், நரிக்குறவன் கண்ணைச் சிமிட்டி அவரைக் கேலி செய்ததையும் பார்த்தார்கள்.

எனினும் திருவாளர் தாமோதரன், மனோசஞ்சாரத்தை விட்டு "மாதுவுடன் பார்த்த சில நரிகளைப் பிடித்து வரவேண்டும். அப்போதுதான் நம் வேலை சுலபமாக முடியும்" என்று காரியப் பேச்சுப் பேசத் தொடங்கினார்.

இதைவிடச் சுலபமான காரியம் தனக்கு வேறு கிடையாது என்று உறுதி கூறினான் நரிக்குறவன்.

மாதுவின் தோழர்களைப் போந்தலிக்குத் தெரியும் என்ற காரணத்தினால்தான் அவன் தேர்ந்தெடுக்கப்பட்டான். மறுநாளே மாதுவின் தோழர்களில் ஒரு நரியைப் பிடித்து வந்து தனக்கு மாதுவின் தோழர்களைத் தெரியும் என்பதை நிரூபித்தான். அந்த நரி மெலிந்து பசியால் வாடியிருந்தது. மாதுவின் பிரிவாற்றாமை தாங்காமல்தான் அது அவ்வாறு மெலிந்து விட்டது என்று அழுத்தம் திருத்தமாகச் சொன்னான். மேலும் இந்த நரியை மாதுவுக்குப் பிடித்த வேலையைச் செய்ய வைத்தால், அது உண்ணா விரதத்தை நிறுத்தி ஆகாரம் உட்கொண்டு மறுபடியும் பழைய நிலைக்குப் பருத்துக் கொழுத்துவிடும் என்று சொன்னான்.

திருவாளர் தாமோதரன் போந்தலியின் செயல் திறமையையும், சுறுசுறுப்பையும் கண்டு பெரிதும் திருப்தியடைந்தார். அவனிடமே எல்லாக் காரியங்களையும் ஒப்படைத்தார். போந்தலியும் அவனுடைய தோழர்களாகிய மற்றக் குறவர்களும் முதல் பன்னிரண்டு நரிகளுக்குப் பயிற்சியளித்தனர். இந்தச் செய்தி ஒரு சில நாட்களில் ஊர் முழுவதும் பரவி விட்டது. எல்லோரும் இதைப் பற்றியே பேசத் தொடங்கி விட்டனர்.

எல்லோரும் இந்தப் புதுத் திட்டம் நிச்சயம் வெற்றிபெறும் என்று நம்பினார்கள். மாட்டுச் சந்தைகளில் பல வியாபாரிகளின் முகத்தில் கவலைக்குறி படரத் தொடங்கி விட்டது. மாடுகளுக்குப் பதில் நரிகளை உபயோகிக்கும் காலம் வெகு தூரத்தில் இல்லை என்று எண்ணினார்கள். அவர்களே வெகு சீக்கிரத்தில் மாட்டுச் சந்தைகளுக்குப் பதில் நரிச் சந்தை நடத்தப் போவதைக் கற்பனை செய்து பார்த்துக் கொண்டார்கள்.

கடைசியில் ஒரு நாள் நரிகள் வயல்களில் உபயோகிப்பதற்கு வேண்டிய பயிற்சி பெற்றுத் தயாராய் இருக்கின்றன என்று அறிவித்தார்கள் நரிக் குறவர்கள்.

அவ்வளவுதான்; நரிக் குறவர்களை வேலையை விட்டு நீக்கலானார். ஆமாம், தனக்கும் விவசாயத்துக்கு மிடையே புது மாதிரி தரகர்கள் ஏற்படுத்திக் கொள்ள அவர் விரும்பவில்லை. ஆகவே, நரிக்குறவர்களின், நரியைப் பற்றிய பரம்பரை ஞானத்தைப் பயன்படுத்திப் புது முறை விவசாயத்துக்கு நரிகளுக்குப் பயிற்சி அளிக்க உபயோகப் படுத்திக் கொண்ட பின், இன்னும் வைத்திருப்பது தவறு என்று அவர்களை யெல்லாம் நீக்கிவிட்டார். இனி தாமே நரிகளை ஏரில் பூட்டி வேலை செய்வது என்று தீர்மானித்து விட்டார்.

திருவாளர் தாமோதரன் அவர்களே நரிகளைப் பூட்டி உழுத சரித்திரப் பிரசித்தமான அனுபவத்தைப் பற்றி நமக்கு நேர்முகமான தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. திரு தாமோதரன் அவர்களின் வாழ்க்கையின் ஒவ்வொரு நாளையும் பற்றி அவருடைய நாட் குறிப்பு ஒரு சிறு சம்பவம் விடாமல் பரிபூரணமாகக் கூறும். அப்படிப்பட்ட 'டைரி' இந்த முக்கியமான நாளைப் பற்றி ஒன்றும் கூறாமல் மௌனம் சாதிக்கிறது! ஆனால் அவர் அன்று மாலையே பக்கத்திலுள்ள ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார் என்றும், அவர் உடம்பில் பல இடங்களில் ஏற்பட்டிருந்த காயங்களுக்குச் சுமார் ஒரு வாரம் வரை சிகிச்சை நடந்தது என்றும் தகவல் கிடைத்துள்ளது. எது எப்படியாயினும் மதிப்புக்குரிய திருவாளர் தாமோதரன், அன்றைய தினத்திற்குப் பிறகு, மறுபடியும் தமது வேலையைத் தொடர நல்ல நரிக்காட்டுக்கு வரவில்லை என்பது மட்டும் நிச்சயமாகத் தெரிகிறது.

ஆயினும் அவர் நம்பிக்கை இழந்து விடவில்லை என்றைக்காகிலும் ஒரு நாள் விவசாயத்தில் 'நரி யுகம்' ஒன்று வரத்தான் போகிறது என்று சொல்லிக் கொண்டிருந்தார். (தொடரும்)

இதுவும் ஒரு வேலை!

அன்று ஞாயிற்றுக் கிழமை, மத்தியானம் பன்னிரண்டு மணியிருக்கும். அப்போதுதான் சாப்பிட்டு விட்டு முன் அறைக்கு வந்தேன். மூலையிலிருந்த பாயை விரித்தேன்; தலையணையைத் தூக்கிப் போட்டேன். பாயில் உட்கார்ந்து 'கீழே சாயலாமா?' என்று யோசித்துக் கொண்டிருந்தேன். என் மூன்று வயதுப் பெண் "இந்தாப்பா!" என்று கூறிக் கொண்டே ஒரு பழைய பத்திரிகை ஒன்றைக் கொண்டு வந்து கொடுத்தாள்.

எனக்கு ஆச்சரியமாகப் போய்விட்டது. பழைய பத்திரிகைகளைத் தூக்கம் வரத்தான் உபயோகப்படுத்துகிறேன் என்பது இந்த மூன்று வயதுக் குழந்தைக்கு எப்படித் தெரிந்தது? எப்பொழுது கவனித்தாள்? குழந்தைகளின் கவனித்து அறியும் சக்தியே பிரமாதம்தான்!


நான் படுக்கையில் சாய்ந்து பத்திரிகையைப் புரட்ட ஆரம்பித்தேன். ஏதோ ஒரு கட்டுரை, படிக்கக் கூடிய கட்டுரை போலத் தோன்றியது. படித்துக் கொண்டே வந்தேன். சிந்தனையைத் தூண்டக் கூடிய வாக்கியம் ஒன்று வந்தது. அதைப் படித்தேனோ இல்லையோ, என் கண் மேலே படிக்க மறுத்தது. ஆமாம், கண் தானே மூடிக் கொண்டது; சிந்தனை வேலை செய்தது.

யாரோ ஒரு ஆங்கில ஆசிரியர் ஒரு பாத்திரத்தைப் பற்றிக் கூறும் போது "சிந்திக்கச் சிந்திக்க, தூக்கம்தான் அவனுக்கு வரும்" என்று எழுதியிருக்கிறார். அது எவ்வளவு அரிய உண்மை என்பது அன்று என் சொந்த அனுபவத்தில் உணர்ந்தேன்!

• • •

இவ்விதம் சிந்தனை உலகிலிருந்து தூக்க உலகத்துக்குச் சென்று, பிறகு கனவு உலகத்துக்குத் தாவி விட்டேன்.

கனவு உலகத்துக்குப் போனதும் நான் பத்து வயது சிறுவனாகி விட்டேன். பத்து வயது சிறுவனாக இருந்த போது தான் முதல் முதல் சென்னைக்கு வந்திருந்தேன். அப்போது சென்னையில் ஓடும் டிராம் அதிசயப் பொருளாகக் காட்சியளித்தது. அத்துடன் டிராம் டிரைவர் மீது பொறாமையாக இருந்தது. 'மயிலாப்பூரிலிருந்து ஹைகோர்ட் வரைக்கும்



எத்தனை தடவை குஷியாகப் போய்விட்டு வருகிறார்! அவர் பாக்கியமே பாக்கியம்! காலில் மணியடித்துக் கொண்டு, இரண்டு கையில் இரண்டு பிடியை வைத்துச் சுற்றுகிறார். அந்த மாதிரி நானும் சுற்ற மாட்டேனா?" என்று சொல்லிக் கொண்டு காலில் மணியடிப்பது போலவும் இரண்டு கைகளை அதே சமயத்தில் ஆட்டியும் டிராம் ஓட்டுவது போல் அபிநயம் பண்ணியும் பார்த்துக்கொண்டேன். டிராம் ஓட்டக் கூடத் தெரிந்துவிடும், கொஞ்சம் பழக்கம் ஏற்பட்டால் என்ற நம்பிக்கை ஏற்பட்டது. ஆனால் டிராம் வண்டி எனக்கு எப்படிக் கிடைக்கும்? யாரைப் போய்க் கேட்பது? ஒன்றும் தெரியவில்லையே!

இப்படியெல்லாம்தான் சிந்தனை சென்றதே தவிர, 'டிராம் ஓட்டுகிறவர் தமாஷுக்காகச் செய்யவில்லை அது ஒரு வேலை; அதற்குச் சம்பளம் உண்டு' என்றெல்லாம் வெகு நாட்களுக்குப் பிறகுதான் தெரிந்தது. 'டிராம் டிரைவரைப் பார்த்துப் பொறாமைப் பட்டோமே; என்ன அசட்டுத்தனம்!' என்று என்னைப் பார்த்தே நான் சிரித்துக் கொண்டேன்.

பிறகு இன்னும் கொஞ்சம் சிறுவனாகி விட்டேன். ஏழு வயது என்று வைத்துக் கொள்ளுங்களேன். அந்த வயதில் தெருவில் தலையில் மிட்டாய் வைத்துக் கொண்டு செல்பவனைப் பார்த்தால் பொறாமையாக இருக்கும். ஆகா! அவன் தலையில் எவ்வளவு மிட்டாய்கள் எடுத்துக் கொண்டு போகிறான். அவன் நினைத்த போது நினைத்த இடத்தில் இஷ்டமான பண்டத்தைத் தின்னலாம் அல்லவா? அவன் பாக்கியமே, பாக்கியம்!' என்றெல்லாம் நினைப்பேன்.

அவனுக்கு மிட்டாய் தின்பதில் அவ்வளவு சந்தோஷமில்லை. அந்த ஒரு மிட்டாய் காலணாவாக மாறுவதில் எவ்வளவோ திருப்தி என்பது எனக்குப் பிறகு தான் தெரிந்தது.

மிட்டாய் தலையில் வைத்துக் கொண்டு சுற்றுவது அவனுக்கு ஒரு விளையாட்டல்ல. அது அவன் வேலை, அது ஒரு தொழில் என்பதும் பிறகுதான் தெரிந்தது.

அப்படியே தான் வாயில் ஊது வைத்துக் கொண்டு ஊதிக்கொண்டே செல்பவன். விளையாடவில்லை; ஊது வியாபாரம் செய்கிறான்; ஊதுவது அவன் தொழில் என்பதும் எனக்கு நன்றாக வயது வந்த பிறகுதான் புலனாயிற்று.

பலூன்கள் ஒரு கழியில் கட்டித் தெருக்களில் தூக்கிச் செல்லும் வியாபாரி, தான் விளையாடவில்லை; ஒவ்வொரு பலூனையும் எப்படியாகிலும் விற்று விடத்தான் பாடுபடுகிறான் என்பதும் பிறகுதான் புரிந்தது.

இப்படி எனக்கு விளையாட்டாகவும், மகிழ்ச்சி யளிக்கக் கூடியனவாகவும், எவை எவை இருந்தனவோ, அவையெல்லாம் தொழிலாகவும், வேலையாகவும், வியாபாரமாகவும் பின்னர் பரிணமித்தன!

• • •

இந்தச் சிந்தனை வந்ததும் ஒரு தரம் என் படுக்கையில் புரண்டேன்.

"ஏன்னா! மணி நாலாகிறது! இன்னுமா தூக்கம்? இந்தாருங்கள், காப்பி, ஆறிப் போகிறது!" என்று சொல்லிக் கொண்டே வந்தாள் என் மனைவி.

"இப்படிச் சிரமப் பட்டு வேலை செய்த பிறகு ஒரு கப் காப்பி கொடுக்கிற கைக்கு ஒரு வைர மோதிரமாகிலும் போடத் தான் வேண்டும்!" என்று என் மனைவிக்குச் சொன்னேன்.

"ஆகா! இத்தனை நாழிகை எவ்வளவு சிரமப்பட்டு வேலை செய்து விட்டீர்கள், பாருங்கள்!" என்று கேலியாகக் கூறினாள்.


"ஏன், நான் வேலை செய்யவில்லை என்கிறாயா?" என்று கூறிக் கொண்டே என் சிந்தனையைத் தூண்டிய வாக்கியத்தை வாசித்துக் காண்பித்தேன்:—

"தூக்கம் என்பது ஒரு வேலையே அன்றி ஓய்வு அல்ல. தூங்கும் போது தளர்ந்து போன நரம்புகள் மறுபடியும் புது சக்தி பெறுகின்றன......" —'வெங்கு'

இதோ

இன்றைய புதிய

மாடல்'50 'ஓரியண்ட்'



விஞ்ஞான முறைப்படி சீர்திருத்தப் பட்டு, பல இயந்திர முன்னேற்றங்கள் அடங்கியிருப்பினும், 1950-ம் வருடத்திய ஓரியண்ட் விசிறிகள் பழைய விலைக்கே கிடைக்கின்றன.

இயந்திர கருவிகளால் முழுவதும் நிர்மாணிக்கப்பட்ட எங்களுடைய நூதன தொழிற்சாலையில் பெருவாரியான அளவில் ஓரியண்ட் விசிறிகள் தயாரிக்கப்படுவதே இதற்குக் காரணமாகும். மேலும் ஒவ்வொரு ஓரியண்ட் விசிறியும் தொழிற்சாலையிலிருந்து அனுப்பப்படுவதற்கு முன், ரகத்திற்காகவும், வேலைப்பாட்டிற்காகவும் பிரத்தியேகமாக பரீக்ஷிக்கப்படுகிறது என்பதை கவனியுங்கள்.

ஓரியண்ட் ஏ. ஸி. டி. ஸி. விசிறிகள்

தி கல்கத்தா எலக்ட்ரிகல் மான்யுபாக்சரிங் கம்பெனி லிமிடெட்
4, ஸ்டிரிங்கர் தெரு, மதராஸ்.

இதர ஆபீஸ்கள்:- கல்கத்தா, பம்பாய், டெல்லி, பாட்னா, கான்பூர்.

ஸீலிங், டேபிள் விசிறிகளும், ரெயில்வே கோச்சு விசிறிகளும், மின்சார பம்புகளும், கைப்பம்புகளும், மின்சார மோட்டார்களும் பெருவாரியான அளவில் தயாரிப்பவர்கள்.

மதராஸ் ஆபீஸ் டெலிபோன் நெ. 2858


துணிகள் வெண்மையாக சலவை செய்யப் பட்டுள்ளன...
துணிகள் பிரகாசமாக சலவை செய்யப் பட்டுள்ளன...
SUNLIGHT SOAP

இருவருக்கும் ஏற்றது....

சுகமான நீடித்த நறுமணம்
அழகிய மிருதுவான சருமம்
ஆகிய இரண்டும் அளிப்பது.



பான்பரா-ஜான்மின் ஸ்நானசோப்

JASMINE

TOILET SOAP



வெகு குளிர்ச்சியான ஸ்நானத்திற்கு அல்லது முகம், கைகளை சுத்தம் செய்வதற்கேற்ற சிறந்த பரிமள சோப்பு—சிக்கனமானது. மிகவும் சௌகரியமானது

பம்பாய் சோப் பாக்டரி, பம்பாய்
(ஸ்தாபிதம் : 1904)

ஏஜன்டுகள் : ஜெய் ஹிந்த் ஏஜன்ஸீஸ்
2/9, பத்தர் தெரு, ஜி. டி. மதராஸ்

MAS. 441

உலகப் பிரசித்தி பெற்ற ஜாம்பக் உபயோகிப்பதால்

வெட்டுக்காயம், சிராய்ப்பு, சீகோத்த புண், வேக்காடு

ஆகியவை அபூர்வமாக ஆறுகின்றன

காயங்களுக்கும் சரும வியாதிகளுக்கும் உலகப் பிரசித்தி பெற்ற கிருமி நாசனக் களிம்பான ஜாம்பக் தான் சிறந்த நிவாரணி. அதிலுள்ள தைல மருந்துப் பொருள்கள் சருமத்தால் நேரடியாக உறிஞ்சப்படுவதால் அதன் ஆற்றும் தன்மை பன்முறை துரிதமாகவும் பயன்படக்கூடியதாவும் ஆகிறது. கேடு விளைவிக்கப்பட்ட மெல்லிய தோலுக்கு ஹிதமளித்து. விஷக் கிருமி சேர்ந்து அழகிய சருமத்தை ஆற்றி. வேறெந்த கிருமி நாசினியையும் விட ஜாம்பக் தான் எளிதில் சொஸ்தப் படுத்துகிறது. மிருகக் கொழுப்பு கலப்பற்றது என்பதற்கு உத்தரவாதம்.





எப்பொழுதும் உபயோகியுங்கள்

Zam-Buk

ஆறுதலளித்துக் குணமாக்கும் கிருமிநாசனக் களிம்பு

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press *116-119*, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras

கல்கி



KALKI ஜூன் 18, 1950 4 அணா